REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 26 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

90 ANNIVERSARY 1932 - 2022

வரு. 90 இல. 96 | Tuesday 26, April, 2022 | 16பக்கங்கள் | 30/-




## அரசியலமைப்பு மறுசீரமைப்பு குழுவின் அறிக்கை கிடைத்தது

### ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான குழுவின் அறிக்கை ஜனாதிபதி செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் தெரிவித்துள்ளார்.


நேற்றைய தினம் மேற்படி குழுவின் அறிக்கை ஜனாதிபதி செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் அறிக்கை ஒன்றின் மூலம் நேற்று உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டு 06

அரிசி, கோதுமை மா, பால்மா உள்ளிட்ட

## அத்தியாவசிய உணவு பொருட்கள் இனிமேல் கட்டுப்பாட்டு விலையில்!

### நிர்ணய விலையை அறிமுகப்படுத்த தீர்மானம்



அரிசி, கோதுமை மா, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு மீண்டும் நிர்ணய விலையை அறிமுகப்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியுடன் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என கூட்டுறவு சேவை விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க 06

அண்மையில் சம்பள உயர்வு பெற்றுக்கொண்ட

## அதிபர், ஆசிரியர் போராட்டம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று!

### நியாயமற்றது என்கிறார் கல்வியமைச்சு செயலர்



சம்பள உயர்வினை பெற்றுக் கொண்ட அதிபர் மற்றும் ஆசிரியர்கள் போராட்டங்களை முன்னெடுப்பதில் நியாயமில்லை என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு 33 பில்லியன் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டதாகவும், போராட்டங்களில் ஈடுபடாது அவர்கள் மாணவர்களின் கல்வியில் கவனம் செலுத்துவதே பொருத்தமானது எனவும் 06

# இடைக்கால அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி இணக்கம்

## மகாநாயக்க தேரர்களுக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் தெரிவிப்பு

### அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர் நேற்று தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

மகாநாயக்க தேரர்களின் சார்பில் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய மெதகம தம்மானந்த தேரர் நேற்று அது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்கள் முன்வைத்துள்ள யோசனைகளில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி, நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு தீர்வு காணும் வகையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் அத்துடன் அரசியலமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மகாநாயக்க தேரர்களின் யோசனைகளுக்கிணங்க நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சனை உள்ளிட்ட ஏனைய நெருக்கடியான நிலைமைகளுக்கு தீர்வு கண்டு மக்கள் 06



யாழ்ப்பாண மாவட்டத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சங் நேற்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய நிலைமைகள் மற்றும் சமகாலப் போக்குகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

படம்: யாழ். விசேட நிருபர்




## சிங்கப்பூரில் தமிழ் மொழிக்கு திருவிழா:

### சிங்கப்பூர் அரசாங்கம் ஏற்பாடு

03

## காலம் தாழ்த்தாது உரிய தீர்வினை முன்னெடுங்கள்

### அரசிடம் ரணில் MP வலியுறுத்தல்



நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் மேலும் உக்கிரமடைந்தால் எதிர்வரும் மாதங்களில் விற்பனை நிலையங்களைக் கூட மூட வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே இனியும் காலம் தாழ்த்தாது பாராளுமன்றம் நிதி அதிகாரத்தைப் 06

## நெருக்கடிகளுக்கு தீர்வாக 19வது திருத்தம்; அமைச்சரவைக்கு பிரதமர் ஆலோசனை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் வகையில் 20வது அரசியலமைப்பு திருத்தத்தை இல்லாதொழித்து 19வது அரசியலமைப்பு திருத்தத்தில் அத்தியாவசியமானதும் மற்றும் 06

தலைவரும் செயலாளரும் விலகினால்

## SLFPயை கட்டியெழுப்ப நான் தயாராக உள்ளேன்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அதிரடி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரும், பொதுச்செயலாளரும் பதவி விலகினால் கட்சியைக் கட்டியெழுப்ப தயாரென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்துள்ளார். இது தொடர்பில் 06

நம்பிக்கையில்லா பிரேரணை;

## CWCயின் முடிவு நேற்று அறிவிப்பு

நாட்டில் தற்போதுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடியில் அரசியலமைப்பின் 20வது சீர்திருத்தத்தை இரத்து செய்யவும் ஜனாதிபதிக்கு எதிராக 06

## நோன்பு நேரங்கள்



ஸஹர் முடிவு: 04.26
நோன்பு துறக்கும் நேரம்: 06.19

## இலங்கை மக்களுக்கான சீனாவின் ஆதரவு தொடரும்

### எந்த அரசு ஆட்சியில் என்பது முக்கியமல்ல



இலங்கை மக்களுக்கு சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும், அது ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்றும் சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஸெங்ஹொங் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இவ்வாறு குறிப்பிட்டார். எந்தவொரு அரசாங்கத்தின் 06

இந்த வாரத்துக்குள்

## 7200 மெ. தொ Gas நாட்டை வந்தடையும்

### லிற்றோ நிறுவனத் தலைவர்




**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிற்கு மேலும் 7200 மெற்றிக் தொன் கேஸ் கொண்டுவரும் இரண்டு கப்பல்கள் இந்தவாரத்திற்குள் நாட்டை வந்தடையுமென லிற்றோ எரிவாயு நிறுவனம் 06

21வது திருத்தத்தை முன்வைப்பதற்கு

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தை உடனடியாக கூட்டுங்கள்

### சபாநாயகரிடம் சஜித் கோரிக்கை



அரசியலமைப்பின் 21வது திருத்தச் சட்டத்தை முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உடனடியாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டுமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியலமைப்பின் 21வது திருத்தம் என்ற தலைப்பில் 06




அதிபர்கள், ஆசிரியர் பணிப்பகிஷ்கரிப்பு:

## நாடளாவிய ரீதியில் கல்வி செயற்பாடுகள் பாதிப்பு

03



ஆசிரியர் வரவு குறைவு; மாணவர்கள் ஏமாற்றம்



03

## போத்தலில் பெற்றோல் வழங்க மறுப்பு

### ஊழியரின் பற்களை உடைத்த வாலிபர்




## மேலும் 15 பேர் தமிழகத்துக்கு அகதிகளாக சென்றடைவு

### படகுகளில் இரவிரவாக பயணம்



இலங்கையிலிருந்து மேலும் 15 பேர் அகதிகளாக நேற்று முன்தினம் இரவு தமிழகத்தை வந்தடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக, 06

அதிபர், ஆசிரியர் போராட்டம்:

## கல்வி நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்புமில்லை

### கல்வி அமைச்சர் ரமேஷ் பத்திரண

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சில அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்ட போதும் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் நேற்று வழமைபோன்று இடம்பெற்றதாக கல்வி அமைச்சர் 06

## அரசுக்கு கம்மன்பில எச்சரிக்கை விடுப்பு

### விலகுமாறு காலக்கெடு விதிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டு மக்களின் கோரிக்கைக்கு இணங்க தற்போதைய அரசாங்கம் தாமாக பதவி விலக வேண்டும் என்றும் அதற்காக ஒரு வார கால அவகாசத்தை வழங்குவதாகவும் முன்னாள் அமைச்சரும் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் 06

# ரமழானில் இறுதிப் பத்தும் இஃதிகாபும்

பொது வாழ்வின் சந்தடிகளை விட்டு தூரமாகி, அல்லாஹ்வை நெருங்கும் நோக்கில் தூய்மையான எண்ணத்துடன் இறைவழிபாடுகளில் ஈடுபடுவதற்காக பள்ளிவாசலில் தனித்திருத்தலே இஃதிகாப் என்பதாகும். இது ஒரு சுன்னாத்தான அமலாகும். குறிப்பாக ரமழான் மாத்தில் அதி கூடிய முக்கியத்துவம் செலுத்தப்பட் வேண்டிய ஒரு வணக்கமாகும்.

நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் இஸ்மாயீல் அலை அவர்களும் இஃதிகாப் என்ற வணக்க வழிபாட்டை கடைப்பிடித்து வந்த செய்தியை அல்குர்ஆன் ஸூரா பகராவில் 125ம் வசனம் கூறுகிறது. அவ்வாறே மர்யம் (அலை) அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இஃதிகாப் இருந்த வரலாற்றை ஸூரா ஆலஇம்ரான் கூறுகிறது.

எனவே இஃதிகாப் என்பது முன்னைய நபிமார்கள் காலத்தில் இருந்து தொண்டு தொட்டு வழிபட்டு வந்த ஒரு வணக்கம் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

# இஃதிகாபின் சிறப்புகள்

ரமழான் மாதத்தின் கடைசிப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருப்பார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (ஆதாரம்: புகாரி)

நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தில் இஃதிகாப் இருக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் மரணித்த பிறகு அவர்களின் மனைவிமார்கள் இஃதிகாப் இருந்தார்கள். (ஆதாரம்: புகாரி)

நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு ரமழான் மாதமும் பத்து நாட்கள் இஃதிகாப் இருப்பார்கள். மரணித்த வருடத்திலே இருபது நாட்கள் இஃதிகாப் இருந்தார்கள் என அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (ஆதாரம்: புகாரி)

(நோன்பின்) கடைசிப்பத்து வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் இரவெல்லாம் விழித்திருந்து அமல்செய்வார்கள். தன் குடும்பத்தையும் அமல் செய்வதற்காக எழுப்பிவிடுவார்கள். தன் மனைவிமார்களிலிருந்து தூரமாகி விடுவார்கள் என ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

நோன்பும் இஃதிகாபும்

நோன்பு காலத்திலும் நோன்பு அல்லாத காலத்திலும் இஃதிகாப் இருக்கலாம். நோன்பு காலத்தில் இஃதிகாப் இருப்பது மிகச் சிறந்தது. ரமழான் இறுதிப் பத்தில் இஃதிகாப் இருப்பதில் நபி (ஸல்) அவர்கள் கூடிய கரிசனை காட்டியுள்ளதோடு அதனை தூண்டியுமுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நோன்பின்றி இஃதிகாப் இருந்ததில்லை என ஆயிஷா (றழி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸ் இஃதிகாப் இருப்பதற்கு கட்டாயம் நோன்பு வைக்கவேண்டும் என்பது பொருள் அல்ல. மாறாக ரமழான் அல்லாத ஏனைய மாதங்களிலும் நோன்புடன் இஃதிகாப் இருப்பது விரும்பத்தக்கது என்பதயே அது உணர்த்துகிறது. எனவே ரமழான் அல்லாத மாதங்களில் இஃதிகாப் இருப்பவர் விரும்பினால் நோன்பு பிடிக்கலாம் விரும்பினால் நோன்பின்றி இஃதிகாப் இருக்கலாம்.



**இஃதிகாப் ஏன்:**

மனித உள்ளம் அல்லாஹ்வை நோக்கி பயணிப்பது ரப்பானிய பயணமாகும். அந்த ரப்பானிய பயணத்தை மேற்கொண்டு இறை தொடர்பை அதிகரித்து, உள்ளத்தை சீர் செய்து கொள்வதே இஃதிகாபின் மிகப் பிரதான நோக்கமாகும்.

அவ்வாறே இஃதிகாப் இருப்பதால் இன்னும பல உயர் இலக்குகளை அடையலாம்.

★ புனித லைலதுல் கத்ர் இரவை அடைந்து கொள்ளுதல்

★ மக்களை விட்டும் ஒதுங்கி தனித்திருந்து அல்லாஹ்வை நெருங்குதல்

★ வணக்க வழிபாடுகளில் மாத்திரம் முற்றுமுழுதாக ஈடுபடல்

★ ஆசைகளை விட்டு தூரமாகி நோன்பைப் பாதுகாத்தல்

★ உலக விவகாரங்களில் ஈடுபடுவதை குறைத்துக் கொண்டு பற்றற்று வாழ பழுகுதல்

**இஃதிகாப் இருக்கும் போது:**

இஃதிகாப் இருப்பதிலிருந்து பூரண பயன் அடைந்து கொள்ள விரும்பும் ஒருவர் வீணான பேச்சுக்களை விட்டும் தவிர்ந்து கொண்டு தொழுகை. குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல் போன்ற இபாதத்களிலேயே கழிக்கவேண்டும். தனியாக இஃதிகாப் இருப்பது போலவே கூட்டாகவும் பலர் சேர்ந்து இஃதிகாப் இருக்கலாம். ஆனால் கூடிக்கதைத்து அதன் பலனை இழந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குழுக்களாக இருந்து குர்ஆன் விளக்கங்களை, சன்மார்க்க சட்டங்களை, ஸீராவை மற்றும் பயனுள்ள புத்தகங்களையும் படிக்க முடியும்.

**இஃதிகாப் இருப்பவரை பாதிக்காத செயற்பாடுகள்**

1) மனைவியை வழியனுப்புவதற்காக வெளியேறுதல். நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்கும் சமயத்தில் தேவையின் நிமித்தம் நபியவர்களிடம் வந்த அவர்களது மனைவி ஸபிய்யா (றழி) அவர்களை வீடுவரை சென்று வழியனுப்பினார்கள்.

2) முடி களைதல், நகம் வெட்டுதல், தலை வாறுதல், இது போன்ற சுத்தம் பேணும் விடயங்களில் ஈடுபடலாம்.

3) மலம் ஜலம் போன்ற அவசியத் தேவைக்காக பள்ளியை விட்டும் வெளியேறலாம்.

4) உண்ணுதல், பருகுதல், தூங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

5) ஜும்மா தொழுகைக்காக, நோயாளியை தரிசிப்பதற்காக, ஜனாஸாவில் கலந்து கொள்வதற்காக வெளியேறுவதை அலி (றழி) அவர்கள் விரும்பத்தக்கதாக கருதியுள்ளார்கள்.

இன்னும் சில ஸஹாபாக்கள் இஃதிகாபின் போது சமூக நலப் பணிகளில் கூட ஈடுபட்டுள்ளார்கள். உண்மையில் இஸ்லாத்தில் துறவரம் என்பது கிடையாது. இஃதிகாப் என்ற பெயரில் சமூக உறவை முற்று முழுதாக அறுத்துவிடக் கூடாது என்பதையே இது காட்டுகின்றது.

**இஃதிகாபின் விளைவு**

இஃதிகாப் தேவையற்ற சகவாசம், அதிகமாக தூங்குதல், நாவினால் ஏற்படும் பாவங்களிலிருந்து பாதுகாப்பு வழங்குவதுடன் இறை நினைவோடு வாழ்வதற்கும் அல்குஆன் ஓதுவதற்கும் அல்லாஹ்வை பற்றி சிந்திப்பதற்கும் அதிகமாக தொழுவதற்கும் இன்னும் பல வணக்கவழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் துணை செய்கின்றது.

அஷ்ஷெய்க்
மொஹமட் பகீஹுத்தீன்

# சுவதேஷி வர்த்தக நாம தயாரிப்புகளுக்கு VEGETARIAN SOCIETYஇன் அங்கீகாரம்

சுவதேஷி வர்த்தக நாமதயாரிப்புகள் சுவதேஷி கோம்பா, ராணிசந்தனம் மற்றும் சுவதேஷி கோம்பா பேபி சவர்க்காரம் ஆகியனVEGETARIAN SOCIETYஇன் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளன




80 ஆண்டுகளுக்கும் மேலாக மூலிகைகளைக் கொண்ட தனிப்பட்ட பராமரிப்புப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையில் இலங்கையின் மிகப்பெரிய நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்ற சுவதேஷி (Swadeshi Industrial Works PLC)நிறுவனத்தின் வர்த்தக நாம உற்பத்திகளான குழந்தைகள் முதல் வளர்ந்தவர்களுக்கான சவர்க்கார உற்பத்திவகைகள், பொடிவோஷ் மற்றும் ஷவர்ஜெல் உற்பத்திவகைகள் Vegetarian Society இன் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. ஐக்கிய இராச்சியத்தின் மதிப்புமிக்க Vegetarian Society ஆல் 100% கம்பனியின் தயாரிப்புக்கள்Vegetarian என்ற அதிகாரப்பூர்வ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக முத்திரையைக் காண்பிப்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த Swadeshi Industrial Works PLCநிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சூலோதராசமரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "சுவதேஷி தனது தயாரிப்புகளுக்கு மதிப்பு மிக்கVegetarianSocietyAccreditationஅங்கீகாரத்தைப்பெறுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. ஒரு நிறுவனமாக, சுற்றுச்சூழலுக்கும் அனைத்து உயிரினங்களுக்கும் நன்மைபயக்கும் தெரிவுகளை மேற்கொள்வதில் நாங்கள் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்களின் அனைத்து சருமப்பராமரிப்பு மற்றும் சுத்தப்படுத்தல் தயாரிப்புகளும் நெறிமுறை சார்ந்த மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதுடன், விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்காதவை. இதற்காக விலங்குகளை பரிசோதிப்பதையும் நாங்கள் வெறுக்கிறோம், என்று குறிப்பிட்டார்.

# தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com



இலங்கையின் முன்னணி கோழிப்பண்ணை உற்பத்தி நிறுவனமான Crysbro அண்மையில் 40க்கும் மேற்பட்ட முகவர்களின் பங்கேற்புடன் கிறிஸ்ப்ரோ முகவர் மாநாடு 2022 இனை வெற்றிகரமாக நடத்தியது. இந்த நிகழ்வின் போது கடந்த 50 ஆண்டுகள் காலமாக Crysbro வின் தொடர்ச்சியான வெற்றிக்கு முகவர்கள் வழங்கிய சிறப்பான பங்களிப்புக்காக கௌரவிக்கப்பட்டனர். முகவர் ஒருவருக்கு Crysbro தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளரான மொஹமட் இம்தியாஸ் மற்றும் குழும சந்தைப்படுத்தல் முகாமையாளர் அமோரிஸ் செல்லார் ஆகியோர் பரிசினை வழங்குவதை காணலாம்.



இணையவழி ஊடாக விண்ணப்பிக்கக் கூடிய தனிநபர் கடன்களுக்கு கொமர்ஷல் வங்கி வழங்கியுள்ள வசதிகள் Asian FinTech Academy (AFTA).,d; 'Best Frictionless Credit Evaluation Initiative' ('சிறந்த உராய்வற்ற கடன் மதிப்பீட்டு முயற்சி') விருதை வென்றுள்ளது. கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற 'ஆசிய டிஜிட்டல் நிதி அமர்வு மற்றும் விருது' நிகழ்வில் கொமர்ஷல் வங்கிக்கு இந்த விருது வழங்கப்பட்டது. கொம்பேங் டிஜிட்டலின் முன்னேற்றங்களுக்கான அங்கீகாரமாக இந்த விருது வழங்கப்பட்டது. கொமர்ஷல் வங்கிப் பிரதிநிதிகள்AFTA விருதைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# Lanka Pay Technnovation Awards 2022 விருது வென்ற HNB

HNB PLC அண்மையில் Lanka Pay Technnovation Awards 2022 இல் நான்கு விருதுகளைப் வென்றுள்ளது.

கொழும்பு ShangriLaவில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. இந்த வெற்றி குறித்து கருத்து தெரிவித்த HNB பிரதிப் பொதுமுகாமையாளர் சஞ்சய் விஜேமான்ன, தொற்றுநோயிலிருந்து, வாடிக்கையாளர்களுக்கு பணமில்லா மற்றும் தொடுகை இல்லாத சூழலை வழங்க டிஜிட்டல் முறையில் அதிகாரம் அளிப்பதில் நாங்கள் அயராது உழைத்து வருகிறோம். நாடு முழுவதும் பணம் செலுத்தும் தீர்வுகளின் டிஜிட்டல் விரிவாக்கத்தை ஆதரித்து ஊக்குவித்த குறிப்பிடத்தக்க அமைப்பான LankaPay, டிஜிட்டல் ரீதியில் வலுவூட்டப்பட்ட தேசத்தைக் உருவாக்குவதற்கான HNBஇன் நோக்கத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது என்றார்.



# SLT சொத்து விற்பனை பற்றிய அறிக்கை தவறானது

SLTMOBITEL நிர்வாகம், ஸ்ரீ லங்கா டெலிகொம் (SLT)யின்சொத்துக்கள் விற்பனை செய்யப்படலாம் என்ற சமீபத்திய செய்திகள் மற்றும் அறிக்கைகளை திட்டவட்டமாக மறுக்கிறது. இந்த அறிக்கைகள், SLT பணிப்பாளர் சபையிடமிருந்து மற்றும் நிறுவனத்தின் 49.5% பங்குகளை கைவசம் கொண்டுள்ள திறைசேரியின் செயலாளரிடமிருந்து, தெளிவுபடுத்தப்படவில்லை என்றும் நிறுவனம் கூறுகிறது.

SLT தனது பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இத்தகைய முடிவு பரிசீலிக்கப் படவில்லை என்றும், நிறுவனத்தின் தற்போதைய செயல்பாடுகளை அப்படியே தொடர உறுதி பூண்டுள்ளது என்றும் உறுதியளிக்கிறது

# கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்திற்கான உரிமைக்கு MAS ஹோல்டிங் ஆதரவு

அமைதிவழி ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றுவதற்கும், கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்திற்கும் இலங்கைப் பிரஜைகள் கொண்டுள்ள உரிமைகளை ஆதரிப்பதாக MAS ஹோல்டிங் தெரிவித்துள்ளது.

நிகழும் சம்பவங்களுக்கு மத்தியில், சமகாலசமூக, பொருளாதார நெருக்கடியை அமைதியாகவும், நிலைபேறான வகையிலும் தீர்ப்பதற்கு துரிதமானதும், தீர்க்கமானதுமான நடவடிக்கையின் அவசியத்தை MAS மீளவலியுறுத்துகிறது. ஒருபொறுப்புள்ள ஸ்தாபனம் என்ற ரீதியில், மாற்றத்திற்கும், நல்லாட்சிக்காகவும் விடுக்கப்படும் அழைப்பை நிபந்தனையின்றி ஆதரிப்பதோடு, சட்டத்தையும், அரசியல் யாப்பிற்கு உட்பட்ட நடைமுறைகளையும் மதிப்பதுடன், மக்களின் குரலுக்கு கண்ணியம் கொடுத்து, அதற்கமைய நடவடிக்களடுக்குமாறு தேசத்தின் தலைவர்களிடம் அக்கறையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையின் தனியார் துறையில் ஆகக்கூடுதலானவர்களை வேலைக்கு அமர்த்திய, ஆகக்கூடுதலாக ஏற்றமதிசெய்யும் நிறுவனமென்ற ரீதியில், நாட்டின் பொருளாதார ஸ்திரநிலையைப் பேணுவதில் எமக்குள்ள வகிபாகத்தையும் MAS நுண்மையாக புரிந்து கொண்டுள்ளது. இந்தவிடயத்தில், எமதுவாடிக்கையாளர்களுக்கான கடப்பாடுகளை தங்குதடையின்றி நிறைவேற்றி, எமது சகாக்கள் 92,000 பேரினதும், அவர்களது குடும்பத்தவர்களதும், நாட்டினதும் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதன் மீதுகவனம் செலுத்துவது முக்கியமானது.

எமதுவரலாற்றின் மிகவும் கொந்தளிப்பான, முக்கியமான தருணங்களில், ஆடையுற்பத்தித் துறையானது இலங்கைப் பொருளாதாரத்திற்கு உயிரூட்டுவதாகத் திகழ்ந்துள்ளது. நாம் ஒன்றாக இருந்து, இந்தநெருக்கடியில் இருந்து மீண்டெழுந்து, எமது நாட்டை மென்மேலும் சிறப்பானதாகக் கட்டியெழுப்பக் கூடிய மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் என்றநம்பிக்கை எமக்குத் தொடர்ந்தும் உண்டு என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 26 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

25 முதல் 29 வரை

| | |
|---|---|
| சுபஹ் - | 04.41 |
| லுஹர் - | 12.10 |
| அஸர் - | 03.23 |
| மஃரிப் - | 06.19 |
| இஷா - | 07.30 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 13

ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: மரண யோகம்

திதி: ஏகாதசி

இராசி பலன்கள்



இலங்கையில், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி வத்திக்கானில் புனித ஆராதனை நடைபெற்றது. அதன் பின்னர், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண பாதிக்கப்பட்டுள்ள அனைத்து இலங்கையர்களுக்காகவும் புனித ஆராதனை நடைபெற்றது.

05 நாட்களுக்கு பின் ஆரம்பித்த

## பங்குச் சந்தை செயற்பாடு முழுவதுமாக முடங்கியது

கொழும்பு பங்குச் சந்தையின் நாளாந்த பங்குச் சந்தை பரிவர்த்தனை நேற்று முழுவதுமாக இடைநிறுத்தப் பட்டது.

பங்குச் சந்தையின் நாளாந்த பங்குச் சந்தை பரிவர்த்தனை நேற்று முற்பகல் 10.31 மணிக்கு நிறுத்தி வைக்கப் பட்டு மீண்டும் முற்பகல் 11.01 மணிக்கு ஆரம்பிக்கப்பட் டது.

இதனையடுத்து மீண்டும் கொழும்பு பங்குச் சந்தையில் S&P SL20 சுட்டெண் 10%ஐ விட குறைந்ததன் காரணமாக பங்குச் சந்தை பரிவர்த்தனை நடவடிக்கைகள் மீண்டும் இடைநிறுத்தப்பட்டன.

06




## லைலதுல் கத்ரின் அடையாளங்கள்

ரமழான் மாதத்தின் ஒற்றைப் படையான ஒரு நாளில் லைலதுல் கதர் இரவு அமைந்திருப்பதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது 21, 23, 25, 27, 29 ஆகிய தினங்களின் ஏதாவது ஒரு நாளின் இரவில் இது அமைந்திருக்கும் என்ற கருத்துப்பட அன்னார் கூறியுள்ளார்கள். அந்த இரவு தொடர்பில் அல் குர்ஆன், 'அதில் வானவர்களும், ஆன்மாவும் (ஜிப்ரிலும்) தம் இறைவனின் கட்டளைப் படி (நடைபெறவேண்டிய) சகல காரி யங்களுடன் இறங்குகின்றனர். சாந்தி (நிலவியிருக்கும்) அது விடியற்காலை உதயமாகும்வரை இருக்கும்.' (97:15) என்று கூறிக்கொண்டிருக்கின்றது.

ஆயிரம் மாதங்களை விடவும் பெறு மதியான இவ்விரவில் வானவர்கள் பூமிக்கு இறங்குகின்றனர். இறைவனிட மிருந்து சாந்தியையும் இறையருளை யும் கொண்டு வருகின்றனர். அந்தச் சாந்தியையும், நல்லருளையும், இறை வனின் நல்லடியார்களுக்குச் சேர்க்கின் றனர் என்பது தெளிவாகிறது.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் இவ் விரவுக்குரிய அடையாளங்களையும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டு வைக் கத்தவறவில்லை.

அந்த வகையில் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், மகத்துவம் மிக்க இவ்விரவின் அடையாளமாவது, அந்த இரவு (ஷைத்தானுடைய அட்டகாசங் கள், சேட்டைகள் ஆகியவற்றிலிருந்து) நீங்கியிருக்கும், (அளவுக்கதிகமான வானவர்களின் வருகையால்) ஒளிர்ந்து கொண்டிருக்கும். (அல்லாஹ்வின் புறத் திலிருந்து சாந்தி தொடர்ந்து இறங்கிக் கொண்டிருப்பதால்) அமைதியாகவும், (காற்று இல்லாமல்) நிதானமாகவும் இருக்கும். அவ்விரவில் சந்திரன் (மேக மூட்டம் இல்லாத காரணமாக) பிரகா சித்துக் கொண்டிருக்கும். குளிரும் இருக்காது வெப்பமும் இருக்காது. நட் சத்திரங்களோ பொழுது விடியும் வரை ஷைத்தான்கள் மீது எறியப்பட மாட்டாது. மேலும் அன்றைய பொழுது புலர்ந்து சூரியன் உதிக்கும் போது அது தட்டை யானதாக இருக்கும். அதில் வெப்பம் இருக்காது. அன்று அச்சூரியனோடு ஷைத்தான் வெளியேறுவது (அவ னுக்கு) தடுக்கப்பட்டுள்ளது.' என்று கூறி யுள்ளார்கள். (ஆதாரம்: அஹ்மத், அல் பைஹகீ)

ஆகவே அல்லாஹ்வின் அன்பை யும் அருளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த மகத்துவம் மிக்க இரவை அடைந்து கொள்ளவும் உச்சள வில் பயன்படுத்திடவும் முயற்சிப்போம்.

மர்லின் மரிக்கார் ...

கனியவளங்கள் தொடர்பான

## தேசிய கொள்கையை வகுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக விசனம்



இலங்கையின் கனியவளங்கள் தொடர்பான தேசிய கொள்கை யைத் வகுப்பதில் காலதாமதம் தொடர்பில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) கவனம் செலுத்தியது.

புவிச் சரிதவியல் அளவை சுரங் கப் பணியகத்தின் 2018 , 2019 நிதியாண்டுக்கான கணக்காய்வா ளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் குறித்த பணியகத்தின் தற்போதைய செயற்திறன் தொடர்பில் ஆராயும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) சரித ஹேரத் தலை மையில் அரசாங்க பொறுப்பு முயற் சிகள் பற்றிய குழு கூடியபோதே இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

கனியவளங்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்றைத் தயா ரிப்பதற்கான அனுமதி 2017ஆம் ஆண்டு அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளபோதும், இதுவரை தேசிய கொள்கை தயாரிக் கப்படாமை கவலைக்குரியது என கோப் குழுவின் தலைவர் பாராளு மன்ற உறுப்பினர் சரித ஹேரத் சுட் டிக்காட்டினார். இதற்கமைய கால அட்டவணையொன்றை அமைத்து ஆறு மாத காலத்துக்குள் தேசிய கொள்கையைத் தயாரிக்க முடியுமா என கோப்குழுவின் தலைவர் கேள் வியெழுப்பினார். ஐந்து மாதங் களுக்குள் இதனைத் தயாரிக்க முடியும் என இங்கு வருகை தந்தி ருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் கருத் துத் தெரிவித்த கோப் குழுவின் தலைவர், கனியவளங்கள் தொடர் பில் தேசிய கொள்கையொன்றைத் தயாரித்திருந்தால் நாட்டில் அந்நியச் செலாவணிப் பிரச்சினை காணப்ப டும் சூழலில் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வ தற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும் என்றார்.

## போத்தலில் பெற்றோல் வழங்க மறுத்ததால் விபரீதம்

*ஊழியரின் பற்களை உடைத்த வாலிபர்*

போத்தல் ஒன்றில் பெற்றோல் வழங்க மறுத்தார் எனத் தெரிவித்து எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு அவரது மூன்று பற்கள் உடைக்கப்பட்ட சம்பவம் கண்டியில் நேற்றுமுன்தினம் (24) இடம்பெற்றுள்ளது.

தலாத்துஓயா மாரஸ்ஸன பலநோக் குக் கூட்டுறவு சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள்

06

தனிநபர் பிரேரணையை விட

## 21 ஆவது திருத்தத்தை அமைச்சரவை ஊடாகவே துரிதமாக முன்னெடுக்கலாம்

*எதிர்க்கட்சித் தலைவருக்கு சபாநாயகர் பதில்*

**(ஷம்ஸ் பாஹிம்)**



தனிநபர் பிரேரணையை விட அமைச்சரவை ஊடாக மேற்கொள்வதே 21 ஆவது திருத்தத்தை முன்னெடுப்பதற்கான துரி தமான வழியென சபாநாய கர் மஹிந்த யாப்பா அபே வர்தன தெரிவித்துள்ளார்.

இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உடனடியாக மேற்கொள்ள வேண்டிய விடயம் என்ற போதும் அரசியலமைப்பை மீறக்கூடிய எதனையும் தனக்கு மேற்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பியுள்ள கடிதத்திற்கு பதில் அனுப்பியுள்ள அவர்,

21 ஆவது திருத்த யோசனை தொடர்பில் நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. நாட்டுமக்களின் பிரதான கோரிக்கையான அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, அரசாங்கம் மற்றும் விஜேதாஸ ராஜபக்ஷ உள் ளிட்ட 40 எம்.பிகள் முன் வைத்த யோசனை தொடர் பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் ஆராயப்பட் டதுடன் அடுத்த கட்ட நட வடிக்கையை எடுக்க முடிவு செய்யப் பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் சட்டமா அதிபர் உள்ளிட்ட நீதிபதிகள் குழுவும் பங்கேற்றது. என்னிடம் கைய ளிக்கப்பட்ட 21 ஆவது திருத்த யோசனையை அதே தினம் பிரதம ருக்கும் அமைச்சரவை செயலாளருக் கும் சட்டமா அதிபருக்கும் அனுப் பிவைத்தேன். குறித்த யோசனை நேற்று (25) நடைபெற்ற அமைச்ச ரவை கூட்டத்தில் ஆராயப்பட இருந் ததாக அறிந்தேன்.

அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய அதனை சட்டமா அதிப ருக்கு முன்வைப்பது அமைச்சரவை செயலாளரின் பொறுப்பாகும். தற் பொழுது அமுலிலுள்ள நாட்டின் சட் டத்திற்கு அமைய இந்த நடைமுறை தான் வேகமாக மேற்கொள்ளக் கூடிய முன்னெடுப்பாகும்.

தனிநபர் பிரேரணையாக முன் வைக்கும் செயற்பாடு காலம் பிடிக் கும் என்றும் சபாநாயகர் தனது கடிதத் தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உடனடியாக மேற்கொள்ள வேண்டிய விடயம் என்ற போதும் அரசியலமைப்பை மீறக்கூடிய எத னையும் எனக்கு மேற்கொள்ள முடியாது.

ஏப்ரல் 28 ஆம் திகதி மற்றொரு கட்சித் தலைவர் கூட்டம் நடைபெற உள்ளது என்பதையும் நினைவுபடுத் துகிறேன் எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.



இலங்கை நிர்வாக சேவை சங்க அதிகாரிகளுக்கும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற் றது. இதன் போது தற்போதைய நெருக்கடி நிலைக்கான தீர்வு யோசனையொன்றை சங் கத்தின் தலைவர் ரோஹன த சில்வா அமைச்சரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

வெளிநாடு செல்ல முடியாது

## கப்ராலுக்கு விதித்த தடையுத்தரவு நீடிப்பு

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப் ராலுக்கு வெளிநாடு செல்ல விதிக் கப்பட்ட தடை உத்தரவு நீடிக்கப் பட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும், ஜூன் 7 ஆம்

06

## பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை தொடரும் சாத்தியம்

நாட்டின் பெரும்பாலான பிர தேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்திலும் திரு கோணமலை மாவட்டத்திலும் கரையோரப் பிரதேசங்களில் பல இடங்களில் காலை வேளையி லும் மழை பெய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

தென், மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமத்திய மாகா ணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க் கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும்

06

அதிபர்கள், ஆசிரியர் பணிப்பகிஷ்கரிப்பு

## நாடளாவிய ரீதியில் கல்வி செயற்பாடுகள் பாதிப்பு

*ஆசிரியர் வரவு குறைவு; மாணவர்கள் ஏமாற்றம்*

நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுத்துவரும் பணி பகிஷ்கரிப்பு போராட்டம் கார ணமாக மாணவர்களின் கல்வி நட வடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட் டுள்ளன.

நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடி தீர்வைக் கோரி, அரச பாடசாலைக ளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர் கள், நேற்று (25) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக பாடசாலைக ளின் கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

இலங்கை ஆசிரியர் சங்கம், ஒன்றி ணைந்த அதிபர்கள் சங்கம், ஆசிரிய ஆலோசகர்கள் சங்கம் உட்பட பல ஆசிரியர் சங்கங்கள் இணைந்து விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன் காரணமாக ஆசிரியர்கள் வரவு குறைவாக இருந்த காரணத்தி னால் மாணவர்கள் திரும்பிச் சென்ற தையும் காணமுடிந்ததுடன் சில பாட சாலைகளில் உயர்தரப் பிரிவுகளின் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டதையும் காணமுடிந்தது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய

06

## சிங்கப்பூரில் தமிழ் மொழிக்கு திருவிழா

*சிங்கப்பூர் அரசாங்கம் ஏற்பாடு*

சிங்கப்பூரின் அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியை கொண்டாடவும், ஊக் குவிக்கவும் ஒரு மாத திருவிழா வுக்கு அந்நாட்டு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரில் சீன மொழி, மலாய், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகியவை அதிகாரபூர்வ மொழிக ளாக உள்ளன. பாடசாலைகளில் தாய்மொழிப் பாடம் என இந்த மொழிகள் பயிற்றுவிக்கப்படுகின் றன. பாராளுமன்றிலும் பயன்பாட் டில் உள்ளது. அந்நாட்டு நாணயத் தாள்களிலும் இந்த நான்கு மொழி களும் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில் தமிழ் மொழியை அடுத்த தலைமுறையினருக்கு பயிற்றுவிக்கவும், மொழியை ஊக் குவிக்கும் விதமாகவும், ஒரு மாத தமிழ் மொழி திருவிழாவுக்கு அந் நாட்டு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஒரு மாத காலமும், தமிழின் தொன்மையை பறைசாற் றும் நாடகங்கள், இசை மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும், 'ஒன்லைன்' வாயிலாக நடத்தப்படுகின்றன.

## மகாசங்கத்தினரின் கூட்டறிக்கையில் மோசடியாக கையொப்பம் இணைப்பு

தற்போதைய நெருக்கடி நிலை குறித்து மகாசங்கத்தினர் அண் மையில் வெளியிட்ட கூட்டறிக் கையில் அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க தேரரின் கையொப்பம் மோசடியாக இணைக்கப்பட்டுள்ள தாக அம்பலமாகியுள்ளது. அவரது கையொப்பத்திற்கு பதிலாக ஸ்கேன் செய்யப்பட்ட கையொப்பம் பயன்ப டுத்தப்பட்டுள்ளதாக மகா விகாரை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நெருக்கடி நிலை குறித்து மல்வத்து மற்றும் அஸ்கிரிய தேரர்களுடன் கலந்துரையாடுவதற் காக கொழும்பில் உள்ள இரண்டு விகாரைகளுக்கும் விஜயம் செய்த பிக்குகள் அரசாங்கத்திற்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நடத்து வதற்கு முதலில் திட்டமிட்டிருந்த போதிலும் அதற்கு அனுமதி வழங்க வில்லை.

அதன்படி, அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகளுடன் கலந் துரையாடி அறிக்கை தயாரிக்கப்பட் டதோடு அந்த அறிக்கை பின்னர் மாற்றப்பட்டதாக தெரியவருகிறது. எனினும், மல்வத்தை மாநாயக்க தேரரின் கையொப்பம் பெற்று, அஸ் கிரிய மகா பீடாதிபதியின் அனும தியின்றி அந்தக் கடிதத்தைக் காண் பிக்காது ஸ்கேன் செய்யப்பட்ட கையொப்பம் பயன்படுத்தப்பட்டுள் ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பில் அஸ்கிரிய தேரர் கவலை தெரிவித்ததையடுத்து, தேர ரிடம் மன்னிப்பு கோரியுள்ளதாக மனுவில் கையெழுத்திட்ட பிக்குகள் தெரிவித்துள்ளனர்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 24


### குறள் தரும் சிந்தனை



குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு

சோம்பேறித்தனமானவர்களின் வாழ்க்கையில் குற்றங்களும் பெருகி விடும்; குடும்பப் பெருமையும் சீரழிந்து போய் விடும்.

## சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கை தரும் அறிவிப்பு

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளில் ஓரங்கமாக சர்வதேச நாணய நிதியத்தை அரசாங்கம் நாடியுள்ளது. இந்நிதியம் பெரும் எதிர்பார்ப்புடன் அணுகப்பட்டுள்ள சூழலில் அது அளித்துள்ள வாக்குறுதி, இந்நாட்டுக்கு புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அளிக்கக் கூடியதாக உள்ளது.

அந்நிதியத்தின் அறிவிப்பில், 'இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவும் உதவத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இது பெரிதும் வரவேற்கத்தக்க அறிவிப்பாகும்.

இதேவேளை, நாடு முகம் கொடுத்துள்ள இப்பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்துவதற்கு உதவி ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் அந்நிதியத்தின் தலைமையகத்தில் அதன் உயரதிகாரிகளுடன் கடந்த 18 ஆம் திகதி முதல் ஐந்து நாட்கள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தனர். இப்பேச்சுவார்த்தை குறித்து 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடான செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி, 'சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடந்துள்ளது' என்றுள்ளார்.

நிதியமைச்சரினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் அறிவிப்புக்கள் இலங்கை மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன. தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீட்சி பெற வேண்டும் என்பதுதான் அனைத்து மக்களதும் ஒரே எதிர்பார்ப்பாக இருந்து கொண்டிருக்கின்றது.

ஆனாலும் நாடு இவ்வாறான தீவிர பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட முன்னர் சர்வதேச நாணய நிதியத்தை நாடி இருக்க வேண்டும் என்பது தான் பொருளாதார நிபுணர்கள் பலரின் அபிப்பிராயமாகும். அதுவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்தும் ஆகும்.

அதாவது கடந்த 18 ஆம் திகதி தமக்கு முன்னர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, 'சர்வதேச நாணயத்தை இதற்கு முன்னர் நாடி இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அது முற்றிலும் உண்மையானதே. அவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தை ஏற்கனவே நாடி இருந்திருந்தால் இவ்வாறான தீவிர பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்திருக்காது என்பதும் பலரது கருத்தாக உள்ளது.

இருந்த போதிலும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகளான விமல் வீரவன்ச எம்.பி தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கட்சியும், உதய கம்மன்பில எம்.பி தலைமையிலான பிவித்துஹெல உருமய கட்சியும், வாசுதேவ நாணயக்கார எம்.பி தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியும் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைக் கடுமையாக எதிர்த்து வந்தன.

இதன் விளைவாக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தாமதமடைந்து வந்த அதேவேளையில், பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் தீவிர நிலையை அடைந்தது. எனினும் இந்நிதியத்தின் உதவி, ஒத்துழைப்புகளைப் பெறுவதை கடுமையாக எதிர்த்து வந்த இக்கட்சிகள் பொருளாதார வீழ்ச்சியினால் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு மத்தியில் அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் நிலைப்பாட்டை எடுத்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி ஒத்துழைப்பை நாடக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்து வந்த இக்கட்சிகள் நாட்டில் பொருளாதார வீழ்ச்சி தீவிரமடைந்துள்ள சூழலில், அரசாங்கத்தில் இருந்து விலகி இருப்பதானது, இவ்வாறான நெருக்கடி நிலையை ஏற்படுத்துவதற்கு இக்கட்சிகள் திட்டமிட்டு செயற்பட்டனவா? என்ற ஐயமும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தைத் தாமதமாகி அணுகியுள்ள போதிலும், 'இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண உதவ தயார்' எனக் குறிப்பிட்டுள்ள அந்நிதியம், 'அது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட உள்ளன' என்றும் குறிப்பிட்டுள்ளது. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

ஆகவே நாடு எதிர்கொண்டுள்ள இப்பொருளாதார நெருக்கடிக்கு விரைவாகவும் வேகமாகவும் தீர்வு தேடுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஒத்துழைப்புகள் நிச்சயமாகப் பக்கபலமாக அமையும். அதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வது அவசியம். அதன் ஊடாக நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்கவும் மக்கள் முகம் கொடுத்திருக்கும் நெருக்கடிகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் வழி கிடைக்கப் பெறும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையிலிருந்து வருகின்ற தமிழ் அகதிகளை சட்டவிரோத குடியேறிகளாக நோக்க வேண்டாம்!

## மனிதநேய அடிப்படையில் கண்ணியமாக நடத்துமாறு கோருகிறார் டொக்டர் ராமதாஸ்



பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு வருபவர்களை அகதிகளாக இந்திய மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் நேற்று வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு வாழ வழியில்லாத தமிழ் மக்கள் சிலர் வாழ்வாதாரம் தேடி தமிழ்நாட்டுக்கு வருகின்றனர். ஆனால் அவர்கள் அகதிகளாக இந்திய மத்திய அரசால் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவர்களுக்கு உணவு, நிதி உள்ளிட்ட உதவிகளை சட்டபூர்வமாக தமிழக அரசால் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது. இந்தியா பல்வேறு கட்டங்களாக இலங்கைக்கு உணவு மற்றும் எரிபொருள்களை கடனுக்கு வழங்கி வருகின்ற போதிலும், அங்கு நிலைமை சீரடையவில்லை. இலங்கையில் விலைவாசி அதிகரித்து விட்ட நிலையில், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் சிரமம் அடைகின்றனர். இலங்கையைச் சேர்ந்த தமிழ் மக்களில் சிலர் தங்களின் உடமைகளை விட்டு விட்டோ, விற்று விட்டோ தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து இன்று காலை 15 தமிழர்கள் தனுஷ்கோடிக்கு வந்து சேர்ந்துள்ளனர். அவர்களையும் சேர்த்து தமிழகத்திற்கு கடந்த சில வாரங்களில் தஞ்சம் தேடி வந்தவர்களின் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 4 நாட்களில் மட்டும் மொத்தம் 33 பேர் வந்துள்ளனர். அவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் உணவு உள்ளிட்ட உதவிகள் வழங்கப்படும் போதிலும், அவர்கள் கைதிகளைப் போலவே நடத்தப்படுகின்றனர். தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளின் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் மாதம் ரூ.1,500 நிதியுதவி உள்ளிட்ட பல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றை இப்போது தஞ்சம் தேடி வருவோருக்கும் வழங்க வேண்டும். தஞ்சம் தேடி வருபவர்கள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

ஆனால், தஞ்சம் தேடி வருவோர் அனைவரும் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர்களாகவே கருதப்படுவதால், அவர்களுக்கு சட்டபூர்வமாக எந்த உதவியும் வழங்க முடியாது. இலங்கையில் போர் இடம்பெற்ற போது, தமிழ்நாட்டுக்கு தப்பி வந்தவர்கள் அனைவரும் பன்னாட்டு சட்டங்கள் மற்றும் இந்தியா கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின்படி அகதிகளாக அறிவிக்கப்பட்டனர். அதனடிப்படையில் அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் தஞ்சம் தேடி வருவோரை அகதிகளாக அறிவிக்க பன்னாட்டு விதிகள் இல்லை.

அவர்களுக்கு உணவு, நிதி உள்ளிட்ட உதவிகளை வழங்க தமிழக அரசு தயாராக இருந்தாலும் கூட, அவர்கள் அகதிகளாக அறிவிக்கப்படவில்லை என்பதால், அவர்களுக்கு எந்த உதவிகளையும் வழங்க முடியாது. அதே நேரத்தில், அவர்களை அகதிகளாக அறிவிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. இலங்கையில் போர் முடிவடைந்த பிறகு தமிழ்நாட்டிற்கு தஞ்சம் தேடி வந்தவர்களுக்கு அகதிகள் என்ற தகுதியை மத்திய அரசு வழங்கவில்லை. இப்போது தமிழ்நாட்டிற்கு வந்தவர்களை அகதிகளாக அறிவிக்க வேண்டும் என்று கடந்த 1ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். ஆனால், அதன் பின்னர் 25 நாட்கள் ஆகியும் கூட அதன் மீது மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது.

இலங்கையிலிருந்து தஞ்சம் தேடி தமிழகம் வந்துள்ள 75 பேரையும் தமிழக காவல்துறையின் பல்வேறு பிரிவுகளும், மத்திய உளவுத்துறையும் விசாரித்துள்ளன. அந்த விசாரணையில் அவர்கள் அனைவரும் இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தான் தஞ்சம் தேடி இந்தியாவுக்கு வந்துள்ளனர் என்பதும், அவர்கள் இந்தியாவுக்குள் வந்ததன் பின்னணியில் வேறு தீய நோக்கங்கள் எதுவும் இல்லை என்பது தெளிவாக தெரியவந்துள்ளது. இவ்வளவுக்குப் பிறகும் வாழ வழியின்றி வந்தவர்களை அகதிகளாக அறிவிக்காமல், சட்டவிரோத குடியேறிகளாகவே வைத்திருப்பது இந்தியா போன்ற, பன்னாட்டு அரங்கில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் நாட்டுக்கு அழகல்ல.

இலங்கையில் போர் உச்சத்தில் இருந்த போது, அங்கிருந்து 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்தனர். அவர்களில் இப்போது 19,233 குடும்பங்களைச் சேர்ந்த 58,547 பேர் மட்டும்தான் 108 அகதிகள் முகாம்களில் உள்ளனர். மீதமுள்ளவர்கள் இலங்கையில் நிலைமை சீரடைந்த பிறகு சொந்த ஊருக்கு திரும்பி விட்டனர். அதேபோல், இப்போது தஞ்சம் தேடி வருவோரும் விரைவில் தாய்நாட்டிற்கு திரும்பி விடுவார்கள். அவர்களால் இந்தியாவுக்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது.

இலங்கையிலிருந்து தஞ்சம் தேடி வந்துள்ள 75 பேர் தவிர, மேலும் 60 பேர் 3 மாதங்களுக்கான சுற்றுலா விசாவில் தமிழகத்திற்கு வந்துள்ளனர். விசா முடிவடைந்த பிறகும் இலங்கைக்கு திரும்பப் போவதில்லை என்றும், தமிழகத்திலேயே தங்கப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். அவர்களுக்கு அகதிகள் தகுதி வழங்காமல் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்ற நிலையில் வைத்திருப்பது வேறு வகையான குழப்பங்களுக்கு வழிவகுக்கும்.

எனவே, இலங்கையில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டும், மனிதநேய அடிப்படையிலும் தஞ்சம் தேடி தமிழகத்திற்கு வரும் இலங்கைத் தமிழர்களை அகதிகளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு சட்டப்பூர்வ உதவிகளை தமிழக அரசு வழங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஜனாதிபதியினால் கௌரவிக்கப்பட்ட 'கிழக்கின் விவேகமான பெண் ஆளுமை' அதிபர் திருமதி நஜீமா ஹாறுடீன்




'விவேகமான பெண் ஆளுமைகள்' என்ற தலைப்பில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் இலங்கையில் இருந்து தெரிவான ஒரேயொரு முஸ்லிம் ஆசிரிய பெண்மணியாக அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர் திருமதி நஜீமா ஹாறுடீன் திகழ்கின்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் திருமதி நஜீமா ஹாறுடீன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை அக்/ முனவ்வறா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை அக்/ ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை அக்/ முஸ்லிம் மத்திய கல்லூரியிலும் (தேசிய பாடசாலை) கற்றார். கலைமாணி பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறியை திறந்த பல்கலைக்கழகத்திலும் இவர் நிறைவு செய்தார்.

பலத்த சவால்களுக்கு மத்தியில் கல்வி கற்று இன்று இப்பாராட்டுக்கு அவர் தகுதி பெற்றுள்ளார்.


இவர், 1988. 08. 29ஆம் திகதி ஆரம்பக் கல்வி ஆசிரியையாக அக்/ முனவ்வறா வித்தியாலயத்தில் இரண்டு வருடம் கடமையாற்றினார். பின்னர் பட்டதாரி நியமனம் 1993.04.01 ஆம் திகதி அக்/ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கிடைத்து அங்கு நான்கு வருடங்கள் சேவையாற்றினார்.

பின்னர் 1994.12.01 ஆம் திகதி முதல் இறக்காமம் அல்அஷ்ரப் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கு 13 வருடங்கள் சேவையாற்றினார். அம்மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தன்னால் முடியுமான வரை உதவினார். இரவு பகலாக கற்பித்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்கி மாணவர்கள் பலர் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிவகுத்தார்.

2016.10.25 ஆம் திகதி இப்பாடசாலையிலிருந்து இடமாற்றமாகி அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு வந்து இன்று வரை இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றில் அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

34 வருடங்கள் கல்விச் சேவையில் அனுபவத்தைக் கொண்ட இவர், 21 வருடங்கள் ஆசிரிய சேவையிலும், உதவி அதிபராக மூன்று வருடங்களும், பிரதி அதிபராக ஐந்து வருடங்களும், மிகுதி வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றி வருகின்றார். இவர் அதிபர் பொறுப்பை ஏற்றதும், இப்பாடசாலை உயர்ந்த பெறுபேறுகளை மிக வேகமாக குறுகிய காலத்தில் சகல துறைகளிலும் பெற்று சாதனைகள் பெற்றதுடன் இப்பாடசாலை தேசிய பாடசாலையாக பதவியுயர்த்தப்பட்டுள்ளது.

அவர் தனது குறுகிய காலத்திற்குள் பெரும் கல்விச் சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். பாடசாலைக்கும், இவ்வூருக்கும் அவர் பெருமை சேர்த்துள்ளார். அதிபர் திருமதி நஜீமா ஹாறுடீன் விவேகமான பெண்ணாளுமை மிக்கவர் என்று இனங்காட்டப்பட்டு ஜனாதிபதியின் கௌரவம் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



**எம்.எஸ்.எம்.றிஸ்வான்**
(அக்கரைப்பற்று வடக்கு நிருபர்)

# காரைதீவு புத்தாண்டு கலாசார விளையாட்டு விழாவில் கல்வி சாதனையாளர்கள் கௌரவிப்பு



சுபகிருது சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டும், காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமூக நிலையமும் காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் இணை அனுசரணையுடன் நடத்திய 24 ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழாவில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு மிக சிறப்பாக இடம் பெற்றது.

காலை நிகழ்வான மரதன் ஓட்டமானது கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு காரைதீவு விளையாட்டு கழக காரியாலயத்தில் நிறைவு பெற்றது.

மாலையில் விபுலானந்த மைதானத்தில் கழகத்தின் தலைவர் வி.அருள்குமரன் தலைமையில் கலாசார விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், தவிசாளர் கி.ஜெயசிறில், ஆலோசகர்களான செ.இராமகிருஷ்ணன், வே.இராஜேந்திரன், வே.த.சகாதேவராஜா உள்ளிட்ட அதிதிகளும் கலந்து கொண்டனர்.

கல்வி சாதனையாளர்கள் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன் போது உயர்தரப் பரீட்சையில் வைத்தியத் துறைக்கும், பொறியில் துறைக்கும் தெரிவானவர்களும் கலைத்துறையில் 3 ஏ சித்தி பெற்றவர்களும், சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்தி பெற்ற மாணவர்களும் காரைதீவு விளையாட்டு கழகத்தினரால் மைதானத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர். சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் அதிதிகள், பெற்றோர் கலந்து கொண்டனர்.

(காரைதீவு குறூப் நிருபர்)

# பதவிகள் தேடி எவரது கால்களிலும் நான் சரணாகதி அடையவில்லை!

## உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ரோஹண குமார திசாநாயக்க கூறுகின்றார்

மாத்தளை மாநகர சபை எதிர்க் கட்சி உறுப்பினராக 1991 ஆம் ஆண்டு அரசியலில் தடம் பதித்த நான், இன்று வரை பட்டம் பதவிகளை தேடி எவரினதும் கால்களில் சரணாகதி அடையவில்லை. எனது கட்சிக்கும் என் அரசியல் தலைமைத்துவத்திற்கும் விஷேடமாக நான் பிறந்த தாய்நாட்டிற்கும் விசுவாசமாக நடந்து கொண்டதன் காரணமாக குறுகிய காலத்தில் மாத்தளை மாநகரசபை முதல்வராக பதவியேற்றேன். தொடர்ந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட நான், 3 தசாப்த காலத்திற்கு மேலாக அரசியலில் ஈடுபட்டு வருகின்றேன். நான் பட்டம் பதவிகளை தேடி அலைந்து திரிந்ததில்லை.

இவ்வாறு கூறுகின்றார் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சருமான ரோஹண குமார திசாநாயக்க.

இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற பின்னர் மாத்தளை எம்.ஸி.வீதி காரியாலயத்தில் மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர்களை அவர் சந்தித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு இன்று மிகவும் நெருக்கடியான பொருளாதார கட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. அரசை உடனடியாக கலைத்து விட்டு தேர்தல்களுக்குச் செல்லுமாறு எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கோசம் எழுப்பியவாறு இருக்கின்றன. கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர்கள் ஒன்றுகூடி அரசியல் கலப்படமற்ற ஆர்ப்பாட்டம் என கூறிக் கொண்டு ஆட்சியினரை வீட்டுக்கு போகும்படி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அரசியல் கலப்படமற்ற ஆர்ப்பாட்டக் காரர்கள் என அவர்கள் தங்களைக் கூறிக் கொண்டாலும் இவர்களை பின்னணியிலிருந்து இயக்குவதெல்லாம் இணைந்த எதிர்க்கட்சியினர் என்பதை நான் அடித்துக் கூறுகின்றேன். இன்று நாடு பல பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இருக்கின்றது. ஆனால் இதற்கெல்லாம் ஆட்சியாளரே காரணமென குற்றம் சுமத்துவது எந்தவிதத்தில் நியாயம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கு விடை பகரும் பொறுப்பு ஊடகவியலாளர்களான உங்கள் கையிலேயே இருக்கின்றது.



இன்று நாட்டில் சமையல் எரிவாயு, வாகனங்களுக்கான பெற்றோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு, மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு உள்ளது. மக்கள் இன்று பாதைகளில் கால் கடுக்க காத்திருப்பது நாங்கள் அறியாததல்ல. பல வருடங்காலமாக மாறி மாறி ஆட்சி செய்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தவறுகளின் காரணமாக பொருளாதார நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

> ‘ ஆர்ப்பாட்டங்களை இயக்குவது எதிரணியினர்; போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி தங்களின் அரசியல் தேவைகளுக்காக குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கத் துடிக்கின்றனர் ’

நாடு ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் போது ஆட்சியாளர்களை வீட்டுக்குக்குப் போகும்படி கோசம் எழுப்புகின்றார்கள். ஆட்சியாளர்கள் பதவி விலகினால் அதற்கான மாற்று நடவடிக்கை என்ன என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கூற வேண்டும். வெறுமனே போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி தங்களின் அரசியல் தேவைகளுக்காக குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கத் துடிக்கின்றனர்.

1971 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஏப்ரல் கிளர்ச்சி, அதனால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, இவர்களின் போராட்டங்களினால் காவு கொள்ளப்பட்ட உயிர்கள் பற்றிய நினைவு இன்றும் எம் மனதில் அலை மோதிக் கொண்டிருக்கிறது. அதே போன்று 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜுலையின் போது எத்தனையோ உயிர்கள் கொல்லப்பட்டன. இதனால் எமது நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்பட்டது. உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருந்த உலக நாடுகள் இவ்வாறான செயல்கள் காரணமாக உதவி செய்வதை நிறுத்தி விட்டு ஓரமாகிக் கொண்டன.

3 தசாப்த கால யுத்தம் காரணமாக நாடு மேலும் அதல பாதாளத்திற்குச் சென்று விட்டது. கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் காரணமாக சுமார் 300 உயிர்கள் கொல்லப்பட்டு, பல பேர் காயப்பட்டனர். இச்சம்பவம் காரணமாக உலக நாடுகளுக்கு மத்தியில் எமது நாட்டுக்கு பெரும் களங்கம் ஏற்பட்டு விட்டது. இவற்றுக்கெல்லாம் மத்தியில் பல மாத காலமாக கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பல மாதங்களாக நாட்டை முடக்கி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த சுமார் மூன்று வருட காலத்திற்கு பல சவால்களுக்கு முகங் கொடுத்த வகையிலேயே நாட்டை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க நிதியமைச்சர் அலி சப்ரி ஐ.எம்.எப் உதவியை நாடிச் சென்று சாதகமான பெறுபேறுகளை பெற்றுள்ளார்.

2020 ஆம் ஆண்டு தொடக்கம் அரசில் எந்தவித பதவியும் இல்லாமல் தனியே பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்ட நான் எனக்கு எந்தவித பொறுப்பும் வழங்கப்படாததையிட்டு ஜனாதிபதியையோ எனது கட்சியையோ நான் விமர்சனம் செய்யவில்லை. நாட்டில் நெருக்கடி நிலையை உணர்ந்து அமைதியாக இருந்த என் மீது நம்பிக்கை கொண்டு ஜனாதிபதி உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் பதவியை தந்துள்ளார். எனவே இந்த அமைச்சு மூலம் நாட்டில் நாலாதிசைகளிலும் உள்ள சுமார் 341 உள்ளூராட்சி மன்றங்களில் இருக்கும் சுமார் 8,300 உறுப்பினர்களை எதிர்காலத்தில் 7,000மாக குறைக்க நடவடிக்கை எடுத்து உள்ளூராட்சி மன்றங்களில் வீண்விரயங்களை தவிர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க தெரிவித்தார்.

**இன்றைய நெருக்கடிகளுக்கு ஆட்சியாளரே காரணமென குற்றம் சுமத்துவது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை'**

எம். எஸ்.எம். மஸாஹிம்...
(உக்குவளை விஷேட நிருபர்)

# சீனாவின் பொருளாதார வளர்ச்சியையும் தாண்டி முன்னேறுவதற்கு இந்தியா வகுத்துள்ள திட்டம்

## நட்பு நாடுகளுடன் சேர்ந்து அமைத்துள்ள புதிய பொருளாதாரக் கூட்டணி; சீனாவின் கடன்வலையில் நாடுகள் வீழ்வதைத் தடுப்பதற்கு கைகொடுக்கும் திட்டம்



சீனாவின் பொருளாதாரம் உலக நாடுகள் வியக்கும் வண்ணம் வேகமாகவும் வலிமையாகவும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதற்குக் காரணம் மற்றைய நாடுகளை சீனா தனது வர்த்தக மாயைக்குள் சிக்க வைப்பதனால் ஆகும். அதிக வட்டியுடனான பெருந்தொகை கடனை வழங்கி பல நாடுகளிடம் இருந்து பெரும் வருமானம் பெற்று வருகின்றது சீனா. அத்துடன் புதிய பட்டுப் பாதை திட்டத்தில் பல நாடுகளை தன்வசப்படுத்தி சீனா தனது நாட்டுப் பொருளாதாரத்தை அதிகரித்து வருகின்றது.

ஆனால் சீனாவின் வலையில் இந்தியா ஒரு போதுமே வீழ்ந்து விடவில்லை. இந்தியா தனது சுயபொருளாதாரத்தையே பெருமளவில் நம்பியிருக்கும் நாடாகும். சீனா விடயத்தில் இந்தியா எப்போதும் விழிப்புடனேயே இருந்து வருகின்றது.

இந்த நிலையில், சீனாவுக்குப் போட்டியாகப் பல நாடுகள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கையில் எடுத்துள்ளன. பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தவரை சீனாவின் மீது தங்கியிருக்கலாகாது என்பதே அந்நாடுகளின் எண்ணமாகும். சீனாவுக்கு இணையாக வளர்ச்சி கட்டமைப்புகளையும் பல நாடுகள் உருவாக்கியுள்ளன.

அதேசமயம் சீனாவுக்கு இணையாக வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக இந்தியா புதிய கூட்டணித் திட்டத்தை உருவாக்கியுள்ளது. அத்திட்டத்துக்காக இந்தியா பல நாடுகளை தன்னுடன் கூட்டுச் சேர்த்துள்ளது. இத்திட்டமானது இந்தியாவின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் கைகொடுக்குமென்று நம்பப் படுகின்றது.

சீனா வளரும் நாடுகள் பலவற்றுக்குப் பணத்தின் மீதும், வளர்ச்சியின் மீதும் ஆசை காட்டி தனது கடன் வலையில் சிக்க வைப்பது மூலம் தன் நாட்டுப் பொருட்களை அதிகளவில் விற்பனை செய்து தனக்காக வர்த்தகத்தை உருவாக்கி வருகிறது. சீனாவின் இந்த ஆதிக்கத்தைக் குறைக்க உலக நாடுகளுடன் இணைந்து இந்தியா உருவாக்கியுள்ள இப்புதிய திட்டம் பெரிய அளவில் உதவுமென்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதுஒருபுறமிருக்க சீனாவின் பொருளாதார வளர்ச்சி தற்போது ஓரளவு சரிவைச் சந்தித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. சீனாவில் நிலவி வரும் நெருக்கடி நிலைக்கு மத்தியில் அங்கு எதிர்காலத்தில் பொருளாதாரம் என்னவாகுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

தற்போது வரையில் சீனாவின் பல முக்கிய மாகாணங்கள் கொரோனாவின் பிடியில் இருந்து வருவதை தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. இது அந்நாட்டின் பொருளாதாரத்தினை பாதிக்கக் கூடும். சீனா கொரோனாவின் பிடியில் சிக்கியுள்ள நிலையில், அங்கு 'லொக்டவுண்' அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அங்கு பொருளாதாரத்தில் சரிவு உள்ளது.

சீனாவின் உற்பத்திப் பொருட்களுக்கு உலக சந்தையில் மதிப்பு கிடையாது. சீன உற்பத்திகள் தரமற்றவை என்பதே ஏனைய நாடுகளின் கருத்தாகும். இந்நிலையில் உற்பத்தித் துறையை அடிப்படையாகக் கொண்ட சீனாவின் உற்பத்தி மாதிரியை கண்மூடித்தனமாக இந்தியா பின்பற்றக் கூடாது. ஆனால் அதற்குப் பதிலாக சேவைத் துறையில் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் சீனாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் போல, இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் மேற்கத்திய நாடுகளில் பின்னடைவை சந்திக்கலாம் என்றும் ரகுராம் ராஜன் எச்சரித்துள்ளார்.

மேலும் உற்பத்தி சார்ந்த வளர்ச்சிக்கு அனைத்து வளங்களையும் இந்தியா பயன்படுத்துவதை விட, சேவைத் துறையில் கவனம் செலுத்துவது விவேகமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

சீனாவின் பாதையைப் பின்பற்றுவதில் பிரச்சினை என்னவெனில், சீனா ஏற்கனவே மேற்கத்திய நாடுகளின் உற்பத்தி வளர்ச்சியில் பின்னடைவை உருவாக்கியுள்ளது. இந்தியா அதே பாதையில் செல்ல முயன்றால் அதுவும் இன்னும் பின்னடைவைத்தான் கொடுக்கும் என ரகுராம் ராஜன் கூறியுள்ளார். உண்மையில் இது யோசிக்க வேண்டிய விஷயமும் கூட என்கிறார்கள் இந்திய பொருளாதார நிபுணர்கள். இவ்வாறான நிலையில் சீனாவின் பெல்ட் ரோட் திட்டத்தின் ஆதிக்கத்தைக் குறைக்க இந்திய அரசு முக்கிய திட்டத்தை இப்போது கையில் எடுத்துள்ளது. இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் 'முத்தரப்பு வளர்ச்சிக் கழகம் (TDC)' என்ற புதிய நிதித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக தனியார் நிறுவனங்களுடன் இணைந்து மத்திய அரசு இன்டோ பசிபிக் மற்றும் பிற முக்கிய வர்த்தகப் பகுதியில் முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டு உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி_ போரிஸ் ஜோன்சன் சந்திப்பின் போது இந்தியாவின் 'குளோபல் இன்னோவேஷன் பார்ட்னர்ஷிப் (ஜி.ஐ.பி) தொடங்கப் பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பிற நாடுகளுடன் இணைந்து முத்தரப்புத் திட்டங்களுக்கு TDC நிதியைப் பயன் படுத்துவதற்கான ஏற்பாடு உருவாக் கப்பட்டுள்ளது. இந்த இணைப்பு மூலம் குளோபல் இன்னோவேஷன் பார்ட்னர்ஷிப் திட்டத்திற்கான நிதி TDC திட்டத்தின் வாயிலாகச் செலுத்தப்படும். முதற்கட்டமாக ஆபிரிக்கா, ஆசியா, இண்டோ பசிபிக் பகுதியில் தொழில்நுட்ப மேம்பாடுகள் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

சீனா எப்போதும் தனது நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலேயே முழுக் கவனம் செலுத்தி வருகின்றது. மற்றைய நாடுகளின் நலன்கள் மீது சீனாவுக்கு அக்கறை கிடையாதென்பதால், இந்தியா தனது நட்பு நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து முத்தரப்பு வளர்ச்சிக் கழகம் திட்டத்தை முன்னெடுக்கின்றது.

ஏனைய நாடுகள் சீனாவின் வலையில் வீழ்வதைத் தடுப்பதுவும் இந்தியாவின் திட்டமெனக் கூறப்படுகின்றது.

# தமிழினத்தை சாதி மதங்களால் பிரிப்பதற்கு சிலர் சதிமுயற்சி!

## இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில் ஸ்டாலின் எச்சரிக்கை!



தமிழினத்தை சாதி மதங்களால் பிரிக்க சிலர் சதிமுயற்சி செய்கின்றனர். தமிழினத்தை பிரிக்கும் சதிகளை தெரிந்து கொண்டு விழிப்பாக இருக்க வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

ரமழான் மாதத்தை முன்னிட்டு சென்னை திருவான்மியூரில் தி.மு.க சிறுபான்மையினர் பிரிவின் சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு நோன்பு திறந்து, இஸ்லாமிய மக்களிடையே சிறப்புரைஆற்றினார்.அங்கு பேசிய முதல்வர் "இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியது கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசு, பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் இஸ்லாமியர்களுக்கு 3.5 இட ஒதுக்கீடு 2007ஆம் ஆண்டு அளித்தது திமுக அரசு. இஸ்லாமிய மக்களுக்காக சிறுபான்மை நல இயக்கம் அமைத்தது தி.மு.க ஆகும்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர்களான பேறிஞர் அண்ணாவையும், கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியையும் இணைத்தது இஸ்லாமிய மக்கள் கொண்டாடும் மீலாது நபி நிகழ்ச்சிதான். சிறுபான்மையினருடனான தி.மு.கவின் உறவு காலம் காலமாக தொடர்ந்து வருகிறது.

1990 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நலக் குழுவை உருவாக்கியவர் கலைஞர் கருணாநிதி. மேலும் ஹஜ் புனித பயணத்திற்கான மானியத்தை அவர் அதிகப்படுத்தினார். கலைஞர் கருணாநிதியின் வாழ்க்கையில் இணைந்தும், பிணைந்தும் இருந்தவர்கள் இஸ்லாமிய தோழர்கள். இஸ்லாமிய மக்கள் ரமழான் மாதத்தை மிக புனிதமான மாதமாகவே கடைப்பிடிக்கின்றனர். நான் ஆற்றுவது எழுச்சி உரை அல்ல, உணர்ச்சி உரை. மதம், சமயம் என்பது அவரவர் தனிப்பட்ட விருப்பத்துக்குரியவை. தமிழினத்தை சாதி, மதங்களால் பிரிக்க சிலர் முயற்சி செய்கின்றனர். தமிழினத்தை பிரிக்கும் சதிகளை தெரிந்து கொண்டு விழிப்பாக இருக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சியில் தி.மு.க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இஸ்லாமிய மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நேற்று கண்டி நகரத்தை நோக்கி ஊர்வலமாக சென்றனர். எதிர்ப்பு பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பிக் கொண்டு கண்டி நகர மத்தியில வந்த அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்துவதை படங்களில் கானலாம்.

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# எரிபொருள் விலையை அதிகரிக்க தயாராவதாக பொய் பிரசாரம்

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எரிபொருளில் விலைகள் அதிகரிக்கப்படலாம் என பரப்பப்படும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதென்றும் அவ்வாறான எந்த வித தீர்மானமும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எரிபொருளின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என பரப்பப்பட்ட த க வ ல் க ளு க் கி ண ங் க நேற்று முன்தினம் மற்றும் நேற்றைய தினமும் நாடளாவிய எரிபொருள் நிலையங்களில் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக பெருமளவில் மக்கள் கூடியிருந்தனர். அதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படப் போவதாக சில சமூகவலைத்தளங்களில் தன்னிச்சையான தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன. அதனையடுத்து எரிபொருள் நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக பெருமளவு மக்கள் திரண்டிருந்தனர்.

எனினும் அவ்வாறு எரிபொருளில் விலையை மேலும் அதிகரிப்பதற்கு இதுவரை எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையென வும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேவேளை, மேற்படி தன்னிச்சையான செய்திகளை நம்பி மக்கள் எரிபொருளை சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் எனவும் அமைச்சர் ம க்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ)

## பங்குச் சந்தை செயற்பாடு... 03ஆம் பக்கத் தொடர்

கடந்த திங்கட்கிழமை (18) முதல் 5 நாட்களுக்கு கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது நேற்றைய தினமே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போத்தலில் பெற்றோல்... 03ஆம் பக்கத் தொடர்

நிரப்பு நிலையம் ஒன்றிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் தாக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ஊழியரின் மூன்று பற்கள் உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரைக் கைது செய்ய கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கப்ராலுக்கு விதித்த... 03ஆம் பக்கத் தொடர்

திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கப்ராலுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதுடன், கப்ரால் தனது கடவுச்சீட்டையும் நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## பெரும்பாலான பகுதிகளில்... 03ஆம் பக்கத் தொடர்

வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காங்கேசந்துறையில் இருந்து மன்னார், புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. புத்தளத்தில் இருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதுடன் அக்கடற்பரப்பு பகுதிகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 35 தொடக்கம் 40 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையில் இருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நாடளாவிய ரீதியில்... 03ஆம் பக்கத் தொடர்

பொருட்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல்வேறு விதமான போராட்டங்களில் மக்கள் ஈடுப்பட்டு வருகின்றனர். இப்போராட்டங்களுக்கு வலுசேர்க்கும் வகையிலும் இந்த அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கு செவிசாய்த்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால அரசாங்கத்தை...

இயல்பு வாழ்க்கையை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்கள் அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேவைப்படின் மேற்படி செயற்பாடுகள் தொடர்பிலான விடயங்களை தொடர்ந்தும் மகாநாயக்க தேரர்களுக்கு அறிவிப்பதாக அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை தொடர்பில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் மகாநாயக்க தேரர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ள நிலையில் அது தொடர்பாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மகாநாயக்க தேரர்களுக்கு ஜனாதிபதி எழுத்து மூலமான கடிதத்தை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி மேற்படி கடிதத்தை புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவின் மூலம் மகாநாயக்க தேரர்களுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி மகாநாயக்க தேரர்கள் ஒன்றிணைந்து நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு தீர்வு காண்பது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய யோசனைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கையளித்தி ருந்தனர்.

அதேவேளை அவர்கள் அந்தக் கடிதத்தின் பிரதிகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமக்கு கிடைக்கப்பெற்ற கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி நேற்று மகாநாயக்க தேரர்களுக்கு பதில் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

## நெருக்கடிகளுக்கு தீர்வாக...

காலத்துக்குப் பொருத்தமானதுமான திருத்தங்களை மேற்கொண்டு அதனை செல்லுபடியாக்குவது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு ஆலோசனை முன்வைத்துள்ளார்.

அதுதொடர்பான யோசனைகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். அந்த திருத்தம் சட்டமூலமாக தயாரிக்கப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கு பிரதமர் அமைச்சரவையின் அனுமதியை கோரியுள்ளார்.

2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பின் 20வது திருத்தம் தொடர்பில் சமூகத்தில் தற்போது பெரும் வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளதாக பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்காக பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களிடமிருந்து இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டு 19வது திருத்தத்தை மீண்டும் செல்லுபடியற்றதாக்குவது தொடர்பில் அரசியல் தொழிற்சங்க மற்றும் சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அதற்கிணங்க தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணும் வகையில் திருத்தங்களுடன் 19வது அரசியலமைப்பு திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ)

## அதிபர், ஆசிரியர் போராட்டம்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையேற்றம் காரணமாக அருகாமையில் இருக்கும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரி ஆசிரியர்கள், அதிபர்கள் சுகயீன விடுமுறை போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. எரிபொருள் விலையேற்றம் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு மட்டும் தாக்கம் செலுத்தும் காரணியன்று.

கொவிட் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் போராட்டங்களை நடாத்துவது பொருத்தமற்றது என குறிப்பிட்டுள்ளார்.

## மேலும் 15 பேர்...

படகு மூலம் தமிழகத்தின் தனுஷ்கோடியை அவர்கள் சென்றடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அவர்களில் 3 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இந்தநிலையில், அவர்களை முகாம்களுக்கு அழைத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## அரசுக்கு கம்மன்பில எச்சரிக்கை...

தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை அடுத்த ஒரு வாரத்திற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தாம் உட்பட 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வருவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.(ஸ)

## CWCயின் முடிவு...

கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அதன் உயர் பீடம் தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களினதும் மலையகப் பெருந்தோட்ட மக்களின் நலன் கருதியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உயர் பீடமானது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளதாகவும் இ.தொ.கா தெரிவித்துள்ளது

## 7200 மெ. தொ Gas...

தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் அந்த நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவிக்கையில், இன்றைய தினம் மேலும் 3600 மெற்றிக் தொன் கேஸ் தாங்கிய கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது. அதனை நாளை முதல் சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

அதேவேளை மேலும் இரண்டு தினங்களுக்குள் மேலும் 3600 மெற்றிக் தொன் எரிவாயுவுடன் கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது. அதற்கிணங்க இரண்டு கப்பல்களிலும் வரும் 7200 மெற்றிக் தொன் எரிவாயுவை உடனடியாக மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குறைந்த விலையில் சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நாளாந்தம் தமது நிறுவனம் சுமார் 25 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## இலங்கை மக்களுக்கான சீனாவின்...

கீழும் சீனாவின் ஆதரவு தொடரும் என்று தெரிவித்துள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர், கடன் மறுசீரமைப்பு விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான இலங்கையின் முடிவானது, இலங்கைக்கான 2.5 பில்லியன் டொலர் சீன உதவி தொடர்பான பேச்சுவார்த்தைகளை தாமதப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சீனா கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் 2022 ஜனவரி மாதம் வரை 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான 730,000 மெட்ரிக் தொன் எரிபொருளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளது.

இதற்காக, மொத்தம் 12 கப்பல்களுக்கான கட்டணமாக, 390 மில்லியன் டொலர்களை இலங்கை செலுத்த வேண்டியுள்ள நிலையில், அதில் 7 கப்பல்களுக்கு மாத்திரம் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாக சீனத் தூதுவர் மேலும் குறிப்பிட்டார்.

## SLFPயை கட்டியெழுப்ப

ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட போஷகர் பதவியில் நான் நீடிக்கின்றேன். என்னை எவரும் பதவி நீக்கம் செய்ய முடியாது. கட்சியில் உள்ள கள்வர்களை விரட்டினால், கட்சியைக் கட்டியெழுப்ப நான் தயார். தற்போதைய தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகியோர் கட்டாயம் பதவி விலக வேண்டும்" – என்றார்.

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தை...

சஜித் பிரேமதாச சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதம தலைவர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இளம் தலைமுறை புத்திஜீவிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் உட்பட முழு நாடும் நாடு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்காக பாராளுமன்றத்தை வலியுறுத்துவதாகவும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே இந்த தருணத்தில் சபாநாயகர் எடுக்கும் தீர்மானங்களே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் என வலியுறுத்தியுள்ள எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகருக்கு அனுப்பியுள்ள கடிதத்திற்கு உடனடி பதிலை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியலமைப்பு மறுசீரமைப்பு...

அர்ப்பணிப்புள்ள சேவையை செய்துள்ள குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தினால் அந்த அறிக்கையின் உள்ளடக்கம் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## கல்வி நடவடிக்கைகளுக்கு...

ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சில நேற்று சுகவீன லீவு வேலை நிறுத்தம் தொடர்பான அறிவிப்பை விடுத்திருந்த போதும் பெருமளவிலான ஆசிரியர்கள் நேற்று கடமைக்கு சமூகமளித்திருந்ததாகவும் அதற்கிணங்க மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடையின்றி முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்வது அவர்களுக்கான உரிமையாகும். எனினும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைக் கவனத்திற் கொண்டு அவர்களைக் கடமைக்கு திரும்புமாறு தாம் அழைப்பு விடுத்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலையில் எதிர்கொள்ள நேர்ந்துள்ள அசௌகரியங்களை வலியுறுத்தி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்கள் சில நேற்றையதினம் தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் நாடளாவிய ரீதியில் பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் வரவு நேற்றைய தினம் மிகவும் குறைவாகவே காணப்பட்டதாகவும் அதனால் பாடசாலை மாணவர்கள் நேர காலத்தோடு வீடு திரும்ப நேர்ந்ததாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.(ஸ)

## காலம் தாழ்த்தாது உரிய...

பெற்று அமைச்சரவையுடன் இணைந்து செயற்பட வேண்டும் என முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். விசேட அறிவித்தலொன்றை வெளியிட்டு இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது :

எமது பிரதான பிரச்சினை நாட்டினதும் வீட்டினதும் பொருளாதார நெருக்கடியாகும். மே மாதத்துடன் எரிபொருளுக்கான கடன் நிறைவடையவுள்ளது.

அதன் பின்னர் கடனைப் பெறுவது தொடர்பில் எவ்வித அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. எனவே எதிர்வரும் மாதங்களில் பொருளாதார பிரச்சினை உக்கிரமடைந்து விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட கடைகள் அனைத்தையும் மூட வேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை மேலும் காலம் தாழ்த்த முடியாது. பாராளுமன்றத்தின் ஊடாக அந்த தீர்வினைக் காண வேண்டும்.

இது தேர்தலை நடத்துவதற்கான நேரமல்ல. எனவே நிதி அதிகாரத்தைப் பெற்று பாராளுமன்றம் அமைச்சரவையுடன் இணைந்து அதே போன்று இளம் தலைமுறையினருடன் இணைந்து செயற்படுவதற்கான வேலைத்திட்டங்கள் சிலவற்றை நான் ஏற்கனவே பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கின்றேன்.

அதற்கமைய நிதி அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்கி , அதனை முகாமைத்துவம் செய்வதற்காக 6 தெரிவு குழுக்களை அமைக்குமாறும் பரிந்துரைத்தோம்.அதே போன்று 20 கண்காணிப்பு குழுக்களை நியமிக்குமாறும் யோசனை முன் வை த் தே ா ம் . இ த னு டன் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக அமைச்சரவையில் செயற்படுவதற்கு கட்சி தலைவர்களின் தேசிய ஆணைக்குழுவொன்றையும் உள்ளடக்கியுள்ளோம்.

இந்த குழுக்களில் இளம் தலைமுறையினருக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அமைச்சரவை , கண்காணிப்பு குழுக்களின் தலைவர்கள், நிதி முகாமைத்துவ குழுக்களின் தலைவர்கள், கட்சி தலைவர்கள் சந்திப்பின் போதும் இளம் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

இந்த இளம் தலைமுறையினரை தெரிவு செய்யும் பொறுப்பினையும் அவர்களுக்கே ஒப்படைக்க வேண்டும். இது தொடர்பில் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்க முடியும்.

இளம் குழுக்களின் நியமனங்கள் குறித்த நிலைப்பாடுகளையும் அவர்களிடமே பெற்றுக் கொள்ள வேண்டும். 'கோட்டா கோ கம' உள்ளிட்ட ஏனைய அனைத்து ஆர்ப்பாட்டங்களிலும் வெளியிடப்படும் கருத்துக்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாவசிய உணவு பொருட்கள்...

அமைச்சர் பேராசிரியர் குணபால ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதால் அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணய விலையை அறிமுகப்படுத்தில் சவாலை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையை அதிகரிக்க பால் மா நிறுவனங்கள் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, எதிர்வரும் நாட்களில் பால் மாவுக்கான விலையை கணக்கிட்டு புதிய விலை நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதேவேளை கடந்த சில நாட்களுக்கு முன்னர் எரிபொருள் விலை பாரியளவில் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து உணவங்களில் உணவுகளின் விலைகள், பாணின் விலைகள் அதிகரித்திருந்ததுடன், போக்குவரத்து கட்டணங்களும் சவர்க்காரங்களின் விலைகளும் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையினால் ,அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணய விலையை அறிமுகப்படுத்துவதில் பிரதான சவாலாக அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# சலுகைகளுக்காக சோரம் போகாத ஊடகவியலாளன் மோகனதாஸ்

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் அனுதாபம்

**மணல்சேனை நிருபர்**

இளம் ஊடகவியலாளர், ஆசிரியர், நேர்மையான சோரம்போகாத ஊடகவியலாளர், பா.மோகனதாஸின் பிரிவு தாங்கமுடியாத பெரும் இழப்பாகும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், இலங்கை தமிழரசு கட்சி பட்டிருப்பு தொகுதி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் பா.மோகனதாஸின் பிரிவு தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், பல்துறை ஆளுமை கொண்ட ஒரு இளம் ஊடகவியலாளராகவும், ஆசிரியராகவும், கலை இலக்கியவாதியாகவும் வாழ்ந்து பலரின் மனதை கவர்ந்த ஒருவர்.

எனக்கு இவரை பல வருடங்களாக தெரியும். அடிக்கடி எனது வீட்டிற்கு வந்து அரசியல் சார்ந்த விடயங்களை ஆவலுடன் அறிவதில் பின்நிற்கமாட்டார்.

தமிழ்தேசிய அரசியலை உயிர் மூச்சாக நேசித்தவர், எனினும் ஊடகப்பணியில் எல்லா அரசியல் தலைவர்களினதும் செய்திகளையும் நேர்காணல்களையும் தொடர்ந்து எழுதி வந்த நேர்மை எப்போதும் இவர் இடத்தில் இருந்தது. மட்டக்களப்பில் பல ஊடகவியலாளர்கள் இருக்கின்றார்கள், ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே தேடல் மூலமாக தன் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்கிறார்கள், அதில் மோகனதாஸ் முதன்மையானவர்.



தமது ஆசிரியர் தொழிலை முழுநேர தொழிலாக செய்தாலும் பகுதிநேர ஊடகவியலாளராக பெருமை இன்றி தான்சார்ந்த சமூகத்திற்கும் மக்களுக்கும் பல உண்மைகளை வெளியில் கொண்டுவரும் தனித்திறமையை நான் இவரிடத்தில் அவதானித்தேன்.

சுகயீனம் காரணமாக மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிப்பதற்கு முதல் நாளும் எனது நேர்காணல் ஒன்றை என்னிடம் இருந்து பெற்றார், ஆனால் அது பிரசுரமாவதற்கு முன்னமே இவர் எமைவிட்டு பிரிந்தார்.

அன்னாரின் இழப்பு தமிழ் தேசியத்திற்கு ஒரு பெரும் இழப்பாகும் எனவும் மேலும் கூறினார்.

## வருடாந்த இப்தார் நிகழ்வு




**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் மாவட்டத் தலைவி றிபா உம்மாவின் ஏற்பாட்டில் வருடாந்த இப்தார் நிகழ்வு சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் பிரதம ஆலோசகரும், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளருமான எஸ்.எல்.ஆதம்பாவா, முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை, மாவட்ட சம்மேளனத் தலைவர் முகம்மட் றியாஸ் உட்பட சம்மேளத்தின் பதவி வழி உத்தியோகத்தர்கள், மாவட்ட ஆலோசகர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இப்தார் விசேட சொற்பொழிவு மற்றும் துஆப்பிரார்த்தனையை அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மாந்துறை கிளைத் தலைவர் மௌலவி றம்சீன் காரியப்பர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் பாடசாலைகள் வெறிச்சோட்டம்



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

அ தி பர், ஆசிரியர் தொழில் சங்கப் போராட்டம் காரணமாக நேற்று கிழக்கு மகாணத்திலுள்ள பல பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதற்கமைய பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பல பாடசாலைகள் இயங்கவில்லை. அதிபர், ஆசிரியர்கள் வரவின்மையினால் மாணவர்களும் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை.

இதேவேளை கல்விசாரா ஊழியர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பாடசாலைக்கு வருகை தந்திருந்ததை காணக்க கூடியதாக இருந்தது. மாணவர்களை அழைத்து வந்த பெற்றோர்கள் ஆசிரியர்கள் இன்மையால் தங்கள் பிள்ளைகளை மீண்டும் அழைத்துச் சென்றனர்.

## சைக்கிள் திருடிய சந்தேக நபர் கைது

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஒரு மாத காலமாக சைக்கிள்கள் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் சாய்ந்தமருது பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். எம்.சம்சுதீனின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகஸ்தர் வை.பி.அய்யூப் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கல்முனையில் வைத்து சைக்கிள் திருடிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சவளக்கடைப் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு

**(சாய்ந்தமருது விசேட நிருபர்)**

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு எண்ணக்கருவின் கீழ் தேசிய "கமசமக பிலிசந்தர" வேலைத் திட்டத்தின் கீழ், கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு, கல்முனை பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற "கிராமத்துடன் உரையாடல்" கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பவற்றைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களினூடாக முழு வேலைத் திட்டத்தையும் முன்னுரிமை அடிப்படையில் வேலைத் திட்டமாக செயற்படுத்தப்படுகின்றது.

# பொருட்களை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

**(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)**

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொதுமக்களின் அத்தியவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முறையான திட்டங்களை வகுத்து, பொது மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுமாறு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், மாநகர முதல்வர் ஆளகியோரிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் சில பொருட்களை பெறுவதில் பொது மக்கள் பாரிய சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். நாளுக்கு நாள் அதிகரித்துவரும் விலைவாசியை பொதுமக்கள் எதிர்கொண்டு முன்னோக்கி செல்ல முடியாமல் உள்ளனர். குறிப்பாக இறைச்சி, மீன் போன்றவை மிகக் கூடுதலான விலைக்கு விற்கப்பட்டு வருகிறது.

விவசாய வேலைகள் இடம் பெற்று வருவதனால் உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதே போன்று அரச ஊழியர்கள், அன்றாடம் தொழில் செய்யும் வாகன உரிமையாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் எரிபொருட்களை பெறுவதில் முறையான திட்டம் இல்லாது சிரமப்பட்டு வருகின்றனர்.

இதனை கருத்திற் கொண்ட சில இடைத்தரகர்கள் எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியவசிய பொருட்களை கொள்வனவு செய்து பதுக்கி வைத்து அப் பொருளிற்கான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மிகக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் என, பொதுமக்கள் பிரதேச செயலாளர், மாநகர முதல்வர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## நாவிதன்வெளியில் சுய தொழில் உபகரணங்கள் வழங்கி வைப்பு

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**



அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (25) பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

விதாதா வள நிலையத்தின் "கிராமத்திற்கு ஒரு பயனாளி" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் பதினொரு இலட்சம் ரூபா செலவில் 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 18 பயனாளிகளுக்கு இந்த வாழ்வாதார ஊக்குவிப்பு சுயதொழில் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## விபுலானந்தா கற்கைகள் நிறுவகத்தில் புதிய கற்கை நெறிகளின் ஆரம்ப நிகழ்வு



**(கல்லடி குறூப் நிருபர்)**

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் புதிய சான்றிதழ் கற்கை நெறிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கெனடி தலைமையில் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கட்புல தொழில்நுட்பதுறை தலைவர் கலாநிதி சு.சிவரெத்தினம், நடன நாடகதுறை தலைவர் கலாநிதி தக்ஷாயினி பரமதேவன், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பிரதி பதிவாளர் து.விஜயகுமார் உள்ளிட்ட பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நாடகத்துறை, நடனத்துறை மற்றும் சங்கீதத்துறை சார் சான்றிதழ் கற்கை நெறிகளே இதன்போது ஆரம்பித்து வைத்துள்ளதுடன், இக் கற்கை நெறிகளுக்கு வயதெல்லை இல்லையென்பதுடன், உள்வாரி வெளிவாரி என்ற தெரிவு இல்லாமல் கற்பதற்கான வாய்ப்புக்களை எதிர்பார்க்கும் அனைத்து மாணவர்களுக்கும் இச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன், மேற்குறிப்பிட்ட இக்கற்கை நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சிரேஸ்ட விரிவுரையாளர்கள், வளவாளர்கள், கற்கைநெறிகளில் பங்குபற்றும் மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




பள்ளிவாசலில் கடமை புரிகின்ற இமாம்கள் மற்றும் முஅத்தின்களுக்கான உலர் உணவுப் பொதிகள் கிண்ணியா ஜம்இயத்துல் உலமா காரியாலயத்தில் திங்கட்கிழமை (25) வழங்கப்பட்டன. ஹசன் மௌலவி நற்பணி மன்றத்தின் அனுசரணையில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் இப் பொதிகள் வழங்கப்பட்ட போது. (படம்: கிண்ணியா நிருபர்)

## தேங்காய் விலையில் வீழ்ச்சி

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் தேங்காய் விலை 50 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேங்காய் ஒன்று 100 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது தேங்காய் ஒன்று 50 ரூபாவிற்கும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டில் அதிகளவான பொருட்களுக்கு விலை அதிகரித்து வருகின்ற நிலையில், தோப்பூர் பிரதேசத்தில் தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளமையை இட்டு பொது மக்கள் மகிழ்ச்சி அடைவதோடு, இதற்கு உள்ளூர் உற்பத்தி அதிகரித்துள்ளமையே காரணமெனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.






# மூதூரில் முன்னாள் நிருவாகிகள் கௌரவிப்பு



**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் மஸ்ஜிதுர் றகுமான் ஜும்ஆ பள்ளிவாசல் முன்னாள் தலைவர்கள் மூவர் புனித ரமழானை முன்னிட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக மஸ்ஜிதுர் றகுமான் ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாக அமைப்பினை மிக சிறப்பான முறையில் சமூகத்துடன் இணைந்து பணியை மேற்கொண்டதுடன், சமூக சமய விடயங்களில் மிக தூர நோக்குடன் செயல்பட்டமையை இட்டும் இக் கௌரவிப்பு நிகழ்வு எஸ்.எம்.முஜீப் தலைமையில் இடம்பெற்றது.

கே.எம்.ஜுனைது, எம்.கே.மஹ்திக், கலாநிதி எல்.எம்.முபீத், ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் முன்னாள் தலைவர் மர்ஹூம் எம்.டப்ளியு. அப்துல் சமது அவர்களின் குடும்பம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வும் இடம் பெற்றது.

பள்ளி நிருவாகிகள், ஊர் பெரியார்கள், இளைஞர்களாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் புதிய நுழைவாயில் திறப்பு விழாவும் இடம்பெற்றது.

# கிழக்கின் குரல்



# சுதேச வைத்தியத் துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் றிபாஸ்

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சுதேச வைத்தியத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக சுதேச வைத்தியத்துறை மூலிகைத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

நாட்டில் சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்தும் முகமாகவும், அதனை மக்கள் விரும்பி பயன்படுத்தக் கூடிய முறையிலும் பொது மக்களுக்கு அறிவூட்டுவதோடு சுதேச வைத்தியத்துறையை முன்னேற்றகரமாக எடுத்து செல்லப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஒவ்வொரு ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய மூலிகைகள் பலவற்றை நடுகை செய்து அவற்றை மக்களுக்கு அறிமுகம் செய்து அதற்கான நாற்றுகளை பெற்று கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

முதற்கட்டமாக காரைதீவு வைத்தியசாலையில் இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, சுதேச வைத்தியசாலைக்காக ஒரு அம்பியூலன்ஸ் வண்டியும் கையளிக்கப்பட்டுள்ளதோடு,



மருந்து உற்பத்தியை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஆயுர்வேத வைத்திய துறையை எமது முன்னோர்கள் பயன்படுத்திய கைமருந்துகளை அறிமுகப்படுத்துவதற்காக பாடசாலை மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற மூலினை நடுகை தினம் மற்றும் மாணவர்களை அறிவூட்டுவதற்கான விசேட பயிற்சி நெறிகள், பயிற்சி பட்டறைகள் மாணவர்கள் தெளிவு பெறும் நோக்குடன் வினா விடை நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அன்றாட அத்தியாவசிய தேவைக்கான மருந்துகளை நமது வீடுகளிலேயே உற்பத்தி செய்வதோடு, பக்க விளைவு அற்ற சுதேச வைத்தியத் துறையை மக்களுக்கு நெருக்கமாக கொண்டு செல்கின்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# தந்தை செல்வாவின் சிரார்த்த தினம் இன்று

(மட்டக்களப்பு விசேட,வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் 45வது சிரார்த்த தினம் இன்று (26) அன்னாரின் சிலை அமைந்துள்ள மட்டக்களப்பு வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கிளை ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, சிரேஷ்ட உபதலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பொன். செல்வராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தல், நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலரஞ்சலி என்பன இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் பெயரால் மண்முனை தென் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் சீ.புஷ்பலிங்கம் தலைமையில், அரசடித்தீவு கதிரொளி சிறுவர் இல்லத்தில் அன்னதானம் இடம்பெறும்.

# தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவு பொதி வழங்கி வைப்பு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் தெரிவு செயப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தியாவை சேர்ந்த அமெரிக்காவில் வசிக்கும் தனவந்தர் மூலம் ஆறு இலட்சம் ரூபா இச் செயற்றிட்டத்திற்கு பயன் படுத்தப்பட்டது.

இதில் 5 இலட்சம் ரூபாவுக்கு உலருணவு நிவாரணமும்,

ஓர் இலட்சம் ரூபாய் இப் பிரதேசத்தில் உள்ள மூன்று பள்ளிவாசல்களுக்கு இப்தார் நிகழ்வு மற்றும் கியாமுல் லைல் சஹர் உணவுக்காகவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அக்கரைப்பற்று பிரதேச சபை உதவித் தவிசாளர் எம்.ஐ.எம்.ஹக்கிம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் அதிதிகளாகக் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

எம்.ஐ.எம். ஹக்கீமின் பெரும் முயற்சியின் காரணமாக வருமானம் குறைந்த நூறு குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

# யாசகம் கேட்போர் தொகை அதிகரிப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கு முன்னால் நின்று கொண்டு யாசகம் கேட்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வங்கிகளில் பணம் பெறுவதற்காக வரும் வாடிக்கையாளர்களிடம் அவர்களின் வங்கி தேவை முடிந்து வங்கியை விட்டு வெளியேறும் போது கையேந்தி யாசகம் கேட்பதால் வாடிக்கையாளர்கள் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். வங்கியில் பணம் எடுக்கும் போது சில்லறை காசு இல்லாத சந்தர்ப்பங்களிலும் வங்கியில் பணம் எடுக்காத நிலைமையிலும் யாசகம் கேட்போருக்கு கொடுக்க பணம் இல்லாமல் திண்டாடும் சந்தர்ப்பத்தை வாடிக்கையாளர்கள் எதிர் நோக்கி வருகின்றனர்.

வங்கிகளுக்கு முன்னால் யாசகம் கேட்போரில் அதிகளவு பெண்களே காணப்படுகின்றனர்.

# மோகனதாஸின் இழப்பு கவலை அளிக்கிறது

## மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

துறைநீலாவணை பிரதேசத்தில் சிறந்த இளம் கலைஞரையும், ஊடகவியலாளரையும் இழந்துள்ளமை எனக்கு கவலையளிக்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், துறைநீலாவணை கிராமத்தில் துடிப்புள்ள ஊடகவியலாளராக பணியாற்றி,பலரது நன்மதிப்பை பெற்ற பாக்கியராசா மோகனதாஸ் காலமான செய்தி கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவனத்தின் பட்டதாரியான இவர், பட்டி தொட்டி எங்கும் சென்று பல செய்திகளை கோர்ப்புச் செய்து அதனை பத்திரிகைகளில் வெளியீட்டு மக்கள், ஊடகவியலாளர்கள், அரச உயரதிகாரிகள், அரசியல்வாதிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்ற இளம் ஊடகவியலாளராக திகழ்ந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர்கொண்டு வருகின்ற தேவைகள், குறைபாடுகள், அவலங்களை தனது பேனாமுனை ஊடாக வெளிப்படுத்தியதோடு, இலங்கையில் உள்ள தமிழ், முஸ்லிம் படைப்பாளிகள் 74 பேரை அன்போடு அணுகி அவர்களை நேர்காணல் மூலம் ஊடகங்களில் வெளிப்படுத்தியதோடு, மட்டுமன்றி அந்த நேர்காணலை ஒன்றிணைத்து "படைப்பிலக்கிய ஆளுமை" எனும் எழுத்துருவாக்கம் செய்து கடந்தமாதம் திருகோணமலையில் வெளியீட்டு



வைத்தமை பாராட்டுக்குரியதாகும். துறைநீலாவணை மண்ணில் சிறந்த இளம் கலைஞரையும், ஊடகவியலாளரையும் இழந்துள்ளமை எனக்கு கவலையளிக்கின்றது என அவர் வெளியீட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# பொது மக்களின் போராட்டத்திற்கு அரச உத்தியோகத்தர்களும் உதவ வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப்

கந்தளாய் தினகரன் நிருபர்

பொருட்களின் கண் மூடித்தனமான விலையேற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றைக் கண்டித்து பொதுமக்கள் முன்னெடுத்து வரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு சகல அரச உத்தியோகத்தர்களும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பொருளாதாரம் சின்னாபின்னமாகியுள்ளது. பொருட்களின் விலை நாளாந்தம் உயர்த்தப் படுகின்றது. இதனால் மிகப் பெரும்பான்மையான மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் தமது எதிர்ப்புகளை இந்த அரசுக்கு நாளாந்தம் நாடு முழுவதும் ஜனநாயக ரீதியில் தெரிவித்து வருகின்றனர்.

இந்த பொருளாதார சீரழிவினால் அரச உத்தியோகத்தர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தினமும் விலை உயர்கின்ற அளவுக்கு அவர்களது சம்பளம் உயரவில்லை. இதனால் பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் கடனுடனும், அரை வயிற்றுடனும் தற்போது தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். கௌரவம் கருதி அரச உத்தியோகத்தர்களால் இதனை வெளியில் சொல்ல முடிவதில்லை. பாதிக்கப்பட்டோர் என்ற வகையில் பொதுமக்கள் முன்னெடுத்து வரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு சகல அரச உத்தியோகத்தர்களும் ஜனநாயக ரீதியில் தமது ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டும் என்றார்.

# அட்டாளைச்சேனையில் எரிபொருள் நெருக்கடி தொடர்பான கலந்துரையாடல்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியினை கருத்தில் கொண்டும் , 2022 சிறுபோக நெற்செய்கையினை தாமதப்படுத்தாமல் துரிதப்படுத்தலுக்கான ஒழுங்குகளை முன்னெடுக்கும் பொருட்டு, மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கமைவாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர், விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.



இக்கலந்துரையாடலின் போது விவசாயிகள், பொதுமக்களின் நலன் கருதி அட்டாளைச்சேனை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களளின் உரிமையாளர்கள் மேற்கொள்ளப்பட வேண்டி பின்வரும் தீர்மாணங்கள் எடுக்கப்பட்டன.

1. பெற்றோல் வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகம் காலை 6.00 மணி முதல் பி.ப. 12.00 வரையும்

2.டீசல் பயன்படுத்தும் வாகனங்களுக்கான (உழவு இயந்திரம் தவிர்ந்த) டீசல் விநியோகம் பி.ப.3.00 முதல் பி.ப. 6.00 வரையும்

3.விவசாய நடவடிக்கைகளை தங்குதடையின்றி மேற்கொள்ளும் பொருட்டு உழவு இயந்திரங்களுக்கான டீசல் விநியோகம் மாலை 7.00 முதல் இரவு 9.00 வரையான காலப் பகுதிக்குள்ளும்

4.மண்ணெண்ணெய் விநியோகம் இரவு 9.00 முதல் நள்ளிரவு 12.00 வரையும் எரிபொருள் விநியோகம் இடம்பெற வேண்டும் என்றும்.

5. இந்த ஒழுங்குவிதிகள் மின்சார தடை காரணமாக மாற்றங்களுக்கு உள்ளானால் அவை மாலை 6.00 மணி முதல் ஈடு செய்யப்படுவதோடு.

6. பொலிசார் மற்றும் பாதுகாப்பு படையினர் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்வார்கள். இதற்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என பிரதேச செயலாளர் இதன் போது கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



அக்கரைப்பற்றில் இயங்கி வரும் "வோர்க்கஸ் யூனியனின்" வருடாந்த இப்தார் நிகழ்வு அண்மையில் நீர் பூங்கா வளாகத்தில் தலைவர் ஜெய்னுதீன் தலைமையில் நடைபெற்ற போது. (படம்;பாலமுனை தினகரன் நிருபர்)

# மூதூர் சுகாதார அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு கண்காணிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வரும் நிலையில், டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு செயலணி உத்தியோகத்தர்களினால் குடியிருப்புக்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பொது மக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டிய இந்நிலையில் குடியிருப்புக்கள், கூரைப்பீலிகள், கிணறுகள், நீர் தேங்கும் வடிகாண்கள், சிரட்டைகள் போன்ற பொருட்கள் காணப்படின் கண்காணிக்கப்பட்டு அவை குடியிருப்பாளர்களால் அகற்றப்பட்டும் வருகின்றன.

மேலும் மக்கள் அடிக்கடி உரிய அமைவிடங்களை சுத்தம் செய்யவும், நீர் தேங்கக் கூடிய இடங்களை வழிந்தோடச் செய்யவும் மற்றும் நுளம்புகள் பெருகக் கூடிய கழிவுப் பொருட்கள், அமைவிடங்களை கண்டறிந்தும் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு மக்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி குடியிருப்பாளர்கள் பற்றிய பதிவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. மாநகர சபையின் புதிய உறுப்பினராக சத்திய பிரமாணம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய உறுப்பினராக அப்துல் காதர் முகம்மட் லெத்தீப் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



மட்டக்களப்பு மாநகர சபையின் ஒரே ஒரு முஸ்லிம் உறுப்பினராக இருந்த நிப்லார் வெளிநாடு சென்றதையடுத்து அவரின் வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எம். எஸ்.சுபைர் எடுத்த முயற்சியினால் , கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயசிறி ஜெயசேகர இவருக்கான நியமனத்தை வழங்கியுள்ளார்.

கடந்த 2019இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாநகரசபைக்கான தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் ஆதரவுடன் மேற்படி லெத்தீப் 16ம் வட்டாரத்தில் வேட்பாளராக போட்டியிட்டியிருந்தார். இவர் சவுண்டஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆயுட்கால தலைவரும், 19ம் வட்டாரம் மஞ்சந்தொடுவாய் முகைதீன் ஜும்ஆப்பள்ளிவாசல் பொருளாளரும் சமூக செயற்பாட்டாளருமாவார்.

இவர் இலங்கை வங்கியின் முன்னாள் உத்தியோகத்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# யாழ்.வந்த அமெரிக்க தூதுவர் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பு







**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் சிவில் சமூக தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் மாலை பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்க தூதுவர், கொக்குவிலிலுள்ள தனியார் விடுதியொன்றில் தங்கியுள்ளார். இந்நிலையில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமி, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டனர்.

சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த அமெரிக்க தூதர், எந்தவொரு ஜனநாயகத்திலும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் உரிமைகளுக்காக வாதிடுவதில் சிவில் சமூகம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் குறித்து விவாதிப்பதற்கும் ஜனநாயக இலங்கைக்கான எமது ஆதரவை மீண்டும் வலியுறுத்துவதற்கும் நான் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகத் தலைவர்களைச் சந்தித்தேன் என்றார்.

அதேவேளை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை, இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங்கை யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பா சந்தித்து கலந்துரையாடினார். நேற்றைய தினம் திங்கட்கிழமை அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், வர்த்தக பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளையும் அமெரிக்கத் தூதுவர் சந்தித்து கலந்துரையாட திட்டமிட்டிருந்தார். அதற்கமைய இலங்கைக்கான அமொரிக்க தூதுவர் ஜீலி சுங் நேற்றைய தினம் யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டீன் பெர்னாட் ஞானப்பிரகாஷம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய நிலைமைகள் மற்றும் சமகாலப் போக்குகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நேற்றையதினம் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய நிலைமைகள் மற்றும் சமகாலப் போக்குகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## கொடிகாமத்தில் குழு மோதல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போக்கட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர். வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 17, 22, 19 மற்றும் 53 வயதுடைய நால்வர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அதில் ஒருவர் வைத்தியசாலையில் இருந்து தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தங்கச் சங்கிலி திருட்டு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போக்கட்டிப் பகுதியில் குடும்ப பெண்ணொருவரின் ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலி திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 23/04 சனிக்கிழமை கணவனுடன் மோட்டார் சைக்கிளில் செல்லும் போதே ஒன்றரை பவுண் சங்கிலி அறுக்கப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. கணவனுடன் பயணித்த பெண்ணை இரவல் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின் தொடர்ந்து சென்றவர்கள் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கொள்ளைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் அதன் உரிமையாளர் ஆகியோரை பொலிஸார் கைது செய்துள்ள போதிலும் சந்தேக நபர் தலைமறைவாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் நேற்றைய தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வருகை தந்த அமெரிக்க தூதுவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (யாழ்.விசேட நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை

## விபத்து தீவிர சிகிச்சை பிரிவுக் கட்டடம் திறந்து வைப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் நேற்று திங்கட்கிழமை காலை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை வளாகத்திலுள்ள ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து இரண்டு மாடிகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டயாழினி மகேந்திரன்,தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர், வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினர், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தாய்ச் சங்க செயலாளர் அற்புதசீலன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமார், வைத்தியர்கள்,பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு இயங்க ஆரம்பிக்கும் பட்சத்தில் பளை தொடக்கம் நாவற்குழி வரையான மக்கள் மற்றும் பூநகரி பிரதேச மக்கள் என சுமார் 80,000 மக்கள் இதனூடாக பயனடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்க ஒதுக்கீட்டிற்கு மேலாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடான புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தந்தை செல்வா நினைவு தினம், மேதினம் தொடர்பில் த.கட்சியின் கலந்துரையாடல்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம் மற்றும் மேதினம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், யாழ். வர்த்தக சங்கத்தின் தலைவர் என பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த சிறீதரன் எம். பி.,

வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உயர்மட்ட குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும் வடக்கு மாகாணத்தில் உலக தொழிலாளர் தினத்தை எழுச்சியுடன் மேற்கொள்வது என்ற தீர்மானம் எட்டப்பட்டது.

## இதுவரை 75 இலங்கையர்கள் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மற்றும் காக்கைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த 5 குடும்பங்களை சேர்ந்த 09 மாத குழந்தை உள்ளிட்ட 15 பேர் நேற்றைய தினம் திங்கட்கிழமை தனுஷ்கோடியை அண்மித்த கோதண்டராமர் கோவில் கடற்கரை பகுதியை சென்றடைந்துள்ளனர்.

அதுதொடர்பில் தகவலறிந்த ராமேஸ்வரம் கடலோர பாதுகாப்பு பொலிஸார் இவர்களை மீட்டு மண்டபம் கடலோர பாதுகாப்பு பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் போது, தாம் நெடுந்தீவு கடற்கரையில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை படகில் ஏறியதாகவும், படகு தம்மை அதிகாலை 3 மணியளவில் அப்பகுதியில் இறக்கி விடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.



அதேவேளை, இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தற்போது அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை, விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளன.

மருத்துவ பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசு மருத்துவமனையில் போதிய மருந்துகள் இல்லை. தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றால் காய்சல் தலை வலிக்கு 4 ஆயிரம் வரை வசூல் செய்கின்றனர். இதே நிலை நீடித்தால் இலங்கையில் பட்டினி சாவு ஏற்பட்டு, அனைவரும் உயிரிழக்க நேரிடும். எனவே உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் தேதி முதல் நேற்று வரை 75 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுத்தமான குடிநீர் இன்றி அவதியுறும் ஆனந்தபுர மக்கள்

### நீர் வழங்கல் வடிகாலமைப்பினால் குடிநீர் வழங்குவதில் தாமதம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் கிராம மக்கள் குடிநீரின்றி பலவருடங்களாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் நிலத்தடி நீர் உவர் நீராக காணப்படுகின்ற காரணத்தினால் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



2017ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முதலாவது குடிநீர் திட்டமாக ஆனந்தபுரம் தெரிவு செய்யப்பட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

இதன்பின்னர் அப்பகுதிகளுக்கான நீர் இணைப்பு வேலைகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்தது. எனினும் ஒரு நாள் நீர் வழங்கப்பட்டு நீர் குழாய்கள் சுத்திகரிக்கப்பட்ட போதும் இன்றுவரை அந்த குழாய் நீர் ஊடாக குடிநீர் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று இக்கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவிய காலப் பகுதியில் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஊடாக குடிநீர் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. எனினும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் குடிநீர் திட்டத்தை ஆரம்பித்ததன் பின்னர் அவர்கள் குடிநீர் வழங்கலை அவர்கள் நிறுத்தியுள்ளனர். இதனால் எந்த வகையிலுமே குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் ஆனந்தபுரம் மக்கள் திண்டாடி வருகின்றனர். நீர் வழங்குவதற்கான அனைத்து வேலைகளும் முடிந்ததும் இன்று வரை குடிநீர் கிடைக்கவில்லை எனவும் இதனால் பல்வேறு இன்னல்களை முகங்கொடுத்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். தமக்கு நீர் இணைப்புகள் வழங்கப்பட்டும் பயனில்லை.

எனவே மிக விரைவாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நகர்வலம்



### ஹம்பாந்தோட்டை மாநகர சபை

## பிரதி மேயர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தி காமினி 11 வாக்குகளால் தெரிவு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் பிரதி மேயர் பதவி ஐக்கிய மக்கள் சக்தி வசமானது. மேற்படி மாநகர சபையின் பிரதி மேயர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து போட்டியிட்ட முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் டி. ஏ. காமினி கூடுதல் வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை மாநகர சபைக்கு பிரதிமேயர் ஒருவரை தெரிவு செய்வதற்கான விசேட கூட்டம் ஹம்பாந்தோட்டை மாநகர சபையில் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சேனக பள்ளியகுருகே தலைமையில் (20) நடைபெற்றது.

ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் தந்போதைய மேயராக பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த காமினி ஸ்ரீ ஆனந்த கடமையாற்றி வருவதோடு வெற்றிடமாக இருந்த பிரதி மேயர் பதவிக்கு வாக்கெடுப்பு நடைபெற்றது. இதன் போது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து போட்டியிட்ட முன்னாள் மாநகர சபை எதிர்கட்சித் தலைவர் டி. ஏ. காமினி கூடுதல் வாக்குகளைப் பெற்று பிரதி மேயர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து போட்டியிட்ட டி.ஏ. காமினி 11 வாக்குகளையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து போட்டியிட்ட எஸ். பீ. பீ. புஷ்பகுமார 08 வாக்குகளையும் பெற்றனர்.

தற்போதைய பிரதி மேயரான டி. ஏ. காமினி ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### 2023ஆம் ஆண்டுக்கு

## சனத்தொகை மற்றும் வதிவிட மதிப்பீடுகள் மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை

### இறுதியாக 2011ம் ஆண்டே கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது

**(வெலிகம தினகரன் நிருபர்)**

எதிர்வரும் 2023ம் ஆண்டுக்கான சனத்தொகை மற்றும் வதிவிட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கொரோனா தொற்று காரணமாக கடந்த 2021ம் ஆண்டு மேற்கொள்ள வேண்டிய சனத்தொகை மற்றும் வதிவிட மதிப்பீடுகள் மேற்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக இம் மதிப்பீட்டுப் பணிகள் 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முதல் முறையாக மடிக்கணனி மூலம் சனத் தொகைக் கணிப்பீடு மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக காலி மாவட்ட புள்ளி விபரவியல் திணைக்கள அதிகாரி டி.பி. ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

இதுவரை, அபிவிருத்தியடைந்த நாடுகளில் தொழில்நுட்பவியல் மூலம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இலங்கையில் முதன் முறையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் வரையறை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த சில மாதங்களில் மடிக்கணனி மூலம் கணிப்பீடு செய்யும் முறைமை பற்றி அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் முதன் முறையாக சனத்தொகை வதிவிட மதிப்பீடு 1871ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு 10 வருடங்களுக்கு ஒருமுறை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. எனினும் நாட்டின் சுகாதார சூழ்நிலை காரணமாக 1991ம் ஆண்டு கணிப்பீடு இடம் பெறவில்லை. இறுதியாக நாட்டில் 2011ஆம் ஆண்டே கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அவ்வமயம் நாட்டின் சனத்தொகை 2,0263723 ஆகும். அதில் பெண்கள் 52 சதவீதமும் ஆண்கள் 48 சதவீதமும் காணப்பட்டனர். எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள சனத் தொகை மதிப்பீடு நாட்டின் 15வது முறையாக மேற்கொள்ளும் கணிப்பீடாகும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### அநுராதபுரம் மாவட்டத்தில்

## 70 குளங்களை அபிவிருத்தி செய்ய உலக வங்கி நிதி

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

ஹொரவப்பதான, கஹட்டகஸ்திகிலிய, ஹிங்குரங்கொட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 70 குளங்களை இவ் வருடத்திற்குள் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக "தேச குனிக்க வாரி சுகுறு" வேலைத்திட்டப் பிரிவு தெரிவித்துள்ளது. உலக வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

சிறிய குளங்களை அபிவிருத்தி செய்யும் வேலை திட்டத்தின் கீழ் இவ் வேலை திட்டத்தை நடைமுறைப் படுத்துவதோடு, இவ் வருட சிறுபோக மற்றும் பெரும் போக விவசாய நடவடிக்கைகளுக்கான நீர் பாசன வசதியை பெற்றுக் கொடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

இதற்காக உலக வங்கி 500 மில்லியன் ரூபா பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளதாக 'வாரி சுகுறு' அபிவிருத்தி திட்டப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## நீர்கொழும்பு எரிபொருள் நிலையத்தில் பொது மக்கள் நீண்ட கியூ வரிசை

**(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**



நீர்கொழும்பு நகரத்தில் அமைந்துள்ள கிறீன்ஸ் வீதி எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் நீண்ட கியூ வரிசையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை முதல் வாகன சாரதிகள் தமது வாகனங்களை நீண்ட கியூ வரிசையில் நீர்கொழும்பு கிறீன்ஸ் பிரதான வீதி வழியே நிறுத்தி வைத்திருந்தனர். மதியம் 12 மணி வரை பொதுமக்கள் மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்வதற்காக தமது கைகளில் பிளாஸ்டிக் கொள்கலன்களை ஏந்தியவாறு வீதியில் ஒன்றுசேர்ந்து இருந்ததனால் வாகனப் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் வாகனப் போக்குவரத்துப் பிரிவின் பொலிஸார் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளையும் இதன்போது மேற்கொண்டனர்.

### புத்தளம் நகர சபை பிரதேச

## ஆட்டோக்களுக்கு தரிப்பிட கட்டணம் அறவிடப்படாது

### நகர பிதா ரபீக் தெரிவிப்பு; சங்கம் பாராட்டு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் நகர சபை எல்லைக்குட்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிட சாரதிகளுக்கு மறு அறிவித்தல் வரை நகரசபையினால் எவ்வித தரிப்பிட கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது என புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் அறிவித்துள்ளார்.

புத்தளம் நகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் தரித்து நின்று சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டி ஒன்றுக்கு நாளாந்த தரிப்பிட கட்டணமாக 20 ரூபாவை நகர சபை அறவிட்டு வருகிறது.

இந்த நிலையில், நாட்டில் தற்பொழுது நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சலுகை வழங்கும் நோக்கில் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக நகர பிதா குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளை அறிந்து இவ்வாறான சலுகையை வழங்கியதையிட்டு முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம், புத்தளம் நகரபிதாவுக்கு வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

## இடைக்கால அரசை உருவாக்கும் ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கிறேன்



மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று இடைக்கால அரசொன்றை அமைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடன்பட்டுள்ளதை ஐக்கிய காங்கிரஸ் கட்சி உலமா கட்சி வரவேற்பதாக கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போதுள்ள அரசியல், பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண இடைக்கால அரசை அமைக்குமாறு மகாநாயக்க தேரர்கள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி செவி மடுத்திருப்பது நல்லதொரு விடயமாகும்.


அத்துடன் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் பாராளுமன்றம் ஊடாக அரசியலமைப்பில் திருத்தங்களை செய்வதற்கும் ஜனாதிபதி உடன்பட்டுள்ளதானது இப்பிரச்சினைகளை ஓரளவு தீர்க்கும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வரும் போது இனவாதங்களுக்கும் மதவாதங்களுக்கும் எதிராக சட்டங்கள் கொண்டு வரப்பட்டு ஒரு இனத்துக்கெதிராக அல்லது மதத்துக்கெதிராக பேசுவோர் எழுதுவோருக்கு ஐந்து வருட சிறைத்தண்டனை விதிக்கும் வகையிலும் சட்டம் கொண்டு வர வேண்டும் என்பதையும் ஜனாதிபதியின் கவனத்துக்கு தாம் கொண்டுவந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜே.ஆரின் யாப்பை திருத்துவதை தவிர்த்து புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம்

### இளைஞர் பிரச்சினைக்கும் இதுவே தீர்வு

**(ராஜகிரிய குறூப் நிருபர்)**



நாட்டில் சகல இனங்களும் ஐக்கியமாக வாழும் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது பற்றிச் சிந்திக்காமல், ஜே.ஆர் ஜெயவர்தனவின் அரசியலமைப்பில் தொடர்ந்தும் திருத்தங்களை கொண்டு வருவது பற்றி யோசிப்பதால், வீதியில் போராடும் இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாதென தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாஉல்லா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் அவர் அண்மையில் உரையாற்றுகையிலே இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு பேசிய அவர்.

எல்லோரும் ஐக்கியமாக வாழும் அரசியலமைப்பு உருவாக்கப்படுவது அவசியமென பல தடவைகள் எமது கட்சி பாராளுமன்றத்தில் கூறி வருகிறது. ஆனால், இதைவிடுத்து ஜே.ஆரின் அரசியலமைப்பை திருத்துவதிலே கவனம் செலுத்தப்படுகிறது. 18,19 மற்றும் இருபது என எத்தனையோ திருத்தங்கள் இந்த யாப்பில் செய்யப்பட்டுள்ளன. போதாதற்கு 21 ஆவது திருத்தத்தை கொண்டு வரவும் யோசிக்கின்றனர். இந்த திருத்தங்கள் எல்லாம் இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது. இன்று வீதியில் போராடும் இளைஞர்களின் தேவை என்ன? எதிர்காலத்துக்கு வழிகாட்டுமாறே அவர்கள் கோருகின்றனர். இவர்களின் கோரிக்கைகளில் இனவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்கள் இன ஒற்றுமைக்கான பிரதிபலிப்புக்களையே வெளிப்படுத்துகின்றன.

இவைகளை காதுகளால் கேட்பதற்கே சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் பாராளுமன்றத்தில் மாத்திரம் இன்றும் இனவாதம் இருக்கவே செய்கிறது. இதுதான் கவலை. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை, டொலர் நெருக்கடிகளுக்கு இந்தப் பாராளுமன்றத்திலே தீர்வு காணப்பட வேண்டும்.

இடைக்கால அரசாங்கம் பற்றியும் பேசுகின்றனர். எந்த அரசாங்கமானாலும் பாராளுமன்றம்தான் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும். மாறாக அடுத்து வரும் தேர்தலில் அதிக ஆசனங்களை வெல்லலாம் என்ற நோக்கில் அடுத்த தேர்தலைப் பற்றி யோசிக்க கூடாது. எமது நாட்டில் எந்த வளங்கள் இல்லை. நன்றாக மழைபொழிகிறது, சிறந்த விவசாயிகள் உள்ளனர்.

இயற்கை நிலங்களிருக்கின்றன. இவற்றை வைத்துக் கொண்டு எமது ஒவ்வொரு இளைஞர்களையும் எம்மால் கோடீஸ்வரர்களாக்க முடியும். ஆனால், இதற்கான பொருளாதார திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம் என்றார்.

## மறைந்த சாதுலியா ஆன்மிக தலைவருக்கு துஆ பிரார்த்தனை

**பேருவளை விசேட நிருபர்**



அண்மையில் இறையடி சேர்ந்த சாதுலியா தரீக்காவின் உலக ஆன்மீக தலைவர் மர்ஹூம் சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ்ஷாதுலி (ஷேய்குஸ் ஸஜ்ஜாதா ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்களின் பெயரிலான கத்தமுல் குர்ஆன் தமாம் வைபவமும் புனித ரமழான் மாத விஷேட ஸலவாத் மஜ்லிஸும் இப்தார் நிகழ்வும் (21) வியாழக்கிழமை மாலை அஸர் தொழுகையை தொடர்ந்து பேருவளை பெலஸ்பாத் ஷாதுலியா ஸாவியாவில் நடைபெற்றது.

ஸாவியா பிரதம இமாம் மௌலவி முகம்மத் ஹபீல்தீன் தலைமையில் நடைபெற்ற இம்மஜ்லிஸில் மௌலவி எம்.எஸ்.எம். பாசில் (அஷ்ரபி) துஆ பிரார்த்தனை பிரிந்தார். ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் இக்பால் ஸம்ஸுதீன் (ஜே.பி) தலைமையிலான நிர்வாக சபை உறுப்பினர்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

இறையடி சேர்ந்த சங்கைக்குரிய ஷேய்கு நாயகம் மற்றும் கலீபதுல் குலபா மர்ஹூம் மௌலவி அப்துல் ஹமீத் (பஹ்ஜி) ஆகியோரின் ஆன்மீக, சமய பணிகள் தொடர்பாக இங்கு பலரும் ஞாபகமூட்டி பேசினர்.

இந்நிகழ்வில் உலமாக்கள் உட்பட சாதுலியா இஹ்வான்களும் கலந்து சிறப்பித்தனர்.

## உமர் அய்யாஷ் 168 புள்ளிகள்



அண்மையில் வெளியான 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் மொஹமட் சுகைல் உமர் அய்யாஷ் (168 புள்ளிகள்) பெற்று சித்தியடைந்துள்ளார்.

இம்மாணவன் பரீட்சையில் சித்தி பெற அர்ப்பணிப்புடன் கல்வி வழிகாட்டல்களை வழங்கிய பாடசாலை ஆசிரியர்கள் உட்பட சம்பந்தப்பட்டோருக்கு மாணவனின் தகப்பனார் மொஹமட் சுகைல் நன்றி தெரிவித்துள்ளார்.

## கொழும்பு மாவட்ட இமாம்களுக்கும் ரமழான் கால உலர் உணவுபொதிகள்

**(புதிய காத்தான்குடி விசேட நிருபர்)**



புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு கனடியன் ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் அலையன்ஸினால் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்களில் கடமையாற்றும் இமாம்களுக்கு நோன்புக்கான பெறுமதியான உலருணவுப் பொதிகள் அண்மையில் ஸ்ரீலங்கா கதீப் முஅத்தின் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டது.

கதீப்மார் முஅத்தின்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இன்றைய காலகட்டத்தில் பொருளாதார விலைவாசி ஏற்றத்திற்கு முன் மஸ்ஜித் நிர்வாகங்கள் கொடுத்த அதே சம்பளத்தையே இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் குடும்ப வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார விலைவாசியைக் கருத்திற் கொண்டு மாத சம்பளத்தை அதிகரித்துக் கொடுக்க ஒவ்வொரு மஸ்ஜித் நிர்வாகிகளும் முன்வர வேண்டும் என ஸ்ரீலங்கா கதீப் முஅத்தின் நலன்புரி அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ. அப்துல் ஜப்பார் இதன்போது தெரிவித்தார்.

மேலும் அவர், கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா கதீப் முஅத்தின் நலன்புரி அமைப்பு தேசிய ரீதியாக அதன் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தேசிய காப்புறுதி திட்டமொன்றை ஏற்படுத்தி அதன் மூலம் பல நிவாரணங்களையும் பெற்றுக் கொடுத்து வருகிறது.

கனடியன் ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் அலையன்ஸின் ஸ்ரீலங்காயங் முஸ்லிம் மகளிர் சங்கத்தின் தலைவி திருமதி டொக்டர் பவாஸா தாஹா உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### சேதன பசளை உற்பத்தியில் ஈடுபடும்

## தென் மாகாண விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு

**(மாத்தறை தினகரன் நிருபர்)**

மாத்தறை – கம்புறுபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் சிறிய அளவில் சேதனப்பசளை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தேவையான உபகரணங்கள் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தலைமையில் (23) கம்புறுபிடிய பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது வழங்கி வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயி ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 36 விவசாயிகளுக்கு 3,60,000 ரூபா பெறுமதியான உபகரணங்களை முன்னாள் அமைச்சர் வழங்கி வைத்தார்.

பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி அதிகாரி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர். விவசாய அபிவிருத்தி அதிகாரிகளின் சிபாரிசின் பேரிலேயே இவைகள் வழங்கி வைக்கப்பட்டன.

சேதனப்பசளை உற்பத்தியை அதிகரித்து மரக்கறி உற்பத்தியை மேலோங்கச் செய்து மக்களுக்கு நஞ்சற்ற உணவுப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும் என்றும் முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும இதன்போது தெரிவித்தார்.

# இரக்கத்திலிருந்து அன்பும் அன்பிலிருந்து தியாகமும் ஊற்றெடுக்கின்றன

## 'இறைஇரக்க' ஞாயிறு தரும் வாழ்க்கைப் படிப்பினை

நம் அன்னையாம் திருஅவை கடந்த ஞாயிறை 'இறைஇரக்கத்தின்' ஞாயிறாகக் கொண்டாடியது. இறைவனின் பிறப்பு, இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகிய மூன்றுமே அவருடைய இரக்கத்தின் வெளிப்பாடுகள்தாம் என்பதை நாம் சுருக்கமாகக் கூறிவிட முடியும்.

மீட்பின் வரலாற்றில் பழைய ஏற்பாடு முழுவதும் இறைதந்தையின் இரக்கச் செயல்களையும் புதிய ஏற்பாடு முழுவதும் அவருடய அன்பு மகன் இயேசுவின் இரக்கப்பெருக்கத்தையும் அவருடைய விண்ணேற்றத்திற்குப் பின்பு திருத்தூதர்கள் வழியாகச் செயல்பட்ட தூய ஆவியாரின் இரக்கச் செயல்களையும் நம்மால் காணமுடிகிறது.

மூவொரு இறைவனின் இரக்கத்தால் இவ்வுலகம் முழுவதும் நிரப்பப்பட்டுள்ளது. இரக்கம் காண்பிக்கும் அனைவரும் இரக்கம் பெறுகின்றனர்.

அன்று அரசரின் பிறந்த நாள். சிறைக் கைதிகளில் ஒருவனை விடுவிக்கவேண்டும் என்று மனதில் தீர்மானம் கொண்டார் அரசர். ஆனால் யாரை விடுவிப்பது என்பது குறித்து அவருடைய மனதில் குழப்பம் நிலவியது. தன் திட்டத்தை தன் தலைமைக் குருவிடம் இரகசியமாகப் பகிர்ந்தார் அரசர்.

அதைக் கேட்ட அந்த குரு அவருக்கு சிறந்த ஆலோசனை ஒன்றை வழங்கினார்.. அரசருக்கு அது திருப்தியாக இருந்தது. அதன்படி சிறைக் கைதிகள் எல்லோரும் அழைக்கப்பட்டனர். "உங்களை அரசர் விடுவிக்கப்போகிறார். அதற்காக இந்தப் பெட்டியில் ஆளுக்கொரு முத்திரை சீட்டு கொண்டு வந்திருக்கிறேன். மாலையில் அரசவைக்கு வந்து இந்த முத்திரை சீட்டைக் காண்பித்து நீங்கள் விடுதலைப் பெற்றுச் செல்லுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றார் அந்த மதகுரு.

அதன்படி மாலையில் எல்லா கைதிகளும் முத்திரை சீட்டுடன் வந்தனர். ஒருவர் மட்டும் வரவில்லை. அப்போது அரசர் இங்கு வராத அந்தக் கைதியை உடனே அழைத்து வாருங்கள் என்றார். காவலர்கள்



அவரை அழைத்து வந்து அரசர் முன் நிறுத்தினர். அப்போது, "எல்லோரும் வந்துவிட்டார்கள். நீ மட்டும் ஏன் வரவில்லை? உன்னைத் தனியாக அழைக்க வேண்டுமா?" என்று அக் கைதியைப் பார்த்து கேட்டார் அரசர்.

அதற்கு அக் கைதி. "அரசே, உங்கள் மதகுரு கொடுத்த முத்திரை சீட்டில் ஒரு கைதிக்கு முத்திரை சீட்டு குறைவாக இருந்தது. அதோ அந்தப் பக்கம் நிற்கிறாரே கைதி. அவருக்கு மனைவி, குழந்தைகள் மட்டுமல்ல. வயதான பெற்றோரும் உள்ளனர்/. ஏதோ சந்தர்ப்பச் சூழ்நிலை அவரைக் கைதியாக்கிவிட்டது.



அவரின் நிலையை நான் தெளிவாக அறிந்திருக்கிறேன். அவருக்குத்தான் முத்திரை சீட்டுக் கிடைக்கவில்லை. ஆகவே எனக்குக் கிடைத்த முத்திரை சீட்டை அவருக்குக் கொடுத்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் அரசே" என்று கூறினான்.

"நல்லது, நீயே சிறந்தவன், உன்னைத்தான் நான் விடுதலை செய்யப்போகிறேன், இவ்வளவு இரக்கமுள்ள நீ சிறையில் இருப்பது நியாயமல்ல" என்று கூறி குரு தந்த ஆலோசனையைப் பாராட்டினார் அரசர்.

மேலும், அந்தக் கைதியைப் பார்த்து "உனது நல்ல குணத்திற்கு நான் பரிசளிக்க விரும்புகின்றேன். உனது விருப்பத்தைக் கூறு அதை நான் நிறைவேற்றுகிறேன்" என்றார் அரசர்.

அப்போது அக் கைதி தயங்கியவாறே "அரசே, நான் விடுதலை பெற்றால் யார் விடுதலை பெறவேண்டுமென நான் நினைத்தேனோ அவன் விடுதலைப் பெற முடியாதே. ஆகவே அவனின் விடுதலையை எனக்குப் பரிசாகக் கொடுங்கள்" என்று அரசரைப் பார்த்து வேண்டினான்.

அவனது பதிலால் உள்ளம் பூரிப்படைந்த அரசர் "சரி, உன் விருப்பப்படி, நீ கேட்டுக் கொண்டவரையே நான் விடுதலை செய்கிறேன். ஆனால், இனி உனக்கு எப்போதும் விடுதலை கிடையாது" என்றார்.

உடனே குரு வருத்தமுடன் அரசரை உற்றுநோக்கினார். அப்போது அரசர், "ஆம், உன்னை சிறையிலிருந்து நான் விடுவிக்கப் போவதில்லை. ஆனால், உனது இரக்கச் செயலுக்காக உன்னை சிறைத் துறைக்கு அதிகாரியாக உயர்த்துகிறேன்" என்று மகிழ்வோடு கூறினார்.

"மேலும் பிறர்மீது இந்தளவுக்கு இரக்கம் கொண்டுள்ள நீ, சிறைத் துறையின் அதிகாரியாக இருந்தால் சிறையில் உள்ள அனைவரும் திருந்தி வாழ்வதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு" என்று கூறி உளம் பூரித்தார் அரசர். அப்போது அரசவை முழுவதும் மகிழ்ந்தது, அரசரின் பிறந்த நாளும் சிறப்படைந்தது. ஆம் இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுகிறார்கள்.

இன்றைய உலகில் நிகழும் அநீதி, சாதி, மத, இன, மொழி, வேறுபாடுகள், போர், கொலை, கொள்ளை, போதைப்பொருள், பாலியல் வன்மங்கள், மனிதக் கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் ஆகிய யாவும் இரக்கமற்றச் செயல்களின் அடையாளங்களாக அமைகின்றன. யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன, நானும் என் குடும்பத்தாரும், சுற்றத்தாரும் நலமோடு வாழ்ந்தால் போதும் என்ற சுயநலக் கோட்டைக்குள் நம்மில் பெரும்பாலோர் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். வாய்விட்டுக் கூற முடியாத செயல்கள் யாவும் இரக்கமற்ற அரக்கக் குணங்களின் வெளிப்பாடுகளே. அன்பும் கருணையும் நமது பிறப்பிலே இயல்பாகவே இருந்ததுதான். காலப்போக்கில் நாம்தான் அதனைத் தொலைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருக்கிறோம். 'இறக்கத்தானே பிறந்தோம் அதுவரையில் இரக்கத்துடன் வாழ்வோம்' என்றார் அன்னை தெரசா. இரக்கத்திலிருந்து அன்பும் அன்பிலிருந்து தியாகமும் ஊற்றெடுக்கின்றன. இரக்கமில்லாத அன்பும் அன்பில்லாத தியாகமும் இருக்கவே முடியாது. பணம் உலகத்தைக் கவரும், அழகு உள்ளதை கவரும் வார்த்தைகள் மனிதரைக் கவரும் ஆனால் நமது இரக்கம் நிறைந்த செயல்தான் நம்மை உருவாக்கிய இறைவனைக் கவரும். ஆகவே, இரக்கத்தின் மறுஉருவான இயேசுவின் வழியிலே நாமும் இரக்கமுள்ள மக்களாய் வாழ்வோம்.

அருட்பணி
செல்வராஜ் சூசைமாணிக்கம்....




# "நம்புங்கள் வாழ்வு பெறுவீர்கள்"



இறை இரக்கத்தின் ஞாயிறு என அழைக்கப்படும் பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு நாம் வாசித்த இறைவார்த்தை "நம்புங்கள்; வாழ்வு பெறுவீர்கள்" என்ற சிந்தனையைத் தருகின்றது.

இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் மிகவும் துணிச்சலானவர் தோமா என்று உறுதியாகச் சொல்லலாம். ஏனெனில், "மீண்டும் யூதேயாவிற்குப் போவோம், வாருங்கள்" என்று இயேசு சொன்னதற்கு மற்றவர்கள் "இப்போதுதானே யூதர்கள் உம் மேல் கல்லெறிய முயன்றார்கள். மீண்டும் அங்கு போகிறீரா?' என்று தயங்கினார்கள்.

தோமாவோ "நாமும் செல்வோம். அவரோடு இறப்போம்" (யோவா 11:16) என்று சொன்னார். அப்படிப்பட்டவர் இயேசு உயிர்த்தெழுந்ததையும் தங்களுக்கு அவர் காட்சியளித்ததையும் பற்றி மற்றவர்கள் சொன்னதைக் கேட்டு "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்ப மாட்டேன்" என்கிறார்.

தோமாவின் இவ்வார்த்தைகள் நான் இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று இயேசு சொன்னதையும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவை நேரில் கண்டவர்கள் சொன்னதையும் நம்பாததை வெளிப்படுத்தினாலும் அவை முழு உண்மையை அறிந்து



கொள்வதற்கான தோமாவின் தேடல் என்றும் புரிந்துகொள்ளலாம்.

அதையடுத்து உயிர்த்த ஆண்டவர் இயேசு மீண்டுமாகத் திருத் தூதர்களுக்குத் தோன்றியபோது "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்" என்று தோமா தனது நம்பிக்கையை அறிக்கையிடுகின்றார்.

இயேசுவை ஆண்டவர் என்றும் கடவுள் என்றும் தோமா அறிக்கையிட்டது மட்டுமல்லாமல் அவருக்காகத் தன் உயிரையும் இழக்கின்றார். இவ்வாறு தோமா ஆண்டவர்மீது கொண்ட நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

அன்பின் பல பரிமாணங்களில் ஒன்று நம்பிக்கை. ஏனெனில் அன்பு இருக்கும் இடத்தில் நம்பிக்கை தானாகவே வரும். நம்பிக்கை இருக்கும் இடத்தில் அன்பும் தானாகவே வரும்.

இயேசுவை மிகவும் அன்பு செய்தவர் அவரால் மிகவும் அன்பு செய்யப்பட்டவர் நற்செய்தியாளரான யோவான். இவர் இயேசுவின்மீது கொண்ட நம்பிக்கையினால் அவருக்குச் சான்று பகர்ந்ததற்காகப் பத்மூ தீவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்.

தற்போதைய துருக்கியில் உள்ள பத்மூ தீவிற்கு அனுப்பி வைக்கப்படும் யோவான் அங்கே பலவிதமான துன்பங்களை அனுபவித்திருக்கவேண்டும். அவையெல்லாம் யோவான் இயேசுவின்மீது கொண்ட நம்பிக்கையின் பொருட்டே என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இன்றைய நற்செய்தியின் இறுதியில் யோவான் "நீங்கள் நம்புவதற்காகவும் நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவே இந்நூலில் உள்ளவை எழுதப்பட்டுள்ளன" என்கிறார். யோவான் இவ்வார்த்தைகளை எழுதியது மட்டுமல்லாமல் இயேசுவின்மீது நம்பிக்கை கொண்டார். அந்த நம்பிக்கைக்காகப் பல்வேறு துன்பங்களைத் தாங்கிக் கொண்டு முடிவில் நிலைவாழ்வைப் பெற்றுக்கொண்டார். ஆதலால் நாம் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்வதும் அவர் பொருட்டுத் தாங்கிக் கொள்வதும் இன்றியமையாதவை.

தனது உயிருக்கு அஞ்சி இயேசுவை மறுதலித்த பேதுரு இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு அவர்மீது ஆழமான நம்பிக்கை கொண்டவராய் பல அருளடையாளங்களையும் அருஞ்செயல்களையும் செய்கின்றார். அவரது நிழல் நோயாளர்கள்மீது பட வேண்டும் என்று சிலர் அவர்களை வீதிகளில் வைக்கின்றார்கள். இவ்வாறு பேதுருவின் நிழல் பட்ட நோயாளர்கள் அனைவரும் நலம் பெறுகின்றார்கள். இதைத்தான் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஞாயிறு முதல் வாசகம் எடுத்துக் கூறுகின்றது.

ஒருகாலத்தில் பேதுருவால் கடல்மீது நடந்து வரமுடியாமல் போனபோது, "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?' (மத் 14:31) என்று இயேசுவால் கடிந்துகொள்ளப் பட்டிருக்கலாம்; ஆனால், அதே பேதுரு இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு அவர்மீது ஆழமான நம்பிக்கை கொண்டவராய்ப் பல அருமடையாளங்களைச் செய்தார். இதுதான் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்வோருக்கு அவர் அளிக்கும் பேறுபலன்.

இன்றைக்குப் பலர் இயேசுவின்மீது ஆழமான நம்பிக்கை கொள்வதுமில்லை; அவர் பொருட்டுத் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதுமில்லை. எப்போது நாம் உயிர்த்த ஆண்டவர் இயேசுவின்மீது ஆழமான நம்பிக்கை கொள்கின்றோமா அப்போது நாம் தோமாவைப் போன்று யோவானைப் போன்று பேதுருவைப் போன்று இயேசுவின் பொருட்டுத் துன்பங்களைத் தாங்கிக்கொள்ள முன் வருவோம். அதைப் பார்க்கும் ஆண்டவரும் நமக்குத் தக்க கைம்மாறு தருவார்.

எனவே, நாம் உயிர்த்த ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு அவர் பொருட்டுத் துன்பங்களைத் தாங்கிக்கொள்ள முன் வருவோம்; அவர் அளிக்கும் ஆசியைப் பெறுவோம்.

'நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க முடியாது' (எபி 11:6) என்பார் எபிரேயர் திருமுகத்தின் ஆசிரியர். எனவே நாம் உயிர்த்த ஆண்டவரில் ஆழமான நம்பிக்கை கொண்டு வாழ்ந்து, அவர் பொருட்டு துன்பங்களைத் தாங்கிக் கொள்ள முன்வருவோம். அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

அருட்பணி
மரிய அந்தோனிராஜ்...

# புனித திரேசாள் ஆலய பரிசுத்த வார வழிபாடுகள்



கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித திரேசாள் ஆலயத்தில் இம்முறை பரிசுத்த வாரத்தின் வழிபாடுகள் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பங்குத்தந்தை வண. சந்தன பெரேரா அடிகளாரின் தலைமையில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொது நிலையினரின் பங்களிப்புடன் சிறப்பாக அனைத்து திருப்பலி, புனித வார சடங்குகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன.

அருட்தந்தையர்களான சதீஷ், ஜெயசீலன், பிரான்சிஸ் ஆகியோரின் வழிநடத்தலில் பரிசுத்த வாரத்தின் பெரிய வியாழன், புனித வெள்ளி அல்லேலூயா சனி, உயிர்ப்புப் பெருவிழா திருப்பலி மற்றும் வழிபாடுகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டன. பரிசுத்த வாரம் குருத்தோலை ஞாயிறோடு ஆரம்பிப்பதுடன் பெரிய வியாழன் புனித வெள்ளி, அல்லேலுயா சனி என தொடர்ந்து உயிர்ப்புப் பெருவிழா சிறப்புத் திருப்பலியுடன் நிறைவு பெறுகிறது. இம்முறை பரிசுத்த வார வழிபாடுகள் மற்றும் சடங்குகளில் பெருமளவிலான விசுவாசிகள் கலந்து கொண்டதுடன் அருட் தந்தையர்கள் அனைத்து வழிபாடுகளையும் சிறப்பாக முன்னெடுத்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.நம் ஆண்டவர் இயேசுவின் திருப் பாடுகளைத் தியானிக்கும் நிகழ்வுகள் மற்றும் சடங்குகள் உயிர்ப்பு பெருவிழா சிறப்புத் திருப்பலி இவற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இம்முறை இந்த பங்கின் மக்கள் தவக்கால திருயாத்திரைகளை ஹினிதுமைக்கும் தேவத்தைக்கும் மேற்கொண்டிருந்தனர். இம்முறை நடைபெற்ற அனைத்து வழிபாடுகளிலும் திருப்பலிகளிலும் பீடப் பணிகளில் ஈடுபடுவோர் மற்றும் பாடல் குழுவினரின் பங்களிப்பு சிறப்பாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல், படங்கள்: எல்.செல்வா
















# காலிமுகத்திடலிலிருந்து இளைஞர்கள் விடுக்கும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்

(அக்குறணை குறூப் நிருபர்)

காலிமுகத்திடலிலிருந்து இளைஞர்கள் விடுக்கும் கோரிக்கையை, நாட்டின் தலைவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்பது புலனாவதாக 'பெப்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகன ஹெட்டியாரச்சி தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை தீர்ப்பது தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரதிகளை, மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களுக்கு கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வேளையிலே,அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டியில் (24) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் அரசியல் ஸ்திரம் ஏற்படுத்தப்பட்டு அதனுடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

இதற்கு,இடைகால அரசொன்றை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே ஒன்றிணைந்த தேசிய அரசு ஒன்றை நிறுவுதல், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை அகற்றுதல், அரசியலமைப்பின் 19 வது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருதல் போன்ற புதிய அரசியலமைப்பு திருத்தம் அவசியம்.இதை,

உருவாக்குவது தொடர்பாகவே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.காலிமுகத்திடலில் இளைஞர்கள் நடாத்தும் ஆர்பாட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்று அதிகாரம் கொண்டவரும் அதனை நிர்வகிப்பவர்களும் சரியாகப் புரிந்துகொள்ளவில்ல என்பது தெளிவாகிறது. இதன் காரணமாக நாட்டனை' பிரச்சினைகள் மேலும் அதிகரித்துச் செல்கின்றன.

பொதுமக்களின் கருத்துக்களை புறம் தள்ளிவிட்டு, அரசாங்கம் எதனையும் முன்னெடுக்க முடியாது. எனவே சர்வ கட்சிகளதும் கருத்துக்கள் பெறப்பட வேண்டும். அதற்கான ஒரு வழிமுறை அவசியமாகிறது. தற்போதைய நிலைக்கு முறையான தீர்வைப் பெற்றுக் கொள்ளாது மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மட்டும் வைத்துக் கொண்டு எத்தகைய திட்டங்களையும் முன் எடுக்க முடியாது,

பாராளுமன்ற பெரும்பான்மையை எதிர்பார்க்காது, சகல கட்சிகளும் இணைந்து ஏற்படுத்தும் சர்வகட்சி தேசிய அரசாங்கத்தினாலே, உள் நாட்டிலும் சர்வதேசத்தினதும் நம்பிக்கையை கட்டி எழுப்ப வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அயர்லாந்து யுவதிக்கு பாலியல் தொல்லை கொடுத்தோர் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

அயர்லந்து தேசத்து யுவதி ஒருவரின் கையைப்பிடித்து செல்பி புகைப்படம் எடுக்க வற்புறுத்திய சம்பவம் தொடர்பாக,கடந்த (24) மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டியில் நடந்த மேற்படி சம்பவம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் வீடியோக்களும் வெளியாகியிருந்தன. இந்த வீடியோவையடுத்தே,மேற்படி இம்மூன்று இளைஞர்களும் சந்தேகத்தில் கைதாகினர்.

கண்டிக்கு கடந்த (06) விஜயம் செய்த மேற்படி யுவதியும், ஜேர்மன் நாட்டு இளைஞரும் நகர வீதியில் வந்தபோதே, இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பாலியல் தொல்லை மேற்கொண்டதாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று இளைஞர்களும், கட்டுகாஸ்தோட்டை மற்றும் மெதவல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். சம்பவம் தொடர்பில் கண்டி சுற்றுலாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கட்டாக்காலி கால்நடைகளால் பொது மக்களுக்கு தொல்லை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி நகரம் மற்றும் நகரை அண்டிய பிரதேசங்களில் கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாக வாகன சாரதிகளும், பொதுமக்களும் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையால், தமக்கு வாகனங்களை செலுத்துவதில் பல்வேறு தடங்கல்கள் ஏற்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் படுத்துறங்குகின்றன. இவை,திடீரென வீதிகளை கடக்க முயல்வதால் வாகன விபத்துக்கள் ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்பட்ட விபத்துக்களில் பல நாய்கள் உயிரிழந்ததுடன்,பொதுமக்கள் பலரும் காயங்களுக்குள்ளாகி உள்ளனர். மேலும் காலை, மாலை, இரவு நேரங்களில் இவை கூட்டம் கூட்டமாக வீதிகளில் மற்றும் வீட்டு முற்றங்களில் மலம்,சிறுநீர் கழித்து அசிங்கப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நாய்களின் தொல்லைகள் காரணமாக சிறு வர்கள் நடமாட அச்சப்படுவதுடன்,முதியவர்களும்

அபாயத்துக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இவ்விடயத்தில், இரத்தினபுரி மாநகர சபை நிர்வாகம் அதிக கரிசனை காட்ட வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## ஆசிரியர்களின் சுகயீன போராட்டத்தால் மலையக பாடசாலைகள் வெறிச்சோடின

(தலவாக்கலை குறூப் நிருபர்)

எரிபொருள் விலையேற்றம்,அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து நேற்று (25) அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.எரிபொருள் விலையேற்றத்தால் ஆசிரியர்கள்,அதிபர்கள் பாடசாலைக்கு செல்வதில் சிரமப்படுகின்றனர்.எனவே, தூர இடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் அருகிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றக் கூடியவாறு நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம்.நாடுபூராகவும் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்த,

சுகயீன லீவுப்போராட்டத்தில் ஈடுபட்டதாக இவர்கள் தெரிவித்தனர். இந்த சுகயீன லீவுப்போராட்டத்தால்,

நேற்று (25) மலையக பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

சுகயீன தந்திகளை,பாடசாலைகளுக்கு அனுப்பும்

நடவடிக்கைகளை, தலவாக்கலை பிரதேசத்திலுள்ள அஞ்சல் அலுவலகத்தில் ஆசிரியர்கள் மேற்கொண்டிருந்தனர்.அதிபர், ஆசிரியர்களின் இந்த சுகயீன போராட்டம் பற்றி அறிந்திருக்காத மாணவர்கள் பலர், பாடசாலைக்கு வருகை தந்து திரும்பி சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

## பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில்



தரம் ஒன்று, புதிய மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப நிகழ்வு, அதிபர் கே. மகேந்திரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில், ஊவா மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். கலையரசி, பதுளை வலயக் கல்விப் பணிப்பாளர் சரத் ரணசிங்க, உதவிக் கல்விப் பணிப்பாளர் காண்டீபன்,முன்னாள் அதிபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (பதுளை தினகரன் நிருபர்)



மண்ணெண்ணெய் கொண்டுவரப்பட்ட செய்தி கேட்டு பன்விலை எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு படையெடுத்துச் சென்ற மக்கள், அங்கு இயந்திரம் பழுதடைந்ததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். இச்சம்பவம் நேற்று (25) திங்கட்கிழமை இடம்பெற்றது. இப்பிரதேச மக்கள் பல மாதங்கள் மண்ணெண்ணெய் இன்றி காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (புசல்லாவை தினகரன் நிருபர்)



உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ரோஹண திசாநாயக்க, நேற்று முன்தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது பிடிக்கப்பட்ட படம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## நெருக்கடிக்குரிய தீர்வை மக்கள் பக்கம் நின்றவாறே தீர்மானிப்போம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



" மக்கள் பக்கம் நின்றே" அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கும் முடிவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுத்துள்ளதாக இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் இ.தொ.காவின் நிலைப்பாடு பற்றி ஊடகவியலாளர் தொலைப்பேசி வாயிலாக கேட்ட போது, இந்த கருத்தை வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு,

" நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்படும் என அறிவிப்பு விடுத்தவர்களுக்கு கூட, அது வெற்றிபெறுமா என்ற சந்தேகம் இருந்தது. அதுமட்டுமல்ல உள்ளடக்கங்கள் பற்றி எம்முடன் பேச்சு நடத்தப்படவில்லை. அதனால்தான், நடுநிலை என்ற அறிவிப்பு விடுக்கப்பட்டது. தற்போது பிரேரணை பற்றி எமக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அது வெற்றியளிக்ககூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்து. மக்களின் தீர்ப்பே, எமது அரசியல் நடவடிக்கை. அந்த கொள்கையின் அடிப்படையிலே இ.தொ.கா. செயற்படும்.

அன்று முதல் இன்று வரை நாம் தடம்மாறி பயணித்தது கிடையாது. அந்தவகையில் மக்கள் முடிவை ஏற்று, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்க முடிவெடுப்போம் என்றார்.

## நான்கு கோரிக்கைகளை முன்வைத்து சுகயீன விடுமுறை போராட்டத்துக்கு ஆதரவு

### தேசிய ஜனநாயக சங்கம் அறிவிப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)

அதிபர்,ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் சுகயீன விடுமுறை போராட்டத்துக்கு, தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கம் நான்கு கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக அதன் பொதுச்செயலாளர் எஸ்.பாலசேகரம் தெரிவித்துள்ளார்.அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

அதிபர்,ஆசிரியர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு, பாடசாலை சீருடையில் செல்லும் மாணவர்களுக்கு அரைவாசி பேருந்து கட்டணம் வழங்கல், மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைத்தல் உள்ளிட்ட நான்கு கோரிக்கைகளே இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளன. இன்றைய காலத்தில் எரிபொருள் விலையேற்றம் மற்றும் பஸ் கட்டண அதிகரிப்பை கருத்திற்கொண்டு போக்குவரத்து கட்டணத்தை தமது சம்பள பணத்துடன் இணைத்து வழங்க வேண்டும். தற்போதய சூழ்நிலையில் மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இந்நெருக்கடிகள், வாழ்வாதாரத்திலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் பேருந்து கட்டண உயர்வால் மாணவர்கள் தினமும் பொருளாதார பிரச்சினைகளில் சிக்கி தவிப்பது தெரிகிறது. எனவே பாடசாலை மாணவர்களின் நலன் கருதி தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் அரைவாசி கட்டணத்தை அறவிட அரசு பரிந்துரைக்க வேண்டும். மேலும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் இவ்விடயத்தில் கருணை அடிப்படையில் செயற்பட முன்வர வேண்டும். அரசாங்க பேருந்து சேவையில் இந்நடைமுறையை உடனடியாக அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும் என்றார். மக்களின் வாழ்வாதார சுமையை குறைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

## போத்தலுக்குள் பெற்றோல் வழங்க மறுத்த ஊழியர் மீது தாக்குதல்

(அக்குறணை குறூப் நிருபர்)

போத்தலுக்குள் பெற்றோல் வழங்க மறுத்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டதில், அவரது மூன்று பற்கள் உடைந்து காயமடைந்தார்.

இச்சம்பவம் (24) கண்டியிலுள்ள தென்னக்கும்பரே என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது

கண்டி தென்னகும்புரவில் அமைந்துள்ள தலாத்துஓயா மாறஸ்ஸன பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் தாக்கப்பட்ட எரிபொருள் நிறப்பு நிலைய ஊழியர், கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ஊழியரின் மூன்று பற்கள் உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபரைக் கைது செய்ய கண்டிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



மஹரகமையிலுள்ள அபேக்ஷா வைத்தியசாலையில், சிறுவர் வார்ட் தொகுதிக்கான,பெற்றோர் ஓய்வுகூடம் நேற்று முன்தினம் (24) திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில்,லயன்ஸ் கழகத்தின் சர்வதேச முன்னாள் தலைவர் மஹேந்திர அமரசூரிய,கழகத்தின் தற்போதைய மாவட்டத் தலைவர் ரொஷான்காஞ்சனா யாப்பா மற்றும் பல்நோக்கு சபை உறுப்பினர் சிறிலால் பெர்னாண்டோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## குரங்குத் தொல்லையால் பயிர்ச்செய்கைகள் சேதம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை தேர்தல் தொகுதிக்குட்பட்ட பல விவசாய பிரதேசங்களில் குரங்குகள் தொல்லை கொடு த்து வருவதாக விவசாயிகள், கிராமவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்புல்பே, அளுத்நுவர, பெலிஹுல் ஓய, பம்பஹின்ன, தென்னதியவின்ன, வெலிஓய, கல்தோட்டை உட்பட

பல பிரதேசங்களிலும் விவசாயச் செய்கை, மரக்கறி, பழவகை மற்றும் சேனைப்பயிர்ச் செய்கைகளை

இந்த குரங்குக் கூட்டம் அழித்து சேதப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உணவுக்காக இவை வருகை தருவதால், இவை பயிர்களை நாசம் செய் வது மட்டுமன்றி இவற்றின் செயற்பாடுகள் மக்களின் அன்றாட நடவ டிக்கைகளை பாதிப்படையச் செய்கின்றன.மேலும் வீடுகளை ஆக்கிரமித்து உ ணவுப் பொருட்கள் உபகரணங்களுக்கு ம் இவை சேதத்தை விளைவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச செய்திகள்

# பிரான்ஸ் ஜனாதிபதியாக மக்ரோன் மீண்டும் வெற்றி



பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் எமானுவேல் மக்ரோன் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு வெற்றியீட்டியுள்ளார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மரின் லே பென் மீண்டும் தோல்வியை சந்தித்தபோதும், நாட்டில் தீவிர வலதுசாரியின் அதிக வாக்குகளை பதிவு செய்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் மக்ரோன் 58.55 வீத வாக்குகளை பெற்று அமோக வெற்றியீட்டியதோடு, லே பென் 41.45 வீத வாக்குகளை வென்றார். இதன்மூலம் மக்ரோன் எதிர்பார்த்ததை விடவும் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளார்.

ஈபிள் கோபுரத்திற்கு அருகில் கூடிய தனது ஆதரவாளர்களிடம் பேசிய மையவாதத் தலைவராக 44 வயது மக்ரோன், தற்போது தேர்தல் முடிந்துவிட்டதாகவும் தாம் அனைவருக்குமான ஜனாதிபதி என்றும் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளில் இரண்டாவது தவணைக்கு வெற்றியீட்டிய முதல் ஜனாதிபதியாகவும் மக்ரோன் பதிவாகி உள்ளார்.

இதில் 53 வயதான லே பென் தோல்வியை சந்தித்தபோதும் கணிசமான வாக்குகளை வென்றிருப்பதும் அவரின் பெரும் முன்னேற்றத்தை காட்டுவதாக உள்ளது. தேர்தலில் தோல்வியுற்றாலும், தான் பெற்ற வாக்குகள் வெற்றியை குறிப்பதாக லே பென் தெரிவித்தார்.

இதுவரை இல்லாத அளவுக்கு வலதுசாரிகள் அதிக வாக்குகளை வென்றிருப்பது பிரான்ஸ் அரசியல் ரீதியாக ஆழமாகப் பிளவுபட்டிருப்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் லே பென், மெக்ரோனிடம் தோல்வி அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் வலதுசாரி தேசியவாதக் கொள்கைகளை எதிர்ப்போர் மக்ரோனுக்கு வாக்களித்துள்ளதை லே பென் ஒப்புக்கொண்டார்.

நாட்டை மீண்டும் இணைக்கவும் தமக்கு எதிராக வாக்களித்தோரின் சினத்தைத் தணிக்கவும் மக்ரோன் உறுதியளித்தார்.

மக்ரோனின் வெற்றிக்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பலரும் அவருக்கு சமூக வலைதளங்களில் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். தனது "உண்மையான நண்பர்" என மக்ரோனை குறிப்பிட்டு, உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் அவருடைய வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அணுவாயுதச் சக்தி கொண்ட ஒரே நாடாக பிரான்ஸ் உள்ளது. எனவே, மக்ரோனின் வெற்றி, ஒன்றியத்தின் தலைமைத்துவ நிலைத்தன்மையை மீண்டும் உறுதி செய்வதாக உள்ளது.

இந்தத் தேர்தலில் வாக்களித்தவர்கள் எண்ணிக்கை 72 வீதத்திற்கும் குறைவாக உள்ளது. இது 1969க்குப் பின்னரான தேர்தல்களில் பதிவான குறைவான வாக்கு எண்ணிக்கையாகும்.

மேலும், 30 இலட்சத்துக்கும் அதிகமானோர் செல்லாத வாக்குகளை செலுத்தியுள்ளனர்.

தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளாத மக்ரோனுக்கு எதிரான போராட்டக்காரர்கள், பல்வேறு நகரங்களில் குறிப்பாக பாரிஸ், ரென்ஸ், டௌலௌஸ் மற்றும் நான்டெஸ் ஆகிய நகரங்களில் பேரணிகளை நடத்தினர்.

## உக்ரைனுக்குப் பயணித்த அமெரிக்க செயலாளர்கள்



ரஷ்ய படையெடுப்புக்குப் பின் உக்ரைனுக்கு முதல் முறை பயணம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க வெளியுறவு மற்றும் பாதுகாப்பு செயலாளர்கள், மேம்பட்ட ஆயுதங்கள் உட்பட மேலதிக இராணுவ உதவிகளை வழங்கவும், உக்ரைனுக்கான அமெரிக்க தூதுவரை திரும்ப அனுப்பவும் உறுதி அளித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உக்ரைன் சென்ற வெளியுறவு செயலாளர் அன்டனி பிளின்கன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மற்றும் ஏனைய உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்து பேசியுள்ளனர்.

இதன்போது உக்ரைன் மற்றும் ரஷ்ய ஆக்கிரமிப்பு அச்சம் உள்ள ஏனைய நாடுகளுக்கு 713 மில்லியன் டொலர் புதிய உதவிகளை வழங்க இந்த அமைச்சரவை செயலாளர்கள் உறுதி அளித்ததாக அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் எதிர்வரும் வாரங்களில் அமெரிக்க இராஜதந்திரிகள் உக்ரைன் திரும்பவிருப்பதோடு, உக்ரைனுக்கான புதிய தூதுவரையும் அமெரிக்கா அறிவிக்கவுள்ளது.

## சர்வதேச இராணுவ செலவு அதிகரிப்பு



சர்வதேச இராணுவச் செலவுகள் 2021ஆம் ஆண்டில் அதிகரித்திருந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக நாடுகளில் குறிப்பாக ஐரோப்பாவில் இராணுவச் செலவுகள் தொடர்ந்து அதிகரிக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வைரஸ் பரவல் சூழலால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்புக்கு இடையிலும் உலக நாடுகள் அவற்றின் ஆயுதப் பலத்தை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கியதாக ஸ்டொக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் கூறப்பட்டது.

சர்வதேச அளவில் இராணுவச் செலவுகள் கடந்த ஆண்டு 0.7 வீதம் உயர்ந்திருப்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இராணுவச் செலவுகள் தொடர்ச்சியாக ஏழாம் முறையாய் உயர்ந்திருக்கின்றன. மிக அண்மை நிலவரப்படி, சர்வதேச இராணுவச் செலவுகள் முன்னெப்போதும் இல்லாத அளவில் இருப்பதாக மேற்படி நிறுவனத்தின் மூத்த ஆய்வாளர் தெரிவித்தார்.

## ஸ்விட்ச் நிறுவன முதலீடு: பொரிஸ் ஜோன்சன் பாராட்டு



இந்தியாவுக்கு வர்த்தகப் பயணம் ஒன்றை மேற்கொண்ட இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன், மின்சார பஸ் மற்றும் இலகு வர்த்தக வாகன நிறுவனமான ஸ்விட்ச் மொபிலிட்டி நிறுவனம் மற்றும் பிரிட்டன் மற்றும் இந்தியாவில் அதன் முதலீட்டை பாராட்டியுள்ளார்.

ஜோன்சனின் டெல்லி மற்றும் குஜராத் விஜயத்தின் ஓர் அங்கமாக, இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு வர்த்தகத்தை வலுப்படுத்துவதற்கு உதாரணமாக இந்த ஸ்விட்ச் நிறுவனத்தை குறிப்பிட்டு கூறினார்.

மின்சார பஸ்கள் மற்றும் இலகு வர்த்தக வாகனங்களின் மேம்பாட்டுக்கு பிரிட்டன் மற்றும் இந்தியா எங்கும் 300 மில்லியன் பௌண்ட் முதலீட்டை ஸ்விட்ச் உறுதி செய்திருப்பதுடன் பிரிட்டன் மற்றும் இந்திய வர்த்தகங்கள் 1 பில்லியன் பௌண்ட் முதலீட்டுக்கு திட்டமிடப்பட்டிருப்பதாக உத்தியோக பூர்வ அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முதலீட்டின் ஓர் அங்கமாக அந்த நிறுவனம் பிரிட்டன் மற்றும் இந்தியாவில் 4,000க்கும் அதிகமான தேர்ச்சிபெற்ற தொழில் வாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

## சூடானில் வன்முறை: 168 பேர் உயிரிழப்பு



சூடானின் பதற்றம் கொண்ட டார்புர் பிராந்தியத்தில் அரபிகள் மற்றும் அரபு அல்லாதோருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் குறைந்தது 168 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்கு டார்புர் மாகாணத்தின் கிரைனிக் பகுதியில் ஏற்பட்ட இந்த மோதலில் மேலும் 98 பேர் காயமடைந்ததாக டார்பூரின் அகதி மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான பொது ஒருங்கிணைப்பு பேச்சாளர் அடம் ரிகால் தெரிவித்துள்ளார்.

கிரைனிக்கில் அடையாளம் தெரியாத தாக்குதல்தாரியால் இருவர் கொல்லப்பட்டதை அடுத்து கடந்த வியாழக்கிழமை இந்த மோதல் வெடித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து மேற்கு டார்புர் மாகாணத் தலைநகரான கெனேனாவுக்கு இந்த மோதல் பரவியுள்ளது. ஆயுதக் குழுக்களால் பலர் தாக்கப்பட்டுள்ளனர். தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளின் புகைப்படங்கள் சமூக ஊடகத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த மோதல்கள் காரணமாக சுமார் 20,000 பேர் இடம்பெயர்ந்திருப்பதாக டார்புர் வழக்கறிஞர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## மணப்பெண் விலையால் தவிக்கும் சீன ஆண்கள்



வடமேற்கு சீனாவில் பல ஆண்டுகள் காதலித்த பெண்ணை திருமணம் புரிவதற்கு மணப் பெண்ணுக்கான 300,000 யுவான் பணத்தை வழங்க முடியாததால் காதலன் அந்தப் பெண்ணை கைவிட்டுள்ளார்.

பெண்ணின் உடல் மற்றும் உழைப்பை உரிமையாக்குவதற்காகவே மணப்பெண்ணுக்கு பணம் செலுத்தும் வழக்கம் இருந்து வருகிறது.

எனினும் கன்சு மாகாணத்தில் வசிக்கும் குயின் என்ற ஆடவர் வருடாந்தம் 20,000 யுவான் வருமானத்தை பெறும் நிலையில் மணப் பெண்ணின் விலையாக நிர்ணயிக்கப்பட்ட தொகையை சேகரிக்க 15 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமண சடங்கில் சீர்திருத்தங்களை கொண்டுவர சீன அரசு முயன்றபோதும் மணமகள் விலை சீன சமூகத்தில் தொடர்ந்து அதிகமாக உள்ளது. குறிப்பாக கிராமப் பகுதிகளில் இந்த சிக்கலால் பலரும் தொடர்ந்து திருமணம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

## உலகின் வயதானவர் மரணம்



உலகின் வயதானவராக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்ற ஜப்பானியப் பெண் தனது 119 ஆவது வயதில் காலமானார்.

கானே டனகா என்ற அந்தப் பெண் 1903 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி ஜப்பானின் தென்மேற்கு புக்குவாகோ பிராந்தியத்தில் பிறந்தார். அதே ஆண்டில் தான் ரைட் சகோதரர்கள் முதல் முறை வானில் பறந்ததோடு முதல் பெண்மணியாக மேரி கியுரி நோபல் விருதி வென்றார்.

டனகா அண்மைக் காலம் வரை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் பராமரிப்பு இல்லத்தில் வாழ்ந்து வந்தார்.

தனது இளமைக் காலத்தில் நூடுல் கடை மற்றும் அரிசி கேக் கடை உட்பட பல்வேறு வர்த்தகங்களில் ஈடுபட்டிருக்கும் டனகா சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன் 1922 ஆம் திகதி ஹிடியோ டனகா என்பவரை திருமணம் செய்துள்ளார். அவர் நான்கு குழந்தைகளை பெற்றிருப்பதோடு ஐந்தாவதாக ஒரு குழந்தையை தத்தெடுத்துள்ளார்.

2019 ஆம் ஆண்டிலேயே அவர் உலகின் வயதானவர் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றார். அப்போது வாழ்வின் மகிழ்ச்சியான தருணம் எது என்று கேட்கப்பட்டபோது, "இப்போது" என்று பதலிளித்திருந்தார்.

உலகின் மிக வயது முதிர்ந்த மக்கள் தொகை கொண்ட நாடாக ஜப்பான் இருப்பதாக உலக வங்கி தரவு குறிப்பிடுகிறது. அங்கு 28 வீதமானவர்கள் 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களாவர்.

டனகாவின் மரணத்தை அடுத்து உலகின் மிக வயதானவராக பிரான்ஸ் நாட்டு கன்னியாஸ்திரி லுசிலே ரன்டொன் பதிவாகியுள்ளார். அவருக்கு 118 வயதாகும். இதில் வயதான ஜப்பானிய பெண்ணாக 115 வயது புசா டட்சுமி உள்ளார். அவர் உலகின் ஐந்தாவது வயதானவராக சாதனை பட்டியலில் உள்ளார்.

கின்னஸினால் உறுதி செய்யப்பட்ட உலகில் இதுவரை வாழ்ந்த வயதானவர் என்ற சாதனை பிரான்ஸ் நாட்டு பெண்ணான ஜீன் லுவிஸ் கல்மன் வசமுள்ளது. 1997 ஆம் ஆண்டு அவர் இறக்கும்போது அவரது வயது 122 ஆண்டுகள் மற்றும் 164 நாட்களாக இருந்தது.

## பீஜிங் குடியிருப்பாளர்களுக்கு கூட்டாக கொரோனா சோதனை



சீனத் தலைநகர் பீஜிங்கில் கொரோனா தொற்று சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து மில்லியன் கணக்கான குடியிருப்பாளர்களுக்கு வைரஸ் சோதனை செய்யப்படவுள்ளது.

சொயாங் மாவட்டத்தில் வார இறுதியில் 26 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது பீஜிங்கின் அதிக தொற்றுச் சம்பவமாக உள்ளது.

அத்தியாவசிய உணவு விநியோகத்தை அரசு உறுதி செய்தபோதும் கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்கு வெளியே நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன.

பீஜிங்கிலும் ஷங்ஹாய் நகரின் நிலை ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவே அங்கு பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. 25 மில்லியன் மக்கள் வசிக்கும் ஷங்ஹாய் நகர் கடந்த பல வாரங்களாக முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நகரின் மிகப் பெரிய சொயாங் மாகாணத்தின் 3.5 மில்லியன் குடியிருப்பாளர்களுக்கும் மூன்று சுற்றுகளாக கொரோனா சோதனை நடத்தப்படும் என்று நகரின் நோய்த் தடுப்பு குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## லெபனான் மீது இஸ்ரேல் பீரங்கி குண்டு தாக்குதல்



லெபனானில் இருந்து எல்லைக்கு அப்பால் திறந்தவெளி பகுதி மீது ரொக்கெட் குண்டு வீசப்பட்டதற்கு பதில் நடவடிக்கையாக தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் பீரங்கி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த ரொக்கெட் குண்டு வந்த திசையை நோக்கியும் உட்கட்டமைப்பு ஒன்றை இலக்கு வைத்தும் தெற்கு லெபனானின் திறந்த வெளியை நோக்கி பீரங்கி தாக்குதல் நடத்தப்பட்டது என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு லெபனான் எல்லை பகுதியில் உள்ள ஐ.நா அமைதிகாக்கும் படைகளின் நிலைகளில் சைரன் ஒலி எழுப்பப்பட்டதாக லெபனான் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அங்கு லெபனான் படைகள் அனுப்பப்பட்டிருப்பதாக அந்த செய்தி தெரிவிக்கிறது.

எனினும் எல்லையில் இரு பக்கத்திலும் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டது உறுதி செய்யப்படவில்லை.

லெபனானில் இருந்து இடம்பெற்ற ரொக்கெட் தாக்குதலின் பின்னணியில் உள்ள குழு யார் என்பது உறுதி செய்யப்படவில்லை.









# பேராசிரியர் சோ.சந்திரசேகரம்; நினைவஞ்சலி நிகழ்வு















மறைந்த கல்விமான் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களது நினைவஞ்சலி கூட்டம் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது அவரது குடும்ப உறுப்பினர்கள் மலரஞ்சலி செலுத்துவதையும், பேராசிரியர்கள், கல்விமான்கள், பத்திரிகை ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் என பலரும் நினைவஞ்சலி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்

படங்கள்;
ஏ. கே விஜயபாலன்



டயகம மேற்கு 2 தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த சகலருக்கும் கல்விக்கான உதவிகரத்தை கருணை இல்லம் நீட்டியது. இம்முறை வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சையில் நுவரெலியா கல்வி வலயத்தில் வெட்டுப்புள்ளிகளை தாண்டி ஏழு மாணவர்கள் சித்தியடைந்தனர். அத்தோடு அதிகமான மாணவர்கள் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இவ் விழா அதிபர் பரமானந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பெற்றோர்கள் கலந்துகொண்டு கருணை இல்லத்துக்கு தங்களின் நன்றியை தெரிவித்தனர்.


## விலைமனுக்களுக்கான அழைப்பிற்கான திருத்தம்

**SUPPLY, APPLICATOR TRAINING AND APPLICATION SUPERVISION OF WALL GRANULAR BASED ESTERIOR COATING SYSTEM FOR BLOCKS 06, 07 AND 08 OF DEFENCE HEADQUARTERS COMPLEX AT AKUREGODA**

**CONTRACT No.: DHQC/GRAN COAT 678/2022**

1. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக சண்டே ஒப்சேவர், சிலுமின மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் 2022 மார்ச் 20 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   - விலைமனுக்களை திறத்தல்/ மூடல் நேரமானது 2022 ஜூன் 21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
   - விலைமனுக்கள் 2022 ஒக்ரோபர் 18 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   - விலைமனுப்பிணையானது 2022 நவம்பர் 15 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. முன்னைய விலைமனுக்களுக்கான அழைப்பின் ஏனைய அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதி, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2022 ஜூன் 20 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

**தலைவர்,
அமைச்சு பெறுகைக் குழு,
பாதுகாப்பு அமைச்சு,
பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**

**தொலைபேசி : 0094-11-2439381/0094-11-2390719.
தொலைநகல் : 0094-11-2390720
மின்னஞ்சல் : procurement@defence.lk**

எனது இலக்கம். BDD/IND/02/139/2020

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி கையேற்பு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட காணி கையேற்புச்சட்டம் 460 ஆம் அத்தியாயம்**

**7 ஆம் பிரிவின் கீழான பத்திரிகை அறிவித்தல்**

இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியினை கையேற்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2270/88 இலக்க 2022. 03. 12 ஆம் திகதி கொண்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியினைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : காலி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : பத்தேகம |
| கிராம அலுவலர் பிரிவு | : 220 ஏ, கணேகம கிழக்கு |
| கிராமம் | : கணேகம் |
| மூலப்பட இலக்கம் | : கா /4574 |
| துண்டு இலக்கம் | : 01, 02, 03, 04. |
| காணியின் முழுப் பரப்பளவு | : ஹெக்டயார் 0.18833 |

**பிரதேச செயலாளர் : பத்தேகம
2022ஆம் வருடம் 04ஆம் மாதம் 22ஆம் திகதி**

**பத்தேகம பிரதேச அலுவலர் அலுவலகம்**

**வர்த்தக அமைச்சு**

**2022ஆம் ஆண்டில் இந்திய கடன்வசதி திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதியாளர்களைப் பதிவு செய்தல்**

**இறக்குமதியாளர்களின் அழுத்தமான வேண்டுகோளின் பிரகாரம் பதிவு செய்து கொள்வதற்கான இறுதித் நாள் 2022-05-15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

இந்திய-இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2022ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கீழ்க்காணும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதியாளர்களை வர்த்தக அமைச்சில் பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அத்தியாவசிய உணவுப் பொருட்கள்
- அத்தியாவசிய மருந்துகள்
- சீமெந்து
- துணிமணிகள்
- விலங்குணவு, விலங்குணவு மூலப்பொருட்கள் மற்றும் கால்நடை மருந்துகள்
- கைத்தொழிலிற்கு பயன்படும் மூலப்பொருட்கள்
- விசேட உர வகைகள்

இவ்வாறான அத்தியாவசிய பொருள்வகைகளை கடந்த ஆண்டில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்துள்ள இறக்குமதியாளர்கள் அல்லது மேற்படி பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கும் இறக்குமதியாளர்கள் பதிவு செய்துகொள்வதற்காக வர்த்தக அமைச்சின் https://www.trade.gov.lk/ என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து 2022.05.15ஆம் திகதி வரை மெய்நிகர் (online) வழியாக விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் வன் பிரதிகள் (Hard Copy) 2022.05.15ஆம் திகதி பி.ப. 3.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து வர்த்தக அமைச்சிற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

இது தொடர்பில் மேலதிக தகவல்கள்/ தேவைப்படும் உதவிகளை உதவிச் செயலாளர் திரு. ஈ. ஏ. ஏக்கநாயக்கவை (076-2566047) தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பதிவு சம்பந்தமாக ஏதேனும் அசௌகரியங்கள் இருப்பின் வர்த்தக அமைச்சின் மூன்றாம் மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட அலகிற்கு வருகை தந்து குறித்த விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

| உருப்படி | தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | பதவி | நிறுவனம் | தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|
| அத்தியாவசிய உணவுப் பொருட்கள் | திரு. குமுது மீகஹகே | பணிப்பாளர் | வர்த்தக அமைச்சு | 071 8246920 |
| அத்தியாவசிய மருந்துகள் | திரு. தினுஷ தஸாநாயக்க | பொது முகாமையாளர் | அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 077 3721188 |
| துணிமணிகள் | திரு. பீ.எல்.எஸ்.பி. நிஷாந்த | பிரதான தொழில்நுட்ப அதிகாரி | பத்திக் கைத்தறிகள் இராஜாங்க அமைச்சு | 077 1505494 |
| விலங்குணவு | மருத்துவர் திரு. என். பிரியங்கரகே | பதிவாளர் | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 071 8038954 |
| கைத்தொழிலுக்குப் பயன்படும் மூலப்பொருட்கள்/ சீமெந்து | திரு. எல்.ஏ. உதாசிரி பெரேரா | பணிப்பாளர் | கைத்தொழில் அமைச்சு | 077 7824158 |
| விசேட உரவகைகள் | திரு. கசுன் மஹதன்தில | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | தேசிய உர செயலகம் | 071 8500592 |

**செயலாளர்,
வர்த்தக அமைச்சு,
இல. 492, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை,
கொழும்பு -03.
2022-04-26.**

## பெறுகை அறிவித்தல்

நிதி அமைச்சு
**இலங்கை மதுவரித் திணைக்களம்**

**இலங்கை மதுவரித் திணைக்களத்தால் கழிவு நீரை சுத்தப்படுத்தல் செயன்முறையை பராமரித்தல் - 2022 / 2023**

ராஜகிரிய, கோட்டை வீதி, இலக்கம் 353, எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தால் கழிவு நீரை சுத்தப்படுத்தி பராமரிப்பு நடவடிக்கைகளை 2022 / 2023 ஆம் ஆண்டுக்கு மேற்கொள்வதற்காக நாடு முழுவதிலுமிருந்து தகைமை பெற்ற நிறுவகங்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன.

a. இவ்வழங்கலுக்கான மனுப்பத்திரங்களை 2022.04.26 ஆம் திகதி முதல் 2022.05.17 ஆம் திகதி வரையிலான வார நாட்களின் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் 4ஆம் மாடியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் இலவசமாக பார்வையிட முடியும். இத்திணைக்களத்தின் காசாளருக்கு மேற்குறிப்பிட்ட கால வரையறைக்குள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.2,500/- ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீதினை வழங்கல் பிரிவுக்கு முன்வைப்பதன் ஊடாக மனுப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

b. மனுப்பத்திரங்களை விநியோகித்தல் நடவடிக்கைகள் 2022.05.17 ஆம் திகதி பி.ப 3.00 மணியுடன் முடிவடையும்.

c. மீளளிக்கப்படும் கட்டணமாக ரூ.15,000/- ஐ பிணைப் பாதுகாப்பு வைப்புத்தொகையாக இத்திணைக்களத்தின் காசாளருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீதின் பிரதியொன்றினை அல்லது அப்பெறுமதியிலான இலங்கை மத்திய வங்கியால் பதிவு செய்யப்பட்ட வணிக வங்கியொன்றில் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு வெளியிடப்படும் நிபந்தனைகளற்ற வங்கிப்பிணையின் மூலப் பிரதியை மனு ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கவும்.

d. மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி மற்றும் நேரம் - 2022.05.18 ஆம் திகதி பி.ப 2.00 மணியாகும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இலக்கம் 353, கோட்டை வீதி, ராஜகிரிய.

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை இஸ்மாயில்புர கிராமத்தில் வசிக்கும் கீழ்க்குறிப்பிடப்படும் பெயர்களைக் கொண்ட நாங்கள் புனித இஸ்லாம் மதத்தை தழுவிக் கொண்டு எங்கள் பெயர்களை மாற்றி உள்ளோம் என்பதை இத்தால் இலங்கை சோஷலிசக் குடியரசுக்கும், மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

1. துரையப்பா இரட்ணசிங்கம்
   - **துரையப்பா முகம்மது யூசுப்**
2. மாமாங்கம் யோகேஸ்வரி
   - **மாமாங்கம் பாத்திமா மரியம்**
3. சூசைப்பிள்ளை தவநிதி
   - **சூசைப்பிள்ளை முகம்மது அனஸ்**
4. சூசைப்பிள்ளை தசமி
   - **சூசைப்பிள்ளை பாத்திமா ஹஸ்மியா**
5. சூசைப்பிள்ளை சிந்துஜன்
   - **சூசைப்பிள்ளை முகம்மது ஷியாம்**
6. சூசைப்பிள்ளை யூனியா
   - **சூசைப்பிள்ளை பாத்திமா ஜுமானா**
7. சூசைப்பிள்ளை சேனுஜா
   - **சூசைப்பிள்ளை பாத்திமா சியானா**

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இல.279, பரகஹதெனிய வேஉட எனும் முகவரியில் வசிக்கும் முஹம்மது மஹ்ரூப் முஹம்மது ஜெஸ்மி ஆகிய நான், இல.279, பரகஹதெனிய வேஉட எனும் முகவரியில் வசிக்கும் முஹம்மது மஹ்ரூப் முஹம்மது ஜெஸ்வான் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு எப்.என்.அன்ஸார் அவர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட 2012.04.11 ஆம் திகதியையுடைய இல. 2398 ஐக் கொண்ட அற்றோணி அதிகாரப் பத்திரம் மூலம் என்னால் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை இன்று முதல் இரத்துச் செய்து தள்ளுபடி செய்வதாக இலங்கை அரசுக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**Repeat Your ad For Better Offers**

## சிறு விளம்பரம்




312



**வெற்றிடங்கள்**

**தொழில் நுட்பம்**

டிங்கர் பெயின்டர்கள் தேவை. சகல வசதிகளும் உண்டு. நுகேகொடை 0777252876

027023

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பயாகல, நாகஹதுவ, ஹொரகஸ்கலே பாதை, பத்தும் உயண என்ற முகவரியில் வசிக்கும் இளந்தாவர்ண மஹேஷ் இரத்நாயக்க ஆகிய நான் 2017.01.11 ஆம் திகதியன்று பிரசித்த நொத்தாரிஸ் திருமதி ஆர்.டபிள்யு லமாஹேவாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1674 என்ற இலக்கத்தையுமுடைய அற்றோணித்தத்துவத்தின் மூலமாக மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வசிக்கும் இளந்தாவர்ண தினேஷ் இரத்நாயக்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டு வெற்றும் வெறிதாக்கப்பட்டுள்ளதுடன் இங்கு குறிப்பிட்டுள்ள திகதியின் பின்னர் எனது பெயரால் மேற்கொள்ளப்படும் மேலே குறிப்பிட்டுள்ள அற்றோணித்தத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**திகதி: 2022.04.19** **இளந்தாவர்ண மஹேஷ் இரத்நாயக்க**

## திருத்தல் பத்திரம்

**காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல - KOLDS/LND/05/ACQ/39
காணி அமைச்சின் இலக்கம்
LD/05/2004/FR/27

மேலே தலைப்பின் கீழ் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் திகதி 2219/55 இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 04-74 இலக்கத்தின் காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07 கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பதிலாக மற்றொரு திகதி கீழே குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்படுவதாக தெரியப்படுத்துகிறேன்.

**அகற்றப்பட வேண்டிய தகவல் -**
2021.06.30ம் திகதி மு.ப.10.00 2021.06.21

**சேர்க்கப்பட வேண்டிய தகவல்**
2022.04.27 ம் திகதி மு.ப.10.00 2022.04.18

**அமில விஜேரத்ன**
**பிரதேச செயலாளர்**
**கொலொன்ன**

**2021-12-30 ம் திகதி**
**கொலொன்ன பிரதேச செயலகத்தில்**

## திருத்தல் பத்திரம்

**காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல - KOLDS/LND/05/ACQ/44
காணி அமைச்சின் இலக்கம்
4-3/2/2013/HA/492

மேலே தலைப்பின் கீழ் 2021 ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி 2206/15 இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் IA G 33343-30 (2020/12) இலக்கத்தின் காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07இன் கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பதிலாக மற்றொரு திகதி கீழே குறிப்பிடபட்டவாறு திருத்தப்படுவதாக தெரியப்படுத்துகிறேன்.

**அகற்றப்பட வேண்டிய தகவல் -**
2021.02.26ம் திகதி மு.ப.10.00 2021.02.16

**சேர்க்கப்பட வேண்டிய தகவல்**
2022.04.28 ம் திகதி மு.ப.10.00 2022.04.18

**அமில விஜேரத்ன**
**பிரதேச செயலாளர்**
**கொலொன்ன**

**2021-01-30 ம் திகதி**
**கொலொன்ன பிரதேச செயலகத்தில்**

## திருத்தல் பத்திரம்

**காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல - KOLDS/LND/05/ACQ/37
காணி அமைச்சின் இலக்கம்
LD/05/2004/FR/34

மேலே தலைப்பின் கீழ் 2021 ஆண்டு மார்ச் மாதம் 17 ம் திகதி 2219/55 இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 04-73 இலக்கத்தின் காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07 கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடபட்ட திகதிக்கு பதிலாக மற்றொரு திகதி கீழே குறிப்பிடபட்டவாறு திருத்தப்படுவதாக தெரியபடுத்துகிறேன்.

**அகற்றப்பட வேண்டிய தகவல் -**
2021.06.30 ம் திகதி பி.ப. 3.00 2021.06.21

**சேர்க்கப்பட வேண்டிய தகவல்**
2022.04.27 ம் திகதி பி.ப. 3.00 2022.04.18

**அமில விஜேரத்ன**
**பிரதேச செயலாளர்**
**கொலொன்ன**

**2021-12-30 ம் திகதி**
**கொலொன்ன பிரதேச செயலகத்தில்**

## திருத்தல் பத்திரம்

**காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல - KOLDS/LND/05/ACQ/38
காணி அமைச்சின் இலக்கம்
LD/05/2004/FR/33

மேலே தலைப்பின் கீழ் 2021 ஆண்டு மார்ச் மாதம் 17 ம் திகதி 2219/55 இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 04-75 இலக்கத்தின் காணி எடுத்தற் சட்டத்தின் (460) ஆம் அத்தியாயம் 07 கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடபட்ட திகதிக்கு பதிலாக மற்றொரு திகதி கீழே குறிப்பிடபட்டவாறு திருத்தப்படுவதாக தெரியபடுத்துகிறேன்.

**அகற்றப்பட வேண்டிய தகவல் -**
2021.06.30ம் திகதி மதியம் 12.30 2021.06.21

**சேர்க்கப்பட வேண்டிய தகவல்**
2022.04.27 ம் திகதி மதியம் 12.30 2022.04.18

**அமில விஜேரத்ன**
**பிரதேச செயலாளர்**
**கொலொன்ன**

**2021-12-30 ம் திகதி**
**கொலொன்ன பிரதேச செயலகத்தில்**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆவது அத்தியாயம்)

**(39) 1 ஆம் பிரிவின் கீழ் காணியை உரித்து நீக்குதல்**

காணி அமைச்சின் இலக்கம் :-
03J/91/LRB/270

எமது இல :- BER/4/5/3/8

மேன்மைதகு காணி அமைச்சர் சமரகோன் முதியன்சலாகே சன்ரசேன அமைச்சரினால் காணி எடுத்தற் சட்டம் 39(அ) 1 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இல 2264/53 உம் 2022.01.27 திகதியும் உடைய அதி விசேஷ வர்த்தமானியின் மூலம் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் மாத்திரம் உரித்து நீக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரத்திற்கு இல2264/53 உம் 2022.01.27 திகதியும் உடைய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேஷ வர்த்தமானியை பார்க்கவும்.

அட்டவணை

| | |
|---|---|
| மாகாணம் | - மேல் மாகாணம் |
| மாவட்டம் | - களுத்துறை. |
| பிரதேச செயலகப் பிரிவு | - பேருவளை. |
| கிராம சேவகர் பிரிவு | - 749 - கங்காணம்கொட |
| கிராமத்தின் பெயர் | - பேருவளை |
| வரைபட இல - | - 91/11/10 |
| காணித் துண்டு இல | - 11 |
| காணித் துண்டுகளின் எண்ணிக்கை | - 01 |
| காணியின் பிரமாணம் | - ஹெக்டயார் 0.186 |

**2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி பேருவளை பிரதேச செயலகத்தில்.**

**எம். ரன்ஜன் பி.பெரேரா**
**பிரதேச செயலாளர்,**
**பேருவளை.**

HDFC BANK
உங்கள் வீட்டு வங்கி

## கேள்வி கோரல் அறிவித்தல்

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி பின்வரும் ஆதனங்களை விற்பனை செய்வதற்காக உடனடியாக கேள்வி அழைப்பு விடுக்கப்படுகிறது.**


| | குறியீட்டு இலக்கம் | காணியின் விஸ்தீரனம் | காணியின் பெயர் | கிராமம் | பிரதேச சபை | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 603500000446 | 15 பேர்ச்சஸ் (லொட் இல.11) | ஆலியாவள வத்தை அல்லது மடவலதென்ன எஸ்டேட் | மடவல (உஹுமிய) | பொல்கஹா வெல | குருநாகல் |
| 2 | 603503000974 | 15 பேர்ச்சஸ் (லொட் இல.33) | எப்பா எஸ்டேட் | பமுணுஸ்ஸ (பெல்லந்தெனிய) | குருநாகல் | குருநாகல் |
| 3 | 903500000263 | 20 பேர்ச்சஸ் (லொட் இல.3) | மஹலெவகந்த எஸ்டேட் | கவுடுபெலெள்ள (மாத்தளை) | யட்டவத்தை | மாத்தளை |
| 4 | 903500000287 | 20 பேர்ச்சஸ் (லொட் இல.5) | மஹலெவகந்த எஸ்டேட் | கவுடுபெலெள்ள (மாத்தளை) | யட்டவத்தை | மாத்தளை |
| 5 | 903500000600 | 20 பேர்ச்சஸ் (லொட் இல.31) | மஹலெவகந்த எஸ்டேட் | கவுடுபெலெள்ள (மாத்தளை) | யட்டவத்தை | மாத்தளை |
| 6 | 304525000023 | 31 பேர்ச்சஸ் (லொட் இல.2) | அம்பகஹாவத்தை மற்றும் கும்புரா | தெனிபிடிய (மாத்தரை) | வெலகம | மாத்தரை |
| 7 | 304500000375 | 120 பேர்ச்சஸ் (லொட் இல.3) | கொஹொம்பகஹாவத்தை அல்லது புஹுகஹாகொரடுவ | அம்பலகம (அம்பாந்தோட்டை) | பெலியத்தை | அம்பாந்தோட்டை |
| 8 | 2402300010 | 20.5 பேர்ச்சஸ் (லொட் இல.50) | ஜென்டில்ட் கொளனி | குடா மஸ்கெலியா (ஹட்டன்) | அம்பகமுவ | நுவரெலியா |
| 9 | 403500000531 | 15.74 பேர்ச்சஸ் (லொட் இல.20) | தெல்தெனியேகொடஹேன அல்லது இன்புல்பிடிய வத்தை | அட்டகலம்பன்ன (மாதம்பே) | அட்டகலம்பன்ன | இரத்தினபுரி |
| 10 | 080000214 | 15.14 பேர்ச்சஸ் (லொட் இல.11) | புவக்கஹாவிளஹென | உடுகாவ | வெலிகம | மாத்தரை |

விலை மனுக்களை சமர்ப்பிக்கும் பொழுது சம்பந்தப்பட்ட கேள்வி கோரல் பத்திரத்தினை பூர்த்தி செய்து பணம் செலுத்திய பற்றுச் சீட்டினை (ஒரு ஆதனத்திற்காக மீளச் செலுத்தப்படாத கேள்வி கோரல் கட்டணமாக ரூபா 2,500/= மற்றும் மீளச் செலுத்தப்படும் கேள்வி கோரல் கட்டணமாக 10,000/=ரூபாவும்) இணைத்து கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் சம்பந்தப்பட்ட குறியீட்டு இலக்கத்தினையும் கேள்வி கோரல் என்ற வாசகத்தினையும் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக 2022/05/10 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

முகாமையாளர் (நிர்வாகம்)
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
சேர்-சித்தம்பலம் ஏ.காடினர் மாவத்தை
த.பெ.இல. 2085
கொழும்பு – 02.

விசாரணைகள்: 011-2356800
011-2356888

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)



**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - **PROJECT ID: P 163305**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்

01. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் நிதி ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள பணிக்கான கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து போரதீவுபற்று பிரதேச சபை (வெல்லாவெளி) சார்பில் கிழக்கு மாகாண, LDSP, மாகாண திட்டப் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
03. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
04. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் சிறப்புத்தன்மையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
05. விலைமனு ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமை தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. விலைமனு ஆவணத்தின் (பிரிவு 5) அட்டவணையில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன.
06. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் உதவித் திட்டப் பணிப்பாளர், LDSP, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம், சரவணா வீதி, கல்லடி மட்டக்களப்பு என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. இல. 065-2223512, தொலைநகல் 065-2225655, மின்னஞ்சல் - btaclg@gmail.com) என்பதோடு 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் மேலுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
07. மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 ரூபாவை செலுத்தி 2022.04.26 ஆம் திகதி தொடக்கம் 2022.05.17 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை உதவித் திட்டப் பணிப்பாளர், LDSP, உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம், சரவணா வீதி, கல்லடி மட்டக்களப்பு என்ற முகவரி அல்லது போரதீவுபற்று பிரதேச சபை (வெல்லாவெளி), தலைவர்/ செயலாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
08. விலைமனுக்களை 2022.05.18 ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் உதவித் திட்டப் பணிப்பாளர், (LDSP), உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம், சரவணா வீதி, கல்லடி மட்டக்களப்பு என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
09. விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு பின்னர் 2022.09.14 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
10. அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றை கொண்டதாக விலைமனுக்கள் இருத்தல் வேண்டும்.
11. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு போரதீவுபற்று பிரதேச சபையில் (வெல்லாவெளி) 2022.05.09 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும். விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் பங்கேற்கலாம்.
12. ஒப்பந்தம் வழங்குவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது.
13. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்தப் பெறுகையை ரத்துச் செய்ய அல்லது திரும்பப் பெறுவதற்கு தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது.

| விலைமனு இல. மற்றும் பணி விபரம் | கேள்வி மேற்கொள்ளக்கூடிய விலைமனு தொகை (VAT தவிர்த்து (மில்.) | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி தினங்கள்) | தேவையான தரம் மற்றும் சிறப்புத்தன்மை | தேவையான விலைமனு பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | விலைமனு பிணை தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் |
| வெல்லாவெளியில் பல்நோக்கு சேவை நிலையத்தின் நிர்மாணம் ஒப்பந்த இல.: LDSP/EP/BT/PPPS/2021/01 | 28.42 | 180 நாட்கள் | C5 மற்றும் அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 290,000.00 | 2022.10.12 |

**தலைவர், மாகாண திட்ட பெறுகைக் குழு,**
**பிரதி திட்டப் பணிப்பாளர், LDSP**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**
**2022.04.26**

## பெயர் மாற்றம்

வொலிவோரியன் கிராமம், சாய்ந்தமருது - 9ஐச் சேர்ந்த “சின்னசாமி சந்திரகுமார்” ஆகிய நான் எனது சொந்த விருப்பத்தின் பெயரில் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை “**சின்னசாமி அப்துல் மலிக்**” என மாற்றி உள்ளேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

“**சின்னசாமி அப்துல் மலிக்**”

## பெயர் மாற்றம்

இலக்கம் 251 தைக்கா வீதி, கல்முனைக்குடி - 7ஐச் சேர்ந்த கனேஷன் சிறிதேவி ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை கனேஷன்“**பாத்திமா சப்னா**” என மாற்றி உள்ளேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

கனேஷன்“**பாத்திமா சப்னா**”

## பெயர் மாற்றம்

வொலிவோரியன் கிராமம், சாய்ந்தமருது - 9ஐச் சேர்ந்த “சந்தன தேசப்பிரிய டீ சில்வா” ஆகிய நான் எனது சொந்த விருப்பத்தின் பெயரில் எனது பெயரை “**சந்தன தேசப்பிரிய முகம்மட் றிஸ்வான்**” என மாற்றி உள்ளேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

“**சந்தன தேசப்பிரிய முகம்மட் றிஸ்வான்**”

## பொது அறிவித்தல்

பின்வரும் கம்பனியின் 2022 மார்ச் 30 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், கம்பனியின் நிலபரத்தை ‘‘வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று’’ என்பதிலிருந்து ‘‘வரையறுக்கப்பட்ட பொது கம்பனியாக’’ 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 8(1) ஆம் பிரிவின் பிரகாரமானது.

முன்னைய பெயர் :
**எக்ஸ்டர்மிநேட்டர்ஸ் லிமிட்டட்**

நிலபர மாற்றம்: எக்ஸ்டர் **மிநேட்டர்ஸ் லிமிட்டட் இலிருந்து எக்ஸ்டர்மிநேட்டர்ஸ் பீஎல்சி**

பதிவெண்: **PB 00248739**

திகதி: **2004.05.24**

முகவரி: **இல. 02, அஸ்கொட் அவென்யு, கொழும்பு-05.**

கம்பனிச் செயலாளர்கள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மீரிகம பிரதேச சபையின் வில்வத்த தகனச்சாலையை இரட்டை தகனச்சாலையாக்குதல் (வடிவமைத்து நிர்மாணித்தல்)

**மாகாண அபிவிருத்தி பிரதான நிதியம் மற்றும் பிரதேச சபை நிதியம் - 2022**

| ஒப்பந்தத்தின் பெயர் | விசேடத்துவம் மற்றும் திறன் | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| மீரிகம பிரதேச சபையின் வில்வத்த தகனச் சாலையை இரட்டை தகனச் சாலையாக்குதல் (வடிவமைத்து நிர்மாணித்தல்) | கட்டிடம் CIDA C5 / C6 | ரூபா 150,000.00 மற்றும் 91 நாட்கள் | 6 மாதங்கள் | 3500.00 |

(02) அட்டவணை
- உத்தேச பகுதியின் விஸ்தீரணம் சுமார் 1000 சதுர அடிகளாகவிருத்தல் வேண்டும்.
- தகன சூளை up draught ஆக இருத்தல் வேண்டும்.
- தகனச்சாலையைச் சுற்றி நடக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.
- புகைபோக்கியின் மேற்பகுதி 40’0’’ பொருட்டு வெள்ளியிரும்பை பயன்படுத்துதல் வேண்டும்.
- Homogeneous Vitreous Porcelain glazed floor tile ஆக இருத்தல் வேண்டும். (ஒன்றின் விலை 1500.00 ரூபா)
- கூரையின் தீராந்தி வெளிப்புறம் தெரியும் வகையில் அஸ்பெஸ்டாஸ் தகடிட்டு கூரைக்கு நிறப்பூச்சு பூசி அமைத்தல் வேண்டும்.
- கட்டிடத்திற்கு இயைபான அத்திவார விபரத்தை பட்டய பொறியியலாளரின் சான்றிதழ் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(03) விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

(04) ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தகைமை, தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தம் கையளிக்கப்படும்.

I. தகனச்சாலை நிர்மாணம் தொடர்பில் குறைந்தபட்சம் 05 வருட கால அனுபவம் விலைமனுதாரரிடம் இருத்தல் வேண்டும்.

II. அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்ட ஒப்பந்தக்காரராக இருத்தல் கூடாது.

III. இயைபுடைய ஆவணங்கள் மூலம் சான்றுபடுத்தப்பட்ட விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி தகவுத் திறனைத் தழுவியவர்கள் மட்டுமே மேற்கொண்டும் மதிப்பிட்டுக்கு உட்படுத்தப்படுவார்கள் என இதன்பொருட்டு ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் அறிந்துகொள்வதற்காக அனுப்பப்படும்.

(05) இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு இயைபான மொத்த திட்டத்தை, கட்டணம் செலுத்தி மற்றும் வேண்டுகோள் கடிதத்துடன் தகைமைகளைச் சமர்ப்பித்ததன் பின் 2022-04-27ஆம் திகதி முதல் 2022-05-10ஆம் திகதி வரை மீரிகம பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அவ்வேளையிலேயே செயற்றிட்டத்திற்கு இயைபான இடத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(06) 77 நாட்கள் வரையில் சகல விலைமனுக்களும் செல்லுபடியாதல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது இலங்கையில் செயற்படும் வங்கியொன்றில் (இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட) பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய தொகையை மீரிகம பிரதேச சபையில் வைப்புச் செய்வதானால் சபையின் பிரதான அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(07) உரிய வகையில் இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறாக முத்திரைக் குறி பொறித்த உறையில் இட்டு பின் மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து 2022-05-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மீரிகம பிரதேச சபையின் செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022-05-11ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

(08) பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**மீரிகம பிரதேச சபை, மீரிகம.**
**தொலைபேசி இல. 033-2273206, 033-2273282, 033-2267356**
**தொலைநகல்: 033-2273282**

# தேசிய மெய்வல்லுநரில் சுமேத, நிலானி சிறந்த வீரர்களாக தெரிவு




100 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் அதி சிறந்த மெய்வல்லுநர் வீரராக ஈட்டி எறிதல் வீரர் சுமேத ரணசிங்கவும், அதி சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனையாக 3000 மீற்றர் தடைதாண்டல் வீராங்கனையான நிலானி ரத்னாயக்கவும் தெரிவாகினர்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக 100 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் கடந்த 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இந்தப் போட்டித் தொடரின் முதலிரண்டு நாட்களுக்கான அனைத்து போட்டிகளும் வெற்றிகரமாக நடைபெற்றது. எனினும், போட்டியின் கடைசி நாள் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட குறித்த தினத்தில் நடைபெறவிருந்த 12 போட்டி நிகழ்ச்சிகளின் இறுதிப் போட்டியை (23) நடத்துவதற்கு இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடவடிக்கை எடுத்தது.

இதன்படி, 100 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் எஞ்சிய போட்டிகள் மற்றும் போட்டித் தொடரின் இறுதி பரிசளிப்பு வைபவம் என்பன (23) தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் பங்குகொண்ட சுமேத ரணசிங்க, 82.18 மீற்றர் தூரத்தை எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் அதி சிறந்த மெய்வல்லுநர் வீரராகவும் அவர் தெரிவாகினார்.

பெண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற நிலானி ரத்னாயக்க, இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் அதி சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனையாக தெரிவாகினார். ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் எச். குமார (3 நிமி.48.34 செக்.), ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் சமல் குமாரசிறி (16.40 மீற்றர் – புதிய போட்டிச் சாதனை), ஆண்களுக்கான உயரம் பாய்தலில் குமார (2.15 மீற்றர்), பெண்களுக்கான உயரம் பாய்தலில் பெர்னாண்டோ (1.68 மீற்றர்), பெண்களுக்கான குண்டு எறிதலில் தாரிகா பெர்னாண்டோ (13.28 மீற்றர்), பெண்களுக்கான முப்பாய்ச்சலில் எச். குரே (12.89 மீற்றர்), பெண்களுக்கான ஈட்டி எறிதலில் நதீகா லேகம்கே (55.03 மீற்றர்) தங்கப் பதக்கங்களை வென்றனர். ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அருண தர்ஷனவும், பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தருஷி கருணாரத்னவும் தங்கப் பதக்கங்களை சுவீகரிக்க, ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சமோத் யோதசிங்கவும், பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமாஷா டி சில்வாவும் தங்கப் பதக்கங்களை வென்று அசத்தினர். 100 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் மூன்று இலங்கை சாதனைகளும், இரண்டு போட்டிச் சாதனைகளும், இரண்டு கனிஷ்ட தேசிய சாதனைகளும் முறியடிக்கப்பட்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

## 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் சம்பியன் பட்டம் வென்றவர் தற்கொலை



இலங்கை 400 மீற்றர் தடைதாண்டல் சம்பியனான மதுஷானி (வயது 25) தும்மலசூரியவில் உள்ள தனது வீட்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார் மற்றும் பல 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வென்றுள்ளார்.

2014 ஆசிய இளையோர் சம்பியன்ஷிப் 400 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும், 2016 தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் வெண்கலப் பதக்கமும், 2016 தேசிய சம்பியன்ஷிப் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் தங்கப் பதக்கமும், 13வது சம்பியன்ஷிப்பில் வெள்ளிப் பதக்கமும் வென்றார். தும்மலசூரிய பொலிஸார் மேலதிக இவர் குளியாப்பிட்டிய மத்திய கல்லூரியின் பழைய மாணவியாவார். விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ அனுதாபம் தெரிவித்துள்ளார்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..................................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :..................................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :..................................
வாக்களித்தவர் பெயர் :..................................
முகவரி :..................................
மொபைல் இல. :..................................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 30-04-2022 இல. 05











யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையிலான 115 ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப்போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி 99 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

## மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் அணியில் அப்னாஸ்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மட்ட 19 வயதுக்குற்பபட்ட அணிக்கான தெரிவில் காவத்தமுனை அல் அமீன் வித்தியாலய மாணவனும் ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக்கழக வீரருமான அப்னாஸ் மட்டக்களப்பு மாவட்ட 19 வயதுக்குற்பட்ட அணிக்கான தேர்வில் சிறப்பாக செயற்பட்டு மாவட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.